முதற் பதிப்பு : நவம்பர், 1956
உரிமை பதிப்பகத்தார்க்கே

விலை ரூ.
2—0—0

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை 5.

# முன்னுரை

மேனாட்டு அறிஞரான *சார்லஸ் டிக்கன்ஸ்* (Charles Dickens) என்பவர் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த பிரஞ்சுப் புரட்சியை நிலைக்களனாகக் கொண்டு இயற்றியுள்ள 'இரு நகரக் கதை' (A Tale of Two Cities) என்னும் இலக்கிய மதிப்புடைய அரியதொரு கற்பனைக் கதையைத் தழுவி எழுந்ததே இச் சிறு நூல்.

இது மொழிபெயர்ப்பு நூலன்று; மூல நூலின் கதைப் போக்கை மட்டும் கருத்திற் கொண்டு, முக்கிய நிகழ்ச்சிகள் விரவி வர, வேண்டும் மாறுதல்களுடன் சுருங்கிய அளவில் எழுதப்பட்டதாகும்.

மாணவர்கள் அறிந்து மகிழ்தற்குரிய வகையில் அமைக்கப்பட்டுள்ள இந் நூலில், மூலநூலின் முழுப்போக்கையும் காணவியலாது; ஆனால் முக்கிய நலத்தை உணர்ந்து இன்புறலாம். மாணவர் நலங் கருதி ஆங்கிலப் பெயர்கள் முதலியவை தமிழகத்தை நினைவுகூரும் வகையில் குறிக்கப்பட்டுள்ளன.

மணவாளன் என்பவன், தான் காதலித்த மலர்விழி என்னும் மங்கையின் நல்வாழ்வுக்காக அவள் கணவனை மீட்கக் கருதித் தன் உயிரையே அளிக்கத் துணிகிறான். மிகவுயர்ந்த அச்செயல் இக்கதைக்கே உயிர்நாடியாக மிளிர்கிறது. அதனை '*அன்பின் அருஞ்செயல்*' எனலாம்.

எனது முயற்சிக்கு ஊக்கந்தந்து உறுதுணையாய் இருந்துவரும் கெழுதகை நண்பர் *வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார்* அவர்களுக்கும், உழுவலன்பர் *உயர்திரு. செ. மெ. பழனியப்ப செட்டியார்* அவர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

இளைஞர் உலகம் இதனை விரும்பி வரவேற்குமென்று நம்புகிறேன்.

திி. சி. கு.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | தபால் வண்டி | ... | 1 |
| 2. | அம்பலவாணரும் மலர்விழியும் | ... | 6 |
| 3. | டாக்டர் மருதவாணர் | ... | 11 |
| 4. | மதிவாணன்மீது வழக்கு | ... | 17 |
| 5. | மதிவாணனும் மணவாளனும் | ... | 30 |
| 6. | செல்வநாயகம் பிரபு | ... | 36 |
| 7. | வீரப்பனின் வஞ்சம் | ... | 44 |
| 8. | மதிவாணனின் அன்பு | ... | 54 |
| 9. | மணவாளனின் மனநிலை | ... | 62 |
| 10. | வளவனும் அல்லியும் | ... | 71 |
| 11. | மலர்விழியின் மணம் | ... | 84 |
| 12. | மணவாளனின் வேண்டுகோள் | ... | 89 |
| 13. | காலடி ஓசைகள் | ... | 95 |
| 14. | சிறைமீட்கச் சென்றான்! | ... | 101 |
| 15. | விடுதலையும் சிறையும் | ... | 109 |
| 16. | மணவாளனின் மறைமுக ஏற்பாடு | ... | 120 |
| 17. | மருதவாணரின் வரலாறு | ... | 131 |
| 18. | இருளும் ஒளியும் | ... | 138 |
| 19. | அன்பின் அருஞ்செயல் | ... | 145 |

# அன்பின் அருஞ்செயல்

## 1. தபால் வண்டி

இரவு பத்து மணிக்குமேல் இருக்கும். மணிபுரி நகரெங்கும் இருள் கவிந்திருக்கிறது. தெருவிளக்குகள் மங்கலாக ஒளிவீசிக்கொண் டிருக்கின்றன. நகரில் மக்களின் நடமாட்டம் ஓய்ந்து விட்டது. மாலையில் மழை பெய்திருந்ததால் தரையெல்லாம் சேருயிருக்கிறது. மணிபுரியிலிருந்து தொண்டி என்னும் துறைமுகத்தை நோக்கிச் செல்லும் சாலையில் தபால் வண்டியொன்று அசைந்தசைந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

வண்டிக்காரன் குளிருக்காகக் கம்பளிச் சட்டை அணிந்து கொண்டு முன்னுல் உட்கார்ந்து, ‘ ஹை, ஹை ’ என்று அதட்டிக் குதிரையை ஓட்டிக்கொண்டிருக்கிருன்; வண்டிக் காவலன் தன் இடையில் சொருகியுள்ள கைத்துப்பாக்கியைப் பிடித்த வண்ணம்

பின்னுல் அமர்ந்திருக்கிருன்; உள்ளே மூன்று பிரயாணிகள் தங்கள் உடல் முழுவதையும் மறைத்த உடுப்புக்களுடன் ஒடுங்கியுள்ளார்கள்.

1775-ஆம் ஆண்டு, நவம்பர் மாதக் கடைசி வெள்ளிக்கிழமையன்று இரவில் செல்லும் இவ் வண்டியில் உள்ள ஐவரும் ஒருவரோடு ஒருவர் பேச வில்லை; ஒருவரை யொருவர் பார்க்கவுமில்லை; நம்பவு மில்லை! ஏன்? ஒவ்வொருவரும் தம்மைத்தவிர மற்ற வர் திருடராய் இருக்கலாமென்று ஐயுற்றனர்; சாலையின் எதிரே ஒருவன் வரக் கண்டால் அவன் திருடனுயிருப்பானே என்று நடுங்கினர். அதனுல் வண்டிக் காவலன் அடிக்கடி தன் கைத்துப்பாக்கியை வெளியே எடுப்பதும் வைப்பதுமாய் இருந்தான். வண்டியிலிருந்த அனைவரும் தங்களுக்கு எந்த நொடியில் என்ன ஆபத்து நேருமோ வென்று அச்சம் குடிகொண்ட உள்ளத்தினராய் இருந்தனர். ஆனுல், வண்டியோட்டி மட்டும் தன் உடல் நடுக்கத்திற்குக் காரணம், குளிர் மிகுதிதான் என்று பலமுறை சொன்னுன்!

அக்காலத்தில் நெய்தல் நாட்டின் அரசாட்சி மிகவும் சீர் கெட்டிருந்தது. அதனுல், தலைநகரான மணிபுரியில் இரவானதும் கொள்ளை, கொலை முதலிய கொடுஞ்செயல்கள் நடைபெறுவது மிகவும் சாதாரண மாயிருந்தது. பகலில் ஒழுங்காக வாணிகமோ, தொழிலோ செய்து வாழ்பவன் இரவில் கொள்ளைக் காரனுக மாறிவிடுவான்! இந் நிலையில் இரவில் பயணம் செய்வோர் தங்கள் உயிருக்கும் உடைமைக்

கும் ஆபத்து நேருமோ வென்று அஞ்சி நடுங்குவதில் அதிசயமில்லை யன்றோ?

தபால் வண்டி மேடான வழியில் ஏறத் தொடங்கியது. காலின் குளம்புகள் சேற்றில் புதைய, வாயில் நுரைதள்ள, குதிரை மிக்க முயற்சியுடன் வண்டியை இழுத்துக்கொண்டு மேட்டில் ஏறுகிறது. அப்பொழுது பின்னுல் விரைந்து வரும் குதிரையின் காலடியோசை கேட்டு வண்டியிலிருந்தோர் யாவரும் திடுக்கிட்டனர். வண்டிக் காவலன் கைத் துப்பாக்கியை எடுத்து நீட்டிப் பிடித்துக் கொண்டான். சிறிது நேரத்தில் குதிரை நெருங்கி வந்துவிட்டது. அதில் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் வண்டிக் காவலன், "அருகில் வராதே! கையில் துப்பாக்கி இருக்கிறது! சுட்டுவிடுவேன்! நீ யார்? விரைவில் சொல்!" என்று கத்திஞன்.

தபால் வண்டி சமதரையில் ஏறி நின்று விட்டது. குதிரையில் வந்தவன் கயிற்றை இழுத்துப் பிடித்துக் குதிரையை நிறுத்தி, "இது தபால் வண்டியா?" என்று பரபரப்புடன் கேட்டான்.

"ஆமாம். உனக்கு என்ன வேண்டும்? உடனே சொல்!"

"இவ் வண்டியில் அம்பலவாணர் என்ற பெரியவர் ஒருவர் பயணம் செல்கிருர். அவரிடம் நான் ஒரு செய்தியைத் தெரிவிக்க வேண்டும்."

"நீ கூறுவது உண்மையானுல் வண்டியிலுள்ள பெரியவர் பேசுவார். அங்கேயே நில்!"

வண்டிக் காவலன் இவ்வாறு சொல்லிவிட்டு உள்ளே பார்த்தான். பிரயாணிகள் மூவரில் வயது முதிர்ந்த ஒருவர் நிமிர்ந்து உட்கார்ந்து, “யார் என்னைத் தேடுபவர்? பொன்னையாவா? என்று வினவினர்.

“ஆம், ஐயா! வணக்கம். அழகப்பா பாங்கிலிருந்து செய்தி கொண்டுவந்திருக்கிறேன்” என்றான் குதிரைமேலிருந்தவன்.

உடனே அம்பல வாணர் என்ற பெரியவர் வண்டிக் காவலனை நோக்கி, “ஐயா காவலரே இவனை எனக்குத் தெரியும். இவன் வண்டியருகில் வருவதில் தவறில்லை” என்று நயமாகக் கூறினர். அதற்குள் குதிரைக்காரன் நெருங்கி வந்தான்.

வண்டிக் காவலன், அம்பலவாணர் மொழிகளைப் பொருட்படுத்தாமல் துப்பாக்கியைக் குதிரைக்காரனை நோக்கி நீட்டிப் பிடித்தான். அம்பலவாணர், “ஐயா! நான் மணிபுரியிலுள்ள அழகப்பா பாங்கைச் சேர்ந்தவன்; ஒரு வேலையை முன்னிட்டு இன்பபுரிக்குச் செல்கிறேன். இவன் அழகப்பா பாங்கில் அலுவல் செய்பவன். இவனைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை” என்று காவலனை நோக்கி மீண்டும் தெரிவித்தார்.

“அப்படியானல் விரைவில் பேசி இவனை அனுப்புங்கள்!” என்றான் வண்டிக் காவலன்.

குதிரைக்காரன் அருகில் வந்து ஒரு கடிதத்தை அம்பலவாணரிடம் அளித்தான். அவர் அதைப் பிரித்து வண்டியின் விளக்கொளியில் படித்தார்:

'குமாரி மலர்விழி தொண்டிக்கு வருகிருள். அவளுக்காகத் தொண்டியில் காத்திருக்கவும்' என்ற செய்தியைப் படித்ததும், "பொன்னேயா, 'காத்திருக்கிறேன்' என்று போய்ச் சொல்" என்று கூறி விடை கொடுத்து அனுப்பினுர். பொன்னேயன் குதிரையைத் திருப்பிக் கொண்டு புறப்பட்டான். தபால் வண்டியும் புறப்பட்டது.

தபால் வண்டி தொண்டியை அடைந்த பொழுது அதில் அம்பலவாணர் என்ற ஒரு பிரயாணி மட்டுமே இருந்தார்; மற்ற இரு பிரயாணிகளும் நடுவழியில் இறங்கிப் போய் விட்டனர்.

அம்பலவாணர் வண்டியை விட்டிறங்கி, அங்கிருந்த இந்திரா உணவு விடுதியை யடைந்து தமக்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறையில் தங்கினுர். உடனே வேலேயாள் ஒருவன் வந்து, "ஐயா, சிற்றுண்டி ஏதேனும் கொண்டு வரலாமா?" என்று பணிவுடன் கேட்டான்.

"சிற்றுண்டி ஒன்றும் வேண்டாம். பால்மட்டும் கொண்டுவா. நாளேக்காலேயில் கொற்கைக்கு ஒரு படகு புறப்படுகிறதல்லவா?" என்ருர் அம்பலவாணர்.

"ஆம்; காலே பத்து மணிக்கு ஒரு படகு புறப்படவிருக்கிறது. உங்களுக்குப் படுக்கை ஏற்பாடு செய்ய வேண்டுமா?" என்ருன் பணியாள்.

"மணி ஒன்றுக்கு மேல் ஆய்விட்டது. இனி நான் படுக்கப் போவதில்லே. ஆயினும் ஒரு தனி

யறை தயார் செய்" என்று அம்பலவாணர் கட்டளை யிட்டார்.

பணியாள் போய்விட்டான். அம்பலவாணர் நாற்காலியில் அமர்ந்தவாறே கண்மூடிப் பதுமை போல் அசைவற்றிருந்தார். வேலையாள் பால் கொண்டுவந்ததும் விழித்துக்கொண்டார். பாலைப் பருகிய பின்னர். "இங்கு ஒரு இளம் பெண் வருவாள். 'அம்பலவாணரைப் பார்க்கவேண்டும்' என்றுவது, 'அழகப்பா பாங்கிலிருந்து வந்துள்ள பெரியவரைப் பார்க்கவேண்டும்' என்றுவது சொல்வாள். உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். அவளுக்குத்தான் தனியறை தாயார் செய்யச் சொன்னேன்" என்று பணியாளை நோக்கிக் கூறினர். அவன் சரியென்று போய்விட்டான்.

## 2. அம்பலவாணரும் மலர்விழியும்

மறுநாட்காலையில் பணியாள் வந்து, "ஐயா! நீங்கள் தெரிவித்த பெண் வந்து அறையில் இருக்கிருள்; உங்களைக் காண விரும்புகிருள்" என்று அறிவித்தான். உடனே அம்பலவாணர் எழுந்துபோய் அந்நங்கையைக் கண்டு, "வா அம்மா! நாற்காலியில் உட்கார். உன்னைப் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார். பதினேழு வயதுள்ள அழகிய அந் நங்கையைக் கண்டதும் அம்பலவாணரின் உள்ளத்தில் பழைய நினைவொன்று ஓடி மறைந்தது.

மலர்விழி என்ற அந் நங்கை மற்ெருரு நாற் காலியில் அமர்ந்து, "ஐயா, அழகப்பா பாங்கியி லிருந்து நேற்று ஒரு கடிதம் கிடைத்தது. அதில் என் தந்தையின் சொத்துக்களைப் பற்றிய செய்திகள் குறிப்பிட்டிருந்ததோடு, அதன் பொருட்டு இன்ப புரிக்குச் சென்று தங்களைக் கண்டு பேசவேண்டியது இன்றியமையாததாகும் என்றும் குறிப்பிட்டிருந்தது. நான் தனிமையானவள்; ஆதரவற்றவள். ஆகை யால் என்னைத் தங்களுடன் அனுப்பவேண்டுமென்று பாங்குக்கு எழுதினேன். அதனுல்தான் ஓர் ஆளைத் தங்களுக்கு அனுப்பி எனக்காக எதிர்பார்த்திருக்கச் செய்தி யனுப்பினுர்கள். நான் என் தந்தையைப் பார்த்ததில்லை. அவர் இறந்துவிட்டார் என்றே எண்ணி யிருக்கிறேன். ஆயினும், அவரைப் பற்றிய செய்திகளை அறிய ஆவலாயிருக்கிறேன்" என்று கூறி அம்பலவாணரின் முகத்தை ஏக்கத்துடன் நோக்கினுள்.

"அம்மா மலர்விழி! நான் விடியற்காலையில் பட கேறிச் செல்லலாமென்ற எண்ணத்தால் இரவே புறப்பட்டு வந்தேன். உன் செய்தி வரவும் தங்கி விட்டேன். நான் அழகப்பா பாங்கின் பொறுப்பா ளர்களில் ஒருவன். எங்களிடம் பலர் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொண் டிருக்கின்றனர். அவர் களில் ஒருவரைப் பறறிய பொறுப்பு எனக்கு ஏற்பட் டிருக்கிறது. அவருடைய வரலாற்றை இப்பொழுது உனக்குச் சொல்லப் போகிறேன்..."

" என்ன ! வரலாரு?

"ஆம், அம்மா! பொறுமையாய்க் கேள்: அவர் மருதநாட்டைச் சேர்ந்த நாஞ்சில் நகரத்தில் பிறந்தவர்; நெய்தல் நாட்டுப் பெண்ணை மணந்து கொண்டார். இருபது ஆண்டுகளுக்கு முன்னே யிருந்து அழகப்பா பாங்கில் அவருக்குத் தொடர்புண்டு. எனக்கு அவரிடம் நெருங்கிய பழக்கமுண்டு. அதனால் தான் எனக்கு இந்தப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது."

மலர்விழி பரபரப்புடன் குறுக்கிட்டாள்: "ஐயா! இது என் தந்தையின் வரலாறல்லவா? எனக்குப் பழைய நினைவு வருகிறது. மருதநாட்டில் என் தந்தைக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டது. அக் கவலையால் என் தாய் இறந்துபோனாள். நான் ஆதரவற்றவளானேன். இப்பொழுது உங்களைப்பற்றிக்கூட எனக்கு நினைவு வருகிறது. ஆதரவற்றிருந்த என்னை நீங்கள் தானே மருதநாட்டிலிருந்து இந்நெய்தல் நாட்டிற்கு அழைத்து வந்தீர்கள்? இல்லையா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

'ஆம்' என்று தலையசைத்த அம்பலவாணர் மலர்விழியை நோக்கிய வண்ணம் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். பிறகு புன் முறுவலுடன் "அம்மா! நீ சிறுமியாயிருந்த பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நன்றாய் நினைவில் வைத்திருக்கிறாய். நான் ஏதோ உனக்கு உதவி செய்தேன் என்பது உண்மைதான். ஆனால் அழகப்பா பாங்கின் பொறுப்பிலேயே அதைச் செய்தேன். நீ இதுவரையில் அழகப்பா பாங்கின் ஆதரவிலேயே வளர்ந்திருக்கிறாய். எனக்குப் பாங்கின் பொறுப்புக்கள் அதிகம்.

தூங்கவும் நேரமிருப்பதில்லை. அதனுலேயே உன்னை இன்று வரையில் பார்க்க முடியாமற் போய்விட்டது. ஆயினும் உன் நலத்தைப்பற்றிய ஏற்பாடுகளை மட்டும் அவ்வப்பொழுது கருத்தில் கொண்டு செய்து வந்திருக்கிறேன். உன் தந்தை மருதவாணர் என் அன்புக்குரிய நண்பர்" என்ருர்.

"ஐயா! என் தந்தையைப்பற்றிய செய்தியைச் சொல்லுங்கள். அவருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டது? இப்பொழுது உயிருடன் இருக்கிருரா?"

"அம்மா, மலர்விழி! உன் தந்தையின் செய்தியைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். உன் தாய் இறக்கும்பொழுது, நீ வளர்ந்து பெரிய பெண்ணுனதும் உன் தந்தையின் நிலைமையைத் தெரிவித்து உன்னைத் துக்கத்தில் ஆழ்த்த வேண்டாமென்றும், நீ கவலையின்றி வளரவேண்டுமென்றும் தெரிவித்தாள். நான் உன்னைப் பார்க்காமலிருந்ததற்கு இதுவும் ஒரு காரணம். உன் தந்தைக்குப் பெருஞ் செல்வமில்லை. இருந்த சிறு தொகையைப் பாங்கில் போட்டுப் பெருகச் செய்திருக்கிறேன்."

"ஐயா! நான் என் தந்தையைப்பற்றி யறிய ஆவலுடன் கேட்கிறேன். நீங்கள் வேறு ஏதோ சொல்லி வளர்க்கிறீர்களே! அருள் கூர்ந்து உண்மையைச் சொல்லுங்கள்."

"மலர்விழி! உன் ஆவல் எனக்குத் தெரிகிறது. உன் தந்தை உயிருடன் இருக்கிருர். அவர் இப்பொழுது மிகவும் மாறியிருக்கவேண்டும். இன்பபுரியில் பழைய வேலையாள் ஒருவனின் வீட்டில் அவர்

இருக்கிறர். அவரைப் பார்க்கவே நாம் இப்பொழுது போகிறேம்.''

''என்ன! உயிருடன் இருக்கிறரா! என் தந்தையைப் பார்க்கப் போகிறேனு!''—இவ்வாறு கூறியதும் மலர்விழி உட்கார்ந்த நிலேயிலேயே மயக்கமடைந்து விட்டாள். அம்பலவாணர் திடுக்கிட்டு விரைவாக எழுந்து, தண்ணீர் கொண்டு வரும்படி கத்திஞர். மறுநொடியில் பருத்த உடம்பினளாகிய முதியவள் ஒருத்தி தண்ணீர்க் குவளேயுடன் ஓடிவந்து மலர் விழியின் முகத்தில் நீரைத் தெளித்துத் துடைத்து விட்டாள். பிறகு அவளேத் தூக்கிப் படுக்கையில் வைத்துப் படுக்கச் செய்தாள். மலர்விழி கண்விழித்து மருண்ட பார்வையில் அம்பலவாணரையும், தன் செவி லித்தாயான பெரியநாயகி என்னும் அம் முதிய வளேயும் பார்த்தாள்.

பெரியநாயகி அம்பலவாணரை நோக்கி, ''ஏனேயா ! இவளுக்குச் சொல்லவேண்டிய செய்தியைப் பய முறுத்தாமல் சொல்லமுடியாதோ?'' என்று சினக் குறிப்புடன் கேட்டாள்.

''பெரியநாயகி! நான் எவ்வளவோ நிதானமாகத்தான் செய்தியைத் தெரிவித்தேன். என்மீது குற்றமில்லே. இது நான் எதிர்பார்த்ததுதான். மலர் விழியுடன் நீயும் இன்பபுரிக்கு வரப்போகிருயா?''

''கடல் கடந்து செல்ல நான் வரவில்லே. தொண்டி வரையில் துணேயாகவே வந்தேன். நீர் என் கண்மணியைப் பயமுறுத்தி மயக்கமடையச்

செய்துவிட்டதைப் பார்த்த பிறகு, மணிபுரிக்குத் திரும்பிச் செல்லவே எனக்கு மனமில்லை."

பெரிய நாயகியுடன் அதற்குமேல் பேச விரும்பாத அம்பலவாணர், மலர்விழியை நன்கு கவனித்துக் கொள்ளும்படி தெரிவித்துவிட்டுத் தமது அறையையடைந்தார்.

## 3. டாக்டர் மருதவாணர்

மணிபுரியின் ஒரு பால் அமைந்துள்ள தொண்டியென்னும் துறைமுகம் எழில் மிகுந்த நகராய் இலங்கியது. இதன் எதிர்க் கரையில் விளங்கும் மருத நாட்டின் துறைமுகமான **கொற்கைக்கு** இங்கிருந்து கடல் கால்வாயில் அடிக்கடி படகுகள் செல்வதுண்டு. கடலால் பிரிக்கப்பட்டிருந்த இவ்விரு நாடுகளையும் இணைக்கும் ஒற்றுமைச் சங்கிலித் தொடர் போல் விளங்கின, இப்படகுகள்.

அம்பலவாணர் குறிப்பிட்ட நேரத்தில் மலர்விழியை அழைத்துக்கொண்டு போய்ப் படகில் ஏறினார். பெரியநாயகி, மலர்விழியை அதிகமாய்ப் பயமுறுத்த வேண்டாமென்று அம்பலவாணரிடம் தெரிவித்தாள். அம்பலவாணர் நகைமுகத்துடன் தலையசைத்துச் சரியென்றார். படகு புறப்பட்டதும் பெரியநாயகி திரும்பிச் சென்றாள்.

அம்பலவாணரும் மலர்விழியும் இன்பபுரியையடைந்த பொழுது பிற்பகல் ஆய்விட்டது. இருவரும் ஒரு தேநீர்க் கடைக்குள் நுழைந்து, சிற்றுண்டி

யருந்தித் தேநீர் பருகினர். கடை முதலாளி யமரும் இருக்கையில் பெருமிதத் தோற்றமுடைய பெண்மணி ஒருத்தி வீற்றிருந்தாள். கழுகு போன்ற கூரிய பார்வையும் உறுதியான உடலும் கொண்ட அவள் தன் கையில் பின்னல் வேலை செய்வதற்குரிய ஊசியும் நூலும் வைத்திருந்தாள். கடைக்குள் வருவோர் போவோரைக் கவனிக்காதவள் போல் காணப்பட்டாலும், அவள் ஒவ்வொருவரையும் உய்த்துணரும் திறம் படைத்தவள் என்பதை அவளுடைய ஒளிவீசும் கண்கள் உணர்த்தின.

அம்பலவாணரின் கண்கள் யாரையோ தேடுவது போல் நாற்புறமும் சுழன்று திரிந்தன. அப்பொழுது உள்ளே நுழைந்த ஒருவனைக் கண்டதும் அவன்மீது பதிந்து நின்று விட்டது, அவர் பார்வை. உள்ளே நுழைந்தவன் இருக்கையிலிருந்த பெண்ணிடம் போய், "அல்லி! இன்று புதிய செய்தி ஒன்றுமில்லையே!" என்று மெல்லக் கேட்டான். அவள் மறு மொழி ஒன்றும் கூருமல் புருவத்தை நெறித்தாள்; அக் குறிப்பை யறிந்த கடை முதலாளியாகிய அவன், நாற்புறத்திலும் தன் பார்வையைச் செலுத்தினன். அம்பலவாணரைக் கண்டதும் திகைத்து அவரையே உற்று நோக்கினன். அம்பலவாணர் மலர்விழியுடன் எழுந்து அவனிடம் வந்து, "ஐயா, வளவன் என்பவர் நீங்கள் தானே ? உங்களிடம் தனியாகப் பேச விரும்புகிறேன்" என்ருர்.

வளவன் வியப்புடன், "ஆம், ஐயா ! நான்தான் வளவன். வாருங்கள் போவோம்" என்று இருவரை

யும் அழைத்துக் கொண்டு வெளியேறினன். அம்பல வாணர் அவனிடம் ஏதோ தெரிவித்தார். உடனே அவன் முகம் மலர்ந்தது. மலர்விழியை நோக்கி அன்புடன் வணக்கம் செய்தான். பிறகு அவன் மகிழ்ச்சியுடன் இருவரையும் அழைத்துக் கொண்டு சிறிது தூரம் சென்று ஒரு வீட்டை யடைந்து மேன் மாடிப் படியில் ஏறினன். அம்பலவாணர் அவனைத் தொடர்ந்து சென்ருர் ; மலர்விழி சிறிது பின்தங்கி நடந்தாள். வழி குறுகலாயும் தூய்மை யற்றுத் தூசு படிந்தும் இருந்தது. வெளிச்சம் போதுமான தாயில்லை.

அம்பலவாணர் மெதுவாக "அவர் தனியாகவா இருக்கிருர் ?" என்று கேட்டார்.

"ஆமாம். அவருடன் வேறு யார் இருக்கமுடியும் ?" என்ருன் வளவன்.

"தனியாய் இருப்பதையா விரும்புகிருர் ?"

"ஐயோ ! அவர் விரும்புகிருரா ? அவசியத்தால் தனியாய் இருக்கிருர் !"

"ஏன், மிகவும் மாறிப் போயிருக்கிருரோ ?"

"ஆ ! எவ்வளவு மாறிப் போயிருக்கிருர் ! என் பழைய எசமானின் இந்த நிலைமைக்கு நான் மிகவும் வருந்துகிறேன். உங்களைப் பார்த்தால் அடையாளம் தெரிந்து பேசுவார் என்று நான் நம்பவில்லை."

படியைக் கடந்து மாடியை யடைந்ததும் வளவன் ஒரு திறவு கோலால் ஓர் அறையின் கதவைத் திறந்

தான். அம்பலவாணர் வியப்படைந்து, " ஏன் பூட்டி யிருக்கிறது ?" என்று கேட்டார்.

" அவருடைய நன்மைக்காகத்தான். எத்தனை ஆண்டுகள் சிறையில் இருந்தார் ! திறந்து வைத் தால் என்ன செய்வாரோ ?"

அம்பலவாணர் திகைப்பும் வியப்பும் அடைந்த வராய் நின்றார். அவர் வாய்திறக்க வில்லை. மெது வாய்ப் பேசிக் கொண்டு வந்ததால் இவர்களின் ஒரு சொல்கூட மலர்விழியின் காதில் விழவில்லை. தந்தை யைக் காணப் போகிறோம் என்ற ஆவலும் பரப்பரப் பும் அவளிடம் மிகுந்திருந்தன. அவள் நெருங்கி வந்ததும், "அம்மா, மலர்விழி ! நிதானம் கொள் ! தைரியமாய் இரு !" என்று அம்பலவாணர் அன்புடன் தெரிவித்தார்.

கதவைத் திறந்ததும் வளவன் உள்ளே நுழைந் தான். பழைய பொருள்களைப் போட்டுவைக்கும் கிடங்கு போலிருந்தது அந்த அறை. அம்பலவாணர் மலர்விழியின் கையைப் பிடித்துக் கொண்டு வள வனைத் தொடர்ந்து உள்ளே போனார். மாலை வேளை யின் மங்கிய ஒளி உள்ளே பரவியிருந்தது. எதிரில் நரைத்த தலையுடைய முதியவர் ஒருவர் மறுபுறம் திரும்பிக் கொண்டு செருப்புத் தைத்துக் கொண்டிருந் தார். அம் முதியவரைக் கண்டதும் அம்பலவாணர் வியப்பில் மூழ்கி அசைவற்று நின்று விட்டார். முகத்தில் கவலைக்குறி படர, அவர் முதியவரையே உற்றுப் பார்த்தவண்ணமிருந்தார். மலர்விழி ஆவலே வடிவாய் அவர் அருகில் நின்றாள். அவள்

கண்கள் முதியவர் மீது பதிந்து நின்றன. வளவன் அவரிடம் சென்று, "வணக்கம்" என்று தலை குனிந்து சொன்னான்.

முதியவர் சிறிது நேரங்கழித்துத் தலை நிமிர்ந்து திரும்பிப் பார்த்து, "வணக்கம்" என்று கூறிவிட்டு மீண்டும் தம் செயலில் ஈடுபட்டார்.

"இந்தச் செருப்பை இன்றே முடித்துவிடப் போகிறீர்களா? இதோ பாருங்கள்! இவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார். இவர் உங்கள் செருப்பை வாங்கிக் கொள்ள விரும்புகிறார்!" என்றான் வளவன். அப்பொழுது அம்பலவாணர் வளவன் அருகில் மெல்லச் சென்று நின்றார்.

"என்ன? என் பெயரா?"

"ஆமாம்."

"நூற்றைந்து! வடகோட்டை!"

நினைவிழந்து பேசும் முதியவரின் மொழிகளைக் கேட்ட அம்பலவாணர் அயர்ந்து போனார். அவர் கூறியது இன்னதென்று யாருக்கும் விளங்கவில்லை. மலர்விழி கண்களில் நீர்மல்க நின்று கொண்டிருந்தாள்.

"டாக்டர் மருதவாணரே! உங்களுக்கு என்னைத் தெரியவில்லையா?" என்று அன்பால் உருகிய உள்ளத்துடன் கேட்டார், அம்பலவாணர்.

மருதவாணர், தம் கையிலிருந்த கருவியைக் கீழே போட்டுவிட்டுத் திரும்பி உட்கார்ந்து விழித்துப்

பார்த்தார். எதிரில் நின்ற இருவரையும் மாறிமாறிப் பார்த்தார்; எட்டி நின்ற மலர் விழியையும் உற்றுப் பார்த்தார். பல ஆண்டுகளாக நிறைவேருத ஆசையாலும் ஏக்கத்தாலும் வாடி வதங்கிப் போயிருந்த அவருடைய முகத்தில் பலவித நினைவின் குறிகள் தோன்றி ஒளி வீசின. முடிவில் மலர்விழியினிடம் அவர் பார்வை நிலைத்து நின்றது. உதடுகள் ஏதோ பேசுவதுபோல் மெல்ல அசைந்தன. "யார் நீ? அவள் இறந்து போய்விட்டாளே! அவள் உருவத்தில் நீ எப்படி வந்தாய்?" என்ற சொற்கள் உணர்ச்சி மிகுதியால் தடுமாற்றத்துடன் மெதுவாக வெளிவந்தன.

கண்ணீர் வழிய நின்றுகொண் டிருந்த மலர்விழி துயரம் பொங்கியெழத் தன் இரு கைகளையும் நீட்டிக் கொண்டு, "அப்பா! நான் உங்கள் மகள்! என்னைத் தழுவிக் கொள்ளுங்கள்!" என்று விரைந்துபோய் உட்கார்ந்து மருதவாணரைக் கட்டிக்கொண்டு கண்ணீரைப் பெருக்கிஞள். மருதவாணரும் அவளை அன்புடன் தழுவிக்கொண்டு கண்ணீர் வடித்தார். உள்ளமுருக்கும் அக் காட்சியைக் கண்ட மற்ற இருவரும் மெய்மறந்து நின்றனர். சிறிதுநேரம் வரையில் அவ்வறையில் அமைதி நிலவியது.

அம்பலவாணர் வளவனை நோக்கி, "மகளைக் கண்டதும் மருதவாணருக்குத் தன்னினைவு வந்துவிட்டது. இது மகிழ்ச்சிக் குரியது. இந் நிலையில் இவரை இப்பொழுதே அழைத்துக்கொண்டு போவது நல்லதென்று நினைக்கிறேன். மகளுடன் வாழ்ந்து வந்தால் முற்றும் மாறிப் பழைய நன்னிலை அடைந்து

விடுவார் என்பதில் தடையில்லை" என்று தெரிவித்தார். வளவன் சரி யென்ருன்.

கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களை வீசி உலகப் பொருள்களையெல்லாம் செந்நிறமாகத் திகழச் செய்துகொண்டு மேற்குக் கடலில் மறைய விரைந்து செல்கிருன். அப்பொழுது கொற்கைத் துறைமுகத்திலிருந்து தொண்டியை நோக்கிச் செல்லும் படகு ஒன்றில் அம்பலவாணர், மருதவாணர், மலர்விழி மூவரும் பயணம் செய்துகொண்டிருந்தனர்.

## 4. மதிவாணன்மீது வழக்கு

முற்கூறிய நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் ஐந்து ஆண்டுகள் கழிந்தன. மணிபுரியிலுள்ள நீதி மன்றத்தில் ஒரு நாள் முற்பகல் வேளையில் மக்கள் கூட்டம் நிரம்பியிருந்தது. உள்ளே வழக்கறிஞர்களும் அலுவலர்களும் தத்தம் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். அம்பலவாணர், மருதவாணர், மலர்விழி ஆகிய மூவரும் ஒரு பக்கம் அமர்ந்திருந்தனர். மக்கள் பேச்சிலிருந்து ஏதோவொரு முக்கிய வழக்கொன்று நடைபெறப் போவதாகத் தெரிந்தது. வழக்கின் விசாரணையை அறியும் ஆவலுடனேயே மக்கள் திரளாகக் கூடியிருக்கின்றன ரென்றும் தெரிந்தது.

அக்காலத்தில் நெய்தல் நாட்டிற்கும் மருதநாட்டிற்கும் ஆட்சியாளர்க்குள் பகைமையுணர்ச்சி இருந்து வந்ததால், நீதி மன்றங்களில் அரசத் துரோக வழக்குகள் அடிக்கடி நடைபெறுவது வழக்கமாய் விட்டது. வாழ்க்கையின் பொருட்டு மணிபுரிக்கு வந்திருந்த

மருதநாட்டினர் பலர் அரசத் துரோகிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு வந்ததே அதற்குக் காரணம். அதனல் குற்றமற்ற சிலர் கொடுந்தண்டனைகளை அடைந்ததும் உண்டு. நீதி, நேர்மையின்றி நடைபெறும் இந் நிகழ்ச்சிகளைக் கண்ட பொது மக்களிற் பலர் ஆட்சியாளரின் முறையற்ற செயலில் வெறுப்புக்கொண்டிருந்தனர். ஆகையால் நீதி மன்றங்களில் நடைபெறும் அரசத் துரோக வழக்குகளைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

நீதிபதி வந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார். உடனே எல்லோரும் கைதிக் கூண்டை நோக்கினர். துப்பாக்கிகளைத் தாங்கிய இருவீரர்கள் கைகளில் விலங்கிடப்பட்ட ஓர் இளைஞனை அழைத்து வந்து கைதிக் கூண்டில் நிறுத்திஞர்கள். அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். வளமான உடற்கட்டும் அழகிய முகமும் படைத்த அவ் விளைஞனைக் கண்ட பலர், "இவனு குற்றவாளி? களங்கமற்ற இவன் முகத்தில் கடுகளவும் குற்றத்தின் அறிகுறி காண வில்லையே!" என்று தமக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டனர்.

வழக்கு விசாரணை தொடங்கியது. நீதிபதி வழக்கின் செய்தியைச் சுருக்கமாய் எடுத்துக் கூறிஞர். 'மதிவாணன் என்ற இளைஞன் மன்னர் ஆட்சிக்கு ஊறு விளைக்கத் திட்டமிட்டுச் செயல் புரிந்திருக்கிருன்; இக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால் மரண தண்டனை விதிக்கப்படும். ஆனுல் கைதி தான் குற்றமற்றவன்

என்று கூறுகிருன்!' இதுதான் நீதிபதி கூறியதி லிருந்து விளங்கியது.

ஆட்சியாளரின் வழக்கறிஞர் எழுந்து நின்று, நடுநிலையாளர்களை நோக்கி, "நடுநிலையாளரான பெரியோர்களே! இதோ நிற்கும் எதிரி, வயதில் சிறிய வனுயினும் குற்றச் செயல்கள் புரிவதில் பெரியவனே யாவான். இவன் பல ஆண்டுகளாக மருதநாட் டுக்கும் நெய்தல் நாட்டுக்கும் அடிக்கடி போய்வந்து கொண்டிருக்கிருன். இவனுடைய அலுவல்களுக்குத் தகுந்த காரணம் கூறமுடியாது. மறைமுகமாகச் செய்யும் செயல்கள் எவ்வளவு காலத்திற்கு வெளியே வராதிருக்க முடியும்? இறைவனருளால், நற் பண்பும் பொதுநலக் கருத்துமுள்ள ஒருவர் எதிரியின் சதிச் செயல்களை யறிந்து, மாட்சி மிக்க மன்னர் மீதுள்ள பற்றிஞல் அவற்றை வெளிப்படுத்த முன்வந்திருக் கிருர். பெருந்தன்மையுள்ள அவர், எதிரியின் ஏவலன் வாயிலாக அறையை ஆராய்ந்து சதிச் செய லுக்கு அடிப்படையான கடிதம் முதலியவற்றைக் கொண்டு வந்திருக்கிருர். அவற்ருல் எதிரி குற்ற வாளி என்பது தெளிவாகத் தெரியும். நமது நாட்டுப் படை வலிமையின் மர்மங்களைப் பகைவர் நாட்டுக்குத் தெரிவிப்பது எவ்வளவு பெரிய குற்றமென்பதை நான் எடுத்துரைக்க வேண்டுவதில்லை. ஆகையால், மன்ன ரிடம் பற்றுள்ள நீங்கள் அவர் ஆட்சியைக் காக்கும் பொறுப்பை யுணர்ந்து எதிரியைக் குற்றவாளி யென்று முடிவு செய்வீர்களென்று நம்புகிறேன் எனக் கூறியமர்ந்தார்.

பிறகு, வழக்கறிஞர் குறிப்பிட்ட பெருந்தன்மை யுள்ள (!) மனிதர் விசாரிக்கப்பட்டார். அவர் பெயர் **நாகப்பன்** என்பதாகும். எதிரியின் வழக்கறிஞரான **கண்ணப்பர்** என்பவர் எழுந்து அவரை நோக்கிச் சில கேள்விகள் கேட்டார்:

" உமக்குத் தொழில் என்ன? "

"எனக்குச் செல்வமிருக்கிறது. தொழில் ஒன்றும் கிடையாது."

"உமது செல்வம் எங்கேயிருக்கிறது? எவ்வளவு இருக்கிறது?"

"அதைப்பற்றி எனக்குச் சரியாக நினைவில்லை."

" ஒற்றராக இருந்தது உண்டா?"

" கிடையாது. அது மிகவும் இழிவான தொழி லல்லவா?"

" இந்த நாட்டில் செல்வாக்குள்ள ஒருவரிடம் ஊதியம் பெற்றுக்கொண்டு ஆட்சியலுவலகங்களிலும் நீதி மன்றத்திலும் நடைபெறும் மறைமுகமான செயல்களை உளவறிந்து போய் நீர் தெரிவிப்பது இல்லை?"

"இந்நகரில் செல்வாக்குள்ள அவர் எனக்கு மிக வேண்டியவர். என்னிடமுள்ள அன்பால் எனக்குப் பணம் கொடுப்பதுண்டு. அதனுல் இந்தக் கற்பனை தோன்றியிருக்கிறது போலும்!"

" அது போகட்டும். நீர் வாங்கிய கடனைக் கொடுக்காமல் சிறையில் இருந்தது உண்டா?"

" அதைப்பற்றி என்ன இப்பொழுது ?"

" உண்டா, இல்லையா ? விடை கூறும்."

" உண்டு. ஒரு முறை இருந்திருக்கிறேன்."

" ஒரு முறையா ? ஐந்தாறு முறை சிறையில் இருக்கவில்லை ?"

" இருக்கலாம் ; நினைவில்லை."

" நீர் சூதாட்டம் ஆடுவதுண்டா?"

" ஆடுவதுண்டு. இன்பமான பொழுது போக்குக்கு அதைவிடச் சிறந்தது வேறு என்ன இருக்கிறது?"

" சூதாட்டத்தில் உம்மோடு ஆடியவனை நீர் ஏமாற்றி விட்டதற்காக அவன் உம்மை உதைத்து மாடிப் படியிலிருந்து கீழே தள்ளியதுண்டா ?"

" நான் ஏமாற்றி விட்டதாக அந்தப் பயல் சொல்வது பொய். அதை நம்பக்கூடாது. அந்தத் திருட்டுப் பயல் நான் வேறுபக்கம் திரும்பியிருந்தபோது என்னை உதைத்தது உண்மைதான். ஆனால், அவன் என்னைத் தள்ளவில்லை ; நான்தான் என் விருப்பப்படி மாடிப்படிகளில் உருண்டு விழுந்தேன்."

" மிக்க மகிழ்ச்சி. நீர் எதிரியின் வேலையாளுக்குப் பணம் கொடுத்து ஆசை காட்டி, எதிரியின் பெட்டியிலிருந்து கடிதங்களை எடுத்து வரச் செய்தீர் அல்லவா ?"

" கடிதங்களை எடுத்து வரச் செய்தது உண்மைதான். ஆனால் அதற்காக நான் பணம் கொடுக்கவில்லை."

“நீர் எதிரியிடம் பொருளுதவி வேண்டினீர். எதிரி உமக்குப் பொருளுதவி செய்ய மறுத்து விட்டார். அதற்காக எதிரியைத் துன்பத்திற்குள்ளாக்கக் கருதி இச் செயலைச் செய்தீர். அப்படித்தானே ?”

“இல்லையில்லை ; மன்னரிடமுள்ள பற்றுலும் நாட்டு நலத்தைக் காக்கும் கருத்தாலும் இதைச் செய்தேன்.”

கண்ணப்பர், கேள்வி போதுமென்று உட்கார்ந்து விட்டார். பிறகு எதிரியின் வேலையாள் முனியன் விசாரிக்கப்பட்டான். அவன் எதிரியிடம் வேலைக்கு அமர்ந்ததிலிருந்து எதிரியின் செயல்களில் தனக்கு ஐயமேற்பட்டு வந்ததென்றும், அதனல் நாட்டு நலத்தைக் கருதிப் பெட்டியை ஆராய்ந்து கடிதம் முதலியவற்றை எடுத்து, எதிரியின் சதிச் செயலை வெளிப்படுத்த உதவி செய்ததாகவும், நாகப்பன் தன் நண்பனென்றும் தெரிவித்தான்.

அதன் பின்னர், அம்பலவாணர் விசாரிக்கப்பட்டார். ஆட்சியாளரின் வழக்கறிஞர் கேட்ட கேள்விகளுக்கு அவர் கூறியவை பின்வருமாறு : “நான் அழகப்பா பாங்கின் பொறுப்பாளர்களில் ஒருவன். மருத நாட்டிலுள்ள இன்பபுரியில் எங்கள் பாங்கியின் கிளை இருப்பதால் நான் அதன் அலுவல் காரணமாக அடிக்கடி அங்குப் போய் வருவதுண்டு. 1775-ஆம் ஆண்டு நவம்பர் மாதக் கடைசி வெள்ளிக்கிழமையன்று இரவு நான் தொண்டித் தபால் வண்டியில் பயணம் செய்தேன். அவ்வண்டியில் என்னைத்தவிர இன்னும் இரண்டு பிரயாணிகள் இருந்தார்கள். இர

வாயிருந்ததால் அவர்களின் முகத்தை நான் சரியாய்ப் பார்க்கவில்லை. இருவரும் நடுவழியில் இறங்கிப் போய் விட்டார்கள். எதிரி அவர்களில் ஒருவராய் இருப்பார் என்று என்னால் உறுதியாய்ச் சொல்லமுடியாது. எதிரியை நான் பார்த்திருக்கிறேன். அப்பொழுது நான் கொற்கையிலிருந்து வந்த படகில் பயணம் செய்து கொண்டிருந்தேன். எதிரியும் அப் படகில் இருந்தார். நான் பார்த்தபோது அவர்கூட வேறு யாரும் இல்லை.''

அம்பலவாணர் சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கிக் கீழே சென்றதும், மலர்விழி அழைக்கப்பட்டாள். நீதிமன்றத்திலிருந்த அனைவரும் அவளை நோக்கினர். டாக்டர் மருதவாணரின் அருகில் அமர்ந்திருந்த அவள் மெதுவாக எழுந்து வந்து நின்று எதிரியை இரக்கத்தோடு பார்த்தாள். எதிரி மதிவாணன் தலையைக் குனிந்து கொண்டான். பிறகு வழக்கறிஞரின் கேள்விகளுக்கு மலர்விழி பின்வருமாறு விடை கூறினாள் :

"நான் எதிரியை அம்பலவாணர் தெரிவித்த நாளில் படகில் பார்த்திருக்கிறேன். எதிரி படகில் ஏறும் பொழுது என் தந்தை மிகவும் களைத்துப் போயிருந்தார். அதனால் அவரைக் காற்றில் படுக்க வைக்கக் கூடாதென்று, படகிலுள்ள அறையினுள் அழைத்துப் போய்ப் படுக்க வைத்துவிட்டு அருகிலிருந்தேன். அப்பொழுது எதிரி எனக்கு அன்புடன் உதவி செய்தார். அவருடன் மருத நாட்டினர் இருவர் இருந்தனர். அவர்களுடன் எதிரி கூடியிருந்து

என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தார். என்ன பேசினார்கள் என்பதை நான் கவனிக்கவில்லை. எதிரி பெருந்தன்மையாகவும் மரியாதையாகவும் என்னிடம் நடந்து கொண்டார். அவருக்குத் தீங்கு நேரும்படி ஏதேனும் சொல்லி விடுவேனோ என்று நான் அஞ்சுகிறேன்.''

மலர்விழியின் குரல் தழுதழுத்தது; கண்களில் நீர் ததும்பியது. பேச்சு முடிந்ததும் அவள் எதிரியைப் பார்த்த வண்ணம் சென்று தன் இருக்கையில் அமர்ந்தாள். பின்னர், டாக்டர் மருதவாணர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :

" எதிரி மூன்று ஆண்டுகளுக்குமுன் ஒருமுறை என் வீட்டிற்கு வந்திருக்கிறார். அப்பொழுதுதான் நான் அவரைப் பார்த்திருக்கிறேன். அதற்குமுன் பார்த்ததாகச் சொல்ல முடியாது. நான் மருத நாட்டில் குற்றச்சாட்டின்றி, விசாரணையின்றி நீண்ட காலம் சிறையிலிருந்து வேதனைப்பட்டதால் அறிவு திரிந்த நிலையை யடைந்தேன். பிறகு விடுதலை யடைந்தே னென்றும், அம்பலவாணரும் என் மகளும் என்னை இங்கு அழைத்து வந்தனரென்றும் அப்பொழுது எதிரி நாங்கள் இருந்த படகில் வந்தாரென்றும் சொன்னார்கள். அவை யொன்றும் எனக்கு நினைவில்லை.''

டாக்டர் மருதவாணரின் சாட்சியத்திற்குப் பிறகு மற்றொரு சாட்சி விசாரிக்கப்பட்டான். ஐந்தாண்டுகளுக்கு முன்னர், எதிரி தொண்டித் தபால் வண்டியில் சென்று நடுவழியில் இறங்கி, அருகிலுள்ள ஊருக்குச்

சென்று தன் சதித்திட்டத்திற்கு வேண்டிய செய்திகளை ஆராய்ந்து சேர்த்திருக்கிறான். இதுதான் முக்கியக் குற்றச் சாட்டு. இது மெய்ப்பிக்கப் பட்டுவிட்டால், எதிரி குற்றவாளி என்று முடிவு செய்வது எளிதாய் விடும். மருத வாணருக்குப் பிறகு வந்த சாட்சி, தான் அவ் வூரில் எதிரியைப் பார்த்ததாக உறுதியாய்ச் சொன்னான்.

அந் நிலையில் எதிரியின் வழக்கறிஞரான கண்ணப்பர் என்ன செய்வதென்று விளங்காமல் தளர்ச்சியடைந்தார். அப்பொழுது, விசாரணையின் தொடக்கத்திலிருந்து ஒன்றையும் பொருட்படுத்தாதவன் போல் ஆழ்ந்த சிந்தனையுடன் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த இளைஞனை வழக்கறிஞன் ஒருவன், துண்டுக் காகிதமொன்றில் ஏதோவொரு செய்தியை விரைவாக எழுதி அதைக் கண்ணப்பரிடம் கொடுத்தான். கடிதத்தை வாங்கிப் பார்த்த கண்ணப்பர் சுறுசுறுப்பு அடைந்தவராய் எதிரியை ஒரு முறை உற்று நோக்கிவிட்டுச் சாட்சியின் பக்கம் திரும்பிக் கேள்வி கேட்கலானார் :

" ஐயா ! அவ் வூரில் நீர் பார்த்தவர் எதிரிதான் என்று உறுதியாய்ச் சொல்கிறீரா ?"

" ஆம் ; நான் எதிரியைத்தான் பார்த்தேன்."

" எதிரியைப் போன்ற வேறு யாரையாவது நீர் பார்த்தது உண்டா ?"

" இல்லை. எதிரியைப் போன்ற வேறு எவரையும் நான் பார்த்தது கிடையாது."

உடனே கண்ணப்பர் தம்மிடம் கடிதம் கொடுத்த வனைச் சுட்டிக் காட்டி, " இதோ, இங்கிருக்கும் என் நண்பரைக் கவனமாய்ப் பாரும்; எதிரியையும் உற்றுப் பாரும். இருவரும் உருவத்தில் ஒத்திருக்கிறார்கள் அல்லவா ? இப்பொழுது என்ன சொல்கிறீர் ?" என்று ஓங்கிய குரலில் கேட்டார். சாட்சி மறுமொழி கூறாமல் திகைத்து நின்றான். நீதிமன்றத்திலிருந்த அனைவரும் இருவரையும் மாறிமாறிப் பார்த்து இரு வருடைய தோற்றமும் ஒத்திருப்பதைக் கண்டு வியப் பும் பிரமிப்புமடைந்தனர்.

நீதிபதியின் முகத்திலும் வியப்பின் அறிகுறி தோன்றியது. அவர் கண்ணப்பரை நோக்கி, " நீங் கள், நமது நண்பர் மணவாளர் அவர்களையே சதிக் குற்றத்திற்காக விசாரிக்கப் போகிறீர்களா ?" என்று புன்முறுவலுடன் கேட்டார்.

" மாட்சிமையுள்ள நீதிபதி அவர்களே ! எனது கருத்து அதுவன்று. இந்தச் சாட்சி கூறுவது ஆதார மற்றது என்பதை விளக்குவதே என் நோக்கம். சாட்சி மறுமொழி கூறாமலிருப்பதிலிருந்து நான் சொல்வது சரியென்று உறுதிப்படுகிறது" என்று கண்ணப்பர் கூறினார்.

பிறகு, " நடுநிலையாளர்களே ! எதிரி மருத நாட் டினர் ; தம் விருப்பப்படி இம் மணிபுரியில் வாழ்ந்து வருகிறார். ஆதலால் அவர் தமது சொந்த அலுவலின் பொருட்டு இன்பபுரிக்குச் சென்று வருவதுண்டு. அவர் மீது குற்றஞ் சாட்டிய நாகப்பன் என்பவர், எதிரி செல்வப் பொலிவுடன் விளங்குவதைக் கண்டு

அவரிடம் பணம் பறிக்கும் நோக்குடன் நண்பர் போலப் பாசாங்கு செய்து பழகிவந்தார். இரண்டு மூன்று முறை தம் கருத்தை நிறைவேற்றிக் கொள்ள முயன்று கடனுகப் பணம் கேட்டார். அவர் பெருந் தொகை கேட்டதால், எதிரி பணவுதவி செய்ய முடியாத தம் உண்மை நிலையை வருத்தத்துடன் தெரிவித்தார். அதனுல் ஏமாற்றமடைந்த அவர் எதிரியிடம் பகைமை கொண்டு, எதிரி எழுதியது போன்று சில கடிதங்களைத் தயாரித்து இக் குற்றத்தைக் கற்பனை செய்து சுமத்தியிருக்கிருர். தனக்குப் பணவுதவி செய்யாத எதிரிக்குத் துன்பத்தை உண்டாக்குவதே அவர் நோக்கம். உண்மையில் எதிரி குற்றமற்றவர் என்பது விசாரணையில் நன்கு வெளியாகிறது. ஆகையால் எதிரியைக் குற்றமற்றவர் என்று முடிவு செய்வீர்களென்று நம்புகிறேன்" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார்.

கண்ணப்பர் பேசி முடித்ததும், நடுநிலையாளர்கள் எழுந்து தனியறைக்குச் சென்று ஆலோசிக்கத் தொடங்கினர்.

நீதி மன்றத்தில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. மக்களின் பேச்சொலி எங்கும் பரவியது. நீதிபதி எழுந்து தம் அறைக்குச் சென்று விட்டார். பலர் வெளியே செல்லத் தொடங்கினர். இவ்வளவு பரபரப்புக்கிடையே மணவாளன் முன் போலவே அண்ணுந்து பார்த்த வண்ணம் அசைவற்று உட்கார்ந்திருந்தான். ஆயினும் அவன் மனம் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டுதான் இருந்தது. திடீரென்று அவன் அங்கிருந்த ஏவலன் ஒருவனைக்

கூப்பிட்டு, "அதோ பார்! அப் பெண்ணுக்கு மயக்கம் போல் இருக்கிறது. விரைந்து போய்ச் செய்ய வேண்டிய உதவியைச் செய்! போ!" என்று அவனைத் துரத்தினன்.

டாக்டர் மருதவாணரின் அருகிலிருந்த மலர் விழி, மயங்கித் தன் தந்தையின் தோள்மீது சாய்ந்து விட்டாள். ஓடிச் சென்ற ஏவலன் தண்ணீர் கொடுத்து உதவி செய்தான். மலர்விழி மயங்கிச் சாயப் போவதை முதலில் பார்த்தவன் மணவாளன் தான். அம்பலவாணர் அங்கு வந்து மருதவாண ரையும் மலர்விழியையும் வெளியே அழைத்துக் கொண்டு போய்த் தனியிடத்தில் இருக்கச் செய்து விட்டு உள்ளே நுழைந்தார்.

மணவாளன் அவரிடம் வந்து, "அந்தப் பெண் இப்பொழுது எப்படியிருக்கிருள்? மயக்கம் தெளிந் திருக்கிறதா?" என்று பரிவுடன் கேட்டான்.

"அவள் மிகவும் மனங் குழம்பியிருக்கிருள். எதிரிக்குத் தீங்கு நேருமோ வென்று அச்சப்படு கிருள் போலிருக்கிறது. அதனுல்தான் மயக்கம் வந்து விட்டது. பிறர் துன்பத்தையும் தாங்க முடியாத மென்மையான உள்ளம் படைத்தவள்" என்ருர், அம்பலவாணர்.

"இச் செய்தியை எதிரியிடம் தெரிவிக்கிறேன். அப் பெண்ணின் செய்தியை அறிய அவர் ஆவலா யிருப்பார்" என்று கூறிவிட்டு, மணவாளன் மறுபக்க மிருந்த கைதியிடம் சென்ருன். மதிவாணன் திரும்பிப் பார்த்தான்.

மணவாளன் அவனை நோக்கி, "மதிவாணரே! மலர்விழி என்ற அப் பெண்ணைப்பற்றியறிய ஆவலாயிருப்பீர். காற்றேட்டமுள்ள இடத்தில் அவள் இருக்கிறாள். மயக்கம் தெளிந்துவிட்டது. இனிக் கவலைப்பட வேண்டியதில்லை" என்றான். மணவாளன் கைதிக் கூண்டின் பக்கம் சாய்ந்து நின்றுகொண்டு அலட்சியமான குரலில் இவ்வாறு பேசினான்.

மதிவாணன் சிறிது மலர்ந்த முகத்துடன், "உங்களுக்கு நன்றி. என் பொருட்டு அவளுக்கு இத்துன்பம் ஏற்பட்டதைக் குறித்து மிகவும் வருந்துகிறேன். இதை அவளுக்குக் கருணை கூர்ந்து தெரிவிக்க முடியுமா ?" என்றான், குழைவான குரலில்.

"ஓ! கட்டாயம் தெரிவிக்கிறேன். இது வென்ன அரிய செயலா? அதிருக்கட்டும். வழக்கில் என்ன முடிவை எதிர்பார்க்கிறீர், மதிவாணரே?" என்று கேட்டான் மணவாளன்.

"எதிர்பார்ப்பது என்ன! வாழ்க்கை முடிவு தான்" என்று, மதிவாணன் உலகையே வெறுத்தவன்போல் கூறினான்.

மணவாளன் எங்கேயோ பார்த்துக்கொண்டே, "அது சரியான முடிவுதான். இவ் வழக்கில் வேறு முடிவை எதிர்பார்க்க முடியாது. ஆனால், உள்ளே போயிருக்கிறவர்கள் உமக்குச் சாதகமான முடிவே செய்வார்களென்று உறுதியாக நினைக்கிறேன்" என்றான். மதிவாணன் வியப்புடன் அவனைப் பார்த்தான்.

ஒரு மணி நேரங்கழித்து நடுநிலையாளர்கள் அனைவரும் வந்து அமர்ந்தார்கள். நீதிபதியும் வந்து உட்

கார்ந்தார். வெளியே சென்றவர்களெல்லாம் விரைந்து வந்து கூடினார்கள். யாவர் முகத்திலும் வழக்கின் முடிவையறியும் ஆவல் நிறைந்திருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் 'விடுதலை! விடுதலை!!' என்ற மகிழ்ச்சிக் குரலொலி எங்கும் பரவியது. பிறகு கூட்டம் கலையத் தொடங்கியது.

## 5. மதிவாணனும் மணவாளனும்

வழக்கறிஞர் கண்ணப்பர், டாக்டர் மருதவாணர், அம்பலவாணர், மலர்விழி முதலிய எல்லாரும் விடுதலை யடைந்த மதிவாணனைச் சூழ்ந்து கொண்டு தங்கள் மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் முறையில் இன்மொழி கூறினர். மதிவாணன் எல்லாரையும் அன்புடன் நோக்கி வணக்கம் செய்தான்; மலர் விழியை நன்றி யுடன் பார்த்தான். பிறகு கண்ணப்பரின் கையைப் பிடித்துக் குலுக்கி, "உங்கள் உதவியை நான் என்றும் மறக்கமுடியாது. உங்களால்தான் எனக்கு விடுதலை கிடைத்தது" என்று தன் நன்றியைத் தெரிவித்தான்.

"ஏதோ என்னால் முடிந்ததைச் செய்தேன். இது மிகவும் ஆபத்தான வழக்கு. ஆயினும் தோல்வி யடையுமென்று நான் நினைக்கவில்லை. விடுதலை கிடைத்ததைக் குறித்துப் பெருமகிழ்வடைகிறேன்" என்றார் கண்ணப்பர். தம் திறமையைப் பற்றி உள்ளூரப் பெருமையடைகிறார் என்பது அவர் குரலில் தெரிந்தது.

மணவாளன் இவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை; சிறிது தூரத்தில் சுவரில் சாய்ந்து

நின்று கொண்டிருந்தான். அவன் கண்ணப்பரிடம் எழுதிக் கொடுத்த குறிப்பினுலேயே மதிவாணன் விடுதலையடைய வழி யேற்பட்டது. இவ்வுண்மை கண்ணப்பருக்குத் தெரியும். ஆனல், அவர் அதைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை; மணவாளனைப் பாராட்டவுமில்லை. அவ்வாறு செய்யவில்லையே யென்று மணவாளன் கவலைப்பட்டதாகவும் தெரிய வில்லை. அவன் வழக்கம்போல் எதையும் பொருட் படுத்தாத நிலையிலேயே இருந்தான். ஆயினும், மலர் விழி யிருந்த பக்கம் அவன் பார்வை பதிந்திருந்தது.

மலர்விழியும் டாக்டர் மருதவாணரும் எல்லாரிட மும் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டனர். அதைக் கண்ட மணவாளன் அவர் கள் பின்னுலேயே வெளியே சென்று நின்ருன். இரு வரும் வண்டியேறிச் செல்வதைத் திறந்த கண் மூடா மல் சிறிது நேரம் பார்த்துவிட்டுத் திரும்பி உள்ளே வந்தான். அப்பொழுது கண்ணப்பரைக் காணவில்லை. மதிவாணனிடம் நின்று பேசிக்கொண்டிருந்த அம்பல வாணர் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். தனியாயிருந்த மதிவாணனிடம் நெருங்கி வந்த மண வாளன், “ மதிவாணரே ! நம் இருவரையும் ஒன்ருய்ப் பிணைத்திருக்கும் இந்த விதியின் விளையாட்டு வேடிக் கையானது !" என்று அலட்சியம் கலந்த புன்னகை யுடன் கூறினுன்.

“ உன்மைதான். எல்லாம் விதியின் விளையாட் டாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. ஆனுல் நான் மண்ணுலகத்தைச் சேர்ந்துவிட்டே னென்று இன்

னும் எனக்குத் தோன்றவில்லை" என்றுன் மதி வாணன்.

"அதில் வியப்பில்லை. விண்ணுலகத்திற்குச் செல்லும் வழியில் விரைந்து போய்க் கொண் டிருந்தீர்! திடீரென்று அது தடைப்பட்டதால் திகைப்பு நீங்கவில்லை. மிகவும் சோர்வடைந்திருக் கிறீர். சிற்றுண்டி யருந்தினுல் தெளிவு பிறக்கும். உணவு விடுதிக்குப் போவோம் வாரும்; வழி காட்டு கிறேன். அந்தப் பெரிய மூளைகள் கூடி உம்மை எந்த உலகத்திற்கு அனுப்புவது என்று மண்டையை உடைத்துக் கொண்டிருந்த போது நான் போய்க் கொஞ்சம் சாப்பிட்டு வந்துவிட்டேன். ஆயினும் இப் பொழுது உம்மோடு சேர்ந்து சிற்றுண்டி யருந்து வதில் எனக்குத் தடையில்லை" என்று மணவாளன் கூறிக்கொண்டே மதிவாணனை உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றுன்.

இருவரும் உணவு விடுதியினுள் சென்று எதிர் எதிரான இருக்கையில் அமர்ந்தனர். பணியாளன் வேண்டிய சிற்றுண்டி வகைகளைக் கொண்டுவந்து மேசையின் மேல் பரப்பினுன். சிறிது நேரத்தில் எல்லாத் தட்டுகளும் காலியாயின. பணியாள் மீண்டும் வேறுவகைச் சிற்றுண்டிகளைக் கொண்டு வந்து வைத்தான். அவையும் காலியாயின! முன் னரே சாப்பிட்டு விட்டதாகக் கூறிய மணவாளன் தனக்கு வைத்தவற்றில் சிறிதும் மிச்சமின்றி உண் டான்! கையலம்பிக் கொண்டுவந்து உட்கார்ந்ததும், "என்ன மதிவாணரே! இப்பொழுது மண்ணுலகத்

திற்கு வந்து விட்டதாகத் தோன்றுகிறதா ?" என்று கேட்டான், வேடிக்கையாக.

" நான் பெருங் குழப்பத்தில் இருந்தேன். இப்பொழுதுதான் சிறிது தெளிவு ஏற்படுகிறது" என்ருன் மதிவாணன்.

" என் விருப்பம் என்ன தெரியுமா ? இம்மண்ணுலகை மறக்க வேண்டும் என்பதுதான். நீர் மண்ணுலகை விரும்புகிறீர் ; நான் விண்ணுலகை விரும்புகிறேன் ! நான் கூறுவது வேடிக்கையாய் இருக்கிறதல்லவா ? ஆனுல், வேடிக்கையன்று ; உண்மை. நீரும் நானும் மாறுபட்டிருக்கிருேம் என்று நினைக்கிறேன் " என்று கூறிவிட்டு, மதிவாணனைக் கூர்ந்து பார்த்தான் மணவாளன்.

அப்பொழுதிருந்த குழப்பமான மனநிலையில் என்ன சொல்வதென்று தெரியாமல் மதிவாணன் பேசாதிருந்தான். பணியாள் பானம் நிறைந்த இரு குவளைகளைக் கொண்டுவந்து மேசையின் மேல் வைத்துவிட்டுப் போனுன். உடனே மணவாளன், " யாரையேனும் வாழ்த்தி விட்டுப் பானத்தைப் பருகுவோம். உமது உள்ளத்திலிருக்கும் பெயரைச் சொல்லட்டுமா ? குமாரி மலர்விழி ! " என்ருன். மதிவாணன் வியப்புடன் அவனைப் பார்த்து, " ஆம், குமாரி மலர்விழி !" என்று மெல்லக் கூறினுன். இருவரும் பானத்தைப் பருகினர்.

மணவாளன் கைத்துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டே, " மதிவாணரே ! உம்மிடம் ஒரு

கேள்வி கேட்கிறேன். உம்மை எனக்குப் பிடிக்கிறது என்று நினைக்கிறீரா ?'' என்ருன்.

எதிர்பாராத இக் கேள்வியால் மதிவாணன் திகைப்பும் வியப்புமடைந்து பேசாதிருந்தான். "மதிவாணரே! வியப்படையாதீர். நான் எவரையும் பொருட்படுத்துவதில்லை; என்னையும் யாரும் பொருட்படுத்துவதில்லை. இது என் இயல்பு. அது போகட்டும். நான் பெருந்தீனி தின்பவன் என்று நினைக்கிறீரல்லவா ?'' என்ருன் மணவாளன்.

மதிவாணன் தயக்கத்துடன், "அப்படி யொன்றும் நினைக்கவில்லை'' என்ருன்.

மணவாளன் கலகலவென்று நகைத்துக் கொண்டே "இல்லையில்லை; நீர் உண்மையைக் கூறவில்லை'' என்று எழுந்தான்.

மதிவாணனும் எழுந்து நடந்து கொண்டே, "உமது சிறந்த திறமையை நன்கு பயன்படுத்திஞல் முன்னேற்றம் அடைய முடியுமென்று நினைக்கிறேன்'' என்று மெதுவாகக் கூறிஞன்.

மணவாளன் அதைப் பொருட்படுத்தாமல், "முன்னேற்றம் அடையலாம்; அடையாமற் போகலாம். என்வழியே தனியானது. பிறர் அறிவுரையைக் கேட்டு நான் என்றும் நடந்ததில்லை. இப்பொழுது நான் கூறப்போகும் அறிவுரையைக் கேட்டு நீர் நடக்க வேண்டும் என்பதும் கட்டாயமில்லை. ஆயினும் கூறுகிறேன்: உமது அமைதியான அழகிய தோற்றத்திலும் திறமையிலும் அகமகிழ்ந்து விடாதீர்!

ஆபத்து நேரலாம். சரி, போய் வாரும்; வணக்கம்" என்று கூறி விடையளித்து விட்டுத் திரும்பினுன்.

மதிவாணன், இருவரும் உண்டதற்குரிய பணத்தைத் கொடுத்துவிட்டு வெளியேறினுன். அவன் உள்ளத்தில் மணவாளனைப் பற்றிய பலவகையான எண்ணங்கள் எழுந்தன. "எவ்வளவு விந்தையான மனிதன்!" என்று எண்ணிக் கொண்டே தனது இருப்பிடத்தை நோக்கி நடந்தான். அப்பொழுது அவன் மனத்திரையில், கண்ணீர் கலங்க நிற்கும் மலர் விழியின் எழில்முகம் காட்சியளித்தது !

உணவு விடுதியிலிருந்த மணவாளன் அங்கிருந்த நிலைக் கண்ணுடியின் அருகில் போய் நின்று, தலை மயிரைச் சரிப்படுத்திக் கொண்டே கண்ணுடியில் தெரிந்த தன் உருவத்தை உற்றுப் பார்த்தான். பிறகு அதை நோக்கிய வண்ணம் தனக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டான்:

"உனக்கு அந்த மனிதனைப் பிடித்திருக்கிறதா ? உன்னைப் போலவே வடிவத்தில் ஒத்திருக்கும் அவனை ஏன் உனக்குப் பிடிக்க வேண்டும் ? ஆ! உன் வடிவத்தில் வேறுபாடு இருக்கிறது! நீ எவ்வாறு இருக்க வேண்டும் என்று காட்டுவது போலிருக்கிருன் அவன். நீ அவனுயிருந்தால் எழில் நிறைந்த அம்முகம் உன்னைக் கண்டு வருந்திக் கண்ணீர் மல்க நின்று தன் அன்பைக் காட்டியிருக்குமா ? இது பயனற்ற கேள்வி. நீ அவனுக முடியாது. நீ அவனை வெறுக்கிருய். ஆம்; அதுதான் உண்மை." இவ்வாறு

பேசிய மணவாளன் சோர்ந்த உள்ளத்துடன் விடுதி யினின்று வெளியே சென்ருன்.

மணவாளன், உற்ருர் உறவினரற்ற தன்னந் தனியன்; ஒழுங்கற்ற வாழ்க்கையில் ஊறிப்போனவன்; எவ்வாருே சட்டம் பயின்று வழக்கறிஞுகிக் கண்ணப் பரின் தோழுய் இருப்பவன்; கூரிய அறிவு படைத்த வனுயினும் சோம்பல் குடிகொண்ட மனத்தினன்; கண்ணப்பர் மேற்கொள்ளும் வழக்குகளில் எவ்வளவு சிக்கலானவை யிருந்தாலும் நுட்பமாக ஆராய்ந்து சிக்கல்களே அவிழ்ப்பதில் திறமுள்ளவன். கண் ணப்பருக்குத் தொழில் முறையில் மணவாளனின் உதவி தேவையாயிருந்ததால், தன் வீட்டின் ஓர் அறையில் அவனேத் தங்கியிருக்கும்படி வைத்திருந் தார். அவ்வறையை நோக்கிச் சென்றுகொண் டிருந்த மணவாளனுக்கு மாடமாளிகைகளால் வனப் புற்றுத் திகழும் மணிபுரி நகரம் முழுவதும் வெறும் பாலேவனமாய் மாறிவிட்டதுபோல் தோன்றியது.

## 6. செல்வநாயகம் பிரபு

செல்வப் பொலிவால் திகழும் மாடமாளிகை களும், பூங்காக்களும் மலிந்துள்ள இன்பபுரியின் ஒரு பால், குபேரா உணவு விடுதி கோமகன் மாளிகை போல் எழில் பெற்று இலங்கியது. ஒருநாள் மாலே அதன் மேன்மாடத்திலுள்ள அழகிய பெரிய கூடத்தில் நூற்றுக் கணக்கான நாற்காலிகளும் மேசைகளும் வரிசை வரிசையாக இடப்பட்டிருந்தன. மேசைகளின் மீது பூவேலே செய்த வெண்ணிறத்

துணிகள் விரிக்கப்பட்டு, பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் முறையில் பலநிற மலர்க்கொத்துக்கள் வெள்ளிக் குவளைகளில் நிறுத்திவைக்கப் பட்டிருந்தன. கூடத்தின் நாற்புறச் சுவர்களும் கைதேர்ந்த ஓவியரின் கலைத்திறன் அமைந்த காட்சிச் சாலைபோல் கவின்பெற அலங்கரிக்கப்பட்டுவிளங்கின. விருந்து நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை விடுதித் தலைவனின் கட்டளைப்படி ஏவலர்கள் சுறு சுறுப்பாகச் செய்துகொண்டிருந்தார்கள்.

குபேரா விடுதியின் வேறு பக்கத்தில் அழகிய பல அறைகள் இருந்தன. பளிங்குக் கற்கள் பதித்த ஓர் அறையில், பஞ்சு மெத்தை விரித்த மஞ்சத்தின் மீது படுத்திருந்த செல்வநாயகம் பிரபு, கடிகாரத்தின் மணி நான்கு முறை அடித்து ஓய்ந்ததும் எழுந்து முகம் அலம்பித் துடைத்துக்கொண்டு, பளபளக்கும் பட்டாடைகளை அணிந்தார்; பிறகு, வைரமோதிரம், பொற்சங்கிலி, மணப்பொருள் முதலியவற்ருல் தம்மை அலங்கரித்துக் கொண்டு நிலைக் கண்ணுடியின் முன் நின்று தம் தோற்றப் பொலிவைக் கண்டு உள மகிழ்ந்தார். அவருக்கு அறுபது வயதிருக்கும். ஆயினும் செல்வக் களிப்பில் வளர்ந்த அவர் முகம் செழுமையுடன் விளங்கியது.

அலங்காரம் முடிந்ததும் வெளியே புறப்பட்ட செல்வநாயகம், அறையைப் பூட்டிக்கொண்டு விருந்துக்கூடத்திற்கு வந்தார். விடுதித்தலைவன் அவரைக் கண்டு வணங்கி வரவேற்ருன். எல்லாம் சரியாயிருக்கிறதா என்று சிறிதுநேரம் ஒவ்வொரு பக்கமாய்ப்

பார்த்த செல்வநாயகம், "சிற்றுண்டிகள் தயார் தானே?" என்று விடுதித் தலைவனை நோக்கி வின வினார். அவன், "எல்லாம் தயாராய் உள்ளன" என்றான்.

நாலரை மணி ஆயிற்று. நகரத்திலுள்ள சிறந்த செல்வர்களான ஆண் பெண்களும், அரசாங்க சபை யின் உறுப்பினர்களும், பெரிய அதிகாரிகளுமாகிய பலர், பளபளவென ஒளிவீசித் திகழும் ஆடையணி களுடன் ஒவ்வொருவராய் வரத் தலைப்பட்டனர். பொலிவு மிகும் முகத்தில் புன்முறுவல் பூக்க, பிரபு குலத்தினர்க்கே யுரிய பெருமிதமான முறையில் வாயி லருகில் நின்ற செல்வநாயகம், வந்தவர்களை யெல் லாம் வரவேற்று, அவரவர்களுக் குரிய ஆசனங்களில் அமரச் செய்தார். யாவரும் வந்த பின்னர் அவரும் நடுநாயகமாய் ஓராசனத்தில் அமர்ந்து விடுதித் தலைவனை நோக்கினார். உடனே விலை மிகுந்ததும் சுவை நிறைந்ததுமாகிய பலவகைச் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. எல்லோரும் உண்டு மகிழ்ந்தனர்; சிறிது நேரம் உரையாடிக் களித்தனர்; பிறகு, பிரபுவை வாழ்த்தி வணங்கிவிட்டு ஒவ்வொருவராக விடை பெற்றுச் சென்றனர். யாவும் அரைமணி நேரத்தில் முடிந்துவிட்டன.

மருதநாட்டு அரசாங்க சபையில் செல்வாக்கு மிகுந்த பிரபுக்களில் ஒருவர் செல்வநாயகம். இன்ப புரியிலிருந்து ஏழெட்டுமைல் தொலைவிலுள்ள செல்வ புரம் என்னும் சிற்றூர் முழுவதும் அவருக்கே உரிய தாயிருந்தது. அங்கு வாழ்வோர் அனைவரும் சுற்றுப்

புறங்களிலுள்ள நிலபுலங்களில் வேலைசெய்து பிரபு வின் கருணையை எதிர்நோக்கி அவருக்கு அடங்கி வாழும் எளிய மக்களே யாவர். அவர்களின் உழைப் பினாலேயே செல்வம் பெருகி மேம்பாடான நிலையில் விளங்கினாராயினும், செல்வநாயகம் அவர்களிடம் சிறிதும் இரக்கமின்றி வறுமையில் வாடும்படி அவர் களை வருத்தி வந்தார்; ஆனால் தம் ஆடம்பரப் பெரு மையில் அகமகிழ்ந்து மாதம் ஒருமுறை செல்வர் களுக்கு இவ்வாறு விருந்தளிக்கத் தவறுவதேயில்லை!. தம் இன்ப வாழ்வுக்குரிய எல்லா நலங்களையும் செய்யும் எளியவர்களை விலங்குகளென மதித்துக் கொடுமை செய்யும் செல்வநாயகம்ஆட்சியாளரிடம் தம் செல்வாக் கைப் பெருக்கிக்கொள்ள விரும்பி இத்தகைய ஆடம் பரங்களைச்செய்து வந்தார்.அரக்க குணம்படைத்தபிரபு வின் அதிகாரத்தில் எளிய மக்கள் அடைந்த இன்னல் களுக்கு அளவேயில்லை. அவற்றால் உள்ளங் கொதித் தனராயினும், அவர்கள் வாய்திறந்து பேச வழியின்றி ஊமையர்களாய் மனம் நொந்து வாழ்ந்து வந்தார்கள். அரசாங்கச் செல்வாக்கு மிகுந்த பிரபுவைப்பற்றி யாரிடம் சென்று முறையிடுவது?

விருந்தளித்த பெருமையில் பூரிப்படைந்த பிரபு, மகிழ்ச்சி நிரம்பிய மனத்தினராய் உணவு விடுதியை விட்டுப் புறப்பட்டு, அவர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த பெட்டி வண்டியை நோக்கி மெல்லச் சென்றார். வண்டிக்காரன் விரைந்து வந்து கதவைத் திறந்து, பிரபு ஏறியதும் மூடிவிட்டு முன்புறமுள்ள தன்னிடத்தில் ஏறியமர்ந்து, பிரபு 'ஓட்டு' என்று உத்

தரவளித்ததும் இருகுதிரைகளையும் தூண்டி ஓட்டி னான். வளமான உணவால் வளர்ந்து மினுமினுப் புடன் விளங்கிய அக் குதிரைகள் காற்றாய்ப் பறந்தன.

வழியில் நடந்தவர்கள் வண்டி வரும் வேகத்தைக் கண்டு சிதறியோடினர்; ஆங்காங்கு நின்றிருந்த வர்கள் மனம் பதறி விலகிச் சென்றனர்; பெண்கள் கூக்குரலிட்டுக் குலைநடுங்க ஓடிப் பதுங்கினர். நக ரத்தைக் கடந்து எளியவர்கள் வாழும் தெருக்களின் வழியே இவ்வாறு விரைந்து ஓடிய அப்பெட்டிவண்டி, ஒரு தெருவின் மூலையிலுள்ள தண்ணீர்க் குழாயருகில் சேறாயிருந்த நொடியிலிறங்கி வேகம் தடைப்பட்டது. அதே சமயம் பின்புறத்தில் பலபேர் கூக்குரலிட்டுக் கத்திக்கொண்டு வண்டியை நோக்கி ஓடி வந்தனர். நெருங்கி வந்த சிலர் குதிரைகளின் வாய்க்கயிற்றைப் பிடித்து வண்டியை நிறுத்தினர். அவர்களைக் கண்ட வண்டிக்காரன் திகிலடைந்து கீழே யிறங்கினான்.

"என்ன செல்லையா? வண்டி ஏன் நின்று விட்டது?" என்று, வண்டிக்குள் திண்டின்மீது சாய்ந்து அமர்ந்திருந்த பிரபு அதிகார மிடுக்குடன் கேட்டார். வண்டிக்காரச் செல்லையன் வாய் திறந்து பேசவில்லை. கூட்டத்தினரின் கோபத் தோற்றம் அவனைத் திகைக்கச் செய்துவிட்டது.

ஓடிவந்த கூட்டத்தினரில் உயரமான ஒருவன் பரபரப்புடன் போய்க் குதிரையின் காலடியில்கிடந்த ஒரு துணிமூட்டையை இருகைகளாலும் எடுத்து வந்து குழாயருகில் வைத்துக் குனிந்து பார்த்தான்; தொட்டுப் பார்த்தான்; பிறகு ஓலமிட்டு அழத்

தொடங்கினான். அம் மூட்டை, துணியால் மூடப்பட்டிருந்த ஒரு குழந்தை!

செல்வநாயகம், வண்டிப் பலகணியின் வழியாக அதைப் பார்த்தார். அருகிலிருந்த ஒருவனை நோக்கி, "அவன் ஏன் அப்படி ஊளையிடுகிறான்? அது அவன் குழந்தையா?" என்று கேட்டார்.

"ஆமாம், பிரபு!" என்றான் அம் மனிதன்.

அதற்குள் அழுது கொண்டிருந்தவன் வண்டியருகில் ஓடிவந்தான். பிரபு, இடையில் சொருகியிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துப் பிடித்துக்கொண்டார். அவன் பிரபுவை நோக்கி வெறிபிடித்தவன் போல் "என் குழந்தை இறந்து போயிற்று! இறந்து போயிற்று!!" என்று கத்தினான். கூட்டத்தினர் வண்டியைச் சூழ்ந்து கொண்டனர்.

பிரபு அலட்சியமாக அவனைப் பார்த்துக் கொண்டே, பணப்பையை எடுத்துத் திறந்து ஒரு பொன் நாணயத்தை எடுத்து, "உன் குழந்தையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள முடியவில்லையா? இப்படி என் குதிரைக்குக் கேடு செய்துவிட்டாயே! இந்தா, இதை எடுத்துக் கொள்!" என்று நாணயத்தைவீசி யெறிந்தார். உடைந்துபோன மண் பாண்டத்திற்கு ஈடாகப் பணம் கொடுப்பது போல் அலட்சியமாக அவர் எறிந்ததைக் கண்ட கூட்டத்தினர் அந் நாணயத்தை வெறுப்புடன் பார்த்தனர். ஒருவரும் அதை எடுக்கவில்லை. குழந்தையின் தந்தை, "என் பிள்ளை போய்விட்டதே!" என்று

கோவென்று கதறினான்; நாணயத்தைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

அப்பொழுது தேநீர்க் கடை முதலாளியான வளவன் அங்கே வந்தான். அவனைக் கண்டதும், பிரபுவின் கையிலிருந்த துப்பாக்கிக்கு அஞ்சிச் செயலற்றிருந்த கூட்டத்தினர் சுறுசுறுப்புடன் விலகி வழிவிட்டனர். நெட்டையன் தன் குழந்தையை அவனிடம் காட்டி, 'வண்டியில் அகப்பட்டு இறந்து விட்டது!' என்று அழுதான்.

"வீரப்பா! அழாதே! தைரியமாய் இரு! உயிரோடு இருப்பதைவிட அது இறந்ததே நல்லது. உன் வறுமையில் ஒருமணி நேரமாவது அது இன்பமாய் வாழ முடியுமா?" என்றான் வளவன். அலட்சியமாக.

புன்னகையுடன் அவனைப் பார்த்த பிரபு, "வேதாந்திபோல் பேசுகிறாயே! நீ யாரப்பா?" என்று அன்பொழுகக் கேட்டார்.

வளவன் தன் பெயரையும் தொழிலையும் தெரிவித்தான். உடனே பிரபு, "இந்தா, இதை நீ எடுத்துக்கொள்!" என்று மற்றொரு பொன் நாணயத்தை எறிந்துவிட்டு, "செல்லையா! வண்டியை விடு!" என்றார். வண்டி புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றது. அப்பொழுது ஒரு நாணயம் திறந்திருந்த பலகணியின் வழியாக வேகமாய் உள்ளே வந்து பிரபுவின் மேல் விழுந்தது.

அதைக் கண்டதும் கடுஞ்சினங் கொண்ட பிரபு வண்டியை நிறுத்தச் சொல்லித் தலையை வெளியே

நீட்டி "ஏ, நாய்களா! நாணயத்தை எறிந்தவன் யார்? உங்கள் எல்லாரையும் சுட்டுக்கொன்று விடுவேன்! சொல்லுங்கள்!" என்று துப்பாக்கியைக் கையில் பிடித்துக் கொண்டு கத்தினர். வளவன் அலட்சியமாக அவரைப் பார்த்துக் கொண்டு நின்ருன். கூட்டத்தினர் யாவரும் வாய்திறவாமல் வளவனையும் பிரபுவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண் டிருந்தனர். வளவன் அருகில் அல்லி நின்று கொண்டிருந்தாள். பிரபுவை உற்றுப் பார்த்த அவள் பின்னல் வேலையில் ஈடுபட்டாள்.

மாலைப்பொழுது நெருங்கிவிட்டதால் இனி அங்கு இருப்பது சரியன்றெனக் கருதிய பிரபு, கூட்டத்தினரை வெறுப்புடன் ஒருமுறை பார்த்துவிட்டு, 'விடு வண்டியை!' என்று ஆசனத்தில் சாய்ந்தார்.

விரைந்து புறப்பட்ட வண்டி, சிறிது தூரம் சென்றதும் மேடான வழியில் ஏறியது. குதிரைகள் திணறி இழுத்தன. மேட்டின் மறு பக்கத்தில் வண்டி இறங்கும்பொழுது கதிரவனும் மேற்கு வானில் இறங்கிவிட்டான். மாலைப் பொழுதின் மங்கிய ஒளியில் தம் ஊர் தொலைவில் காட்சியளிப்பதைக் கண்ட பிரபு, கொஞ்ச நேரத்திற்கு முன் உள்ளத்தில் கொதித்துக் கொண்டிருந்த கோபக்கனல் தணிந்து, இருபுறமும் பார்த்து ஆறுதலடைந்தார்.

# 7. வீரப்பனின் வஞ்சம்

செல்வ புரத்திற்குச் செல்லும் வழியில், இடை யிடையே விளங்கிய இரண்டொரு பெரிய வீடுகளைத் தவிர, எங்கும் குடிசை வீடுகளே நிரம்பி யிருந்தன. ஆங்காங்குள்ள கடைகளில் எளிய மக்கள் நின்று கொண்டிருந்தனர். தூரத்திலுள்ள உயரமான இடத் தில் பிரபுவின் பெரிய மாளிகை கம்பீரமாகக் காட்சி யளித்தது. அதனருகிலுள்ள ஒரு கோயிலும், பக்கங்களிலிருந்த சிறிய மாளிகைகளும் அந்தி வெளிச்சத்தில் அழகாய்த் தோன்றின.

பிரபுவின் வண்டியைக் கண்டதும் குடிசை வீடு களின் வெளியே யிருந்த எளியவர்கள் எழுந்து நின்று பணிவுடன் வணங்கினார்கள். குடிசைக்குள் வேலை செய்துகொண் டிருந்த பெண்களும் தத்தம் வேலைகளை நிறுத்திவிட்டு அச்சத்துடன் வந்து வணங் கினார்கள். அவ்வாறு வணங்காவிட்டால் பிரபுவின் கோபத்திற்கு ஆளாகித் துன்பமடைய நேரும் என் பதை நன்கறிந்தவர்கள் அவர்கள். தம்மை வணங்கி நிற்கும் மக்களைப் பார்த்துத் திருப்தியடைந்த பிரபு, வண்டி யருகில் கூட்டமாய் நடந்துவந்து மரியாதை செய்யும் சிலரை உற்றுப் பார்த்தார். அப்பொழுது குள்ளமான ஒருவன் வந்து அக்கூட்டத்தில் சேர்ந்து கொண்டான்.

அவன், சாலையைச் செப்பனிடும் வேலை செய் வோரைக் கண்காணிக்கும் அலுவலாளன்; **காளி முத்து** என்னும் பெயரினன். அவனைக் கண்டதும்

பிரபு வண்டியை நிறுத்தச் சொல்லி, அவனை இழுத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார். கூட்டத்தினரில் சிலர் அவனைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய்ப் பிரபுவின் முன்னிலையில் நிறுத்தினர். வண்டியின் பின்புறத்தையே பார்த்துக்கொண் டிருந்த காளிமுத்து, பிரபுவின் முன்னால் நிறுத்தப்பட்டதும் திகில் கொண்ட முகத்தினனாய் அவரை நோக்கினான். எட்ட நின்றவர்களெல்லாம் இதைக்கண்டதும் நெருங்கி வந்து நின்றார்கள்.

"நான், சாலையில் வரும் பொழுது உன்னைப் பார்த்தேனல்லவா ?" என்று காளிமுத்துவை உருத்து நோக்கி அதட்டிக் கேட்டார் பிரபு.

"ஆமாம், பிரபுவே !" என்றான் காளிமுத்து. அவன் குரல் நடுங்கியது.

"மேட்டில் ஏறும் பொழுது இரண்டுமுறை பார்த்தேன். இல்லையா ?"

"ஆமாம், பிரபுவே !"

"ஒவ்வொரு முறையும் வண்டியை உற்றுப் பார்த்தாயல்லவா !"

"ஆமாம், பிரபுவே !"

"எதற்காக அப்படிப் பார்த்தாய் ? முதுகுத் தோலை உரித்துவிடுவேன். உண்மையைச் சொல் !"

பிரபுவின் குரலில் சினம் மிகுந்திருந்தது. காளிமுத்து நடு நடுங்கிவிட்டான்.

"மன்னிக்க வேண்டும், பிரபுவே ! வண்டியின் பின் புறத்தில் ஒருவன் தொற்றிக்கொண்டிருந்தான்.

அவனைத்தான் நான் பார்த்தேன். அது வேடிக்கையாயிருந்ததால் பார்த்தேன்; வேறென்றுமில்லை.''

"கழுதை! உனக்கு வேடிக்கையாய் இருந்ததா? அவன் யார்? எப்படி இருந்தான்? இந்த ஊர்க்காரனா?''

"பிரபுவே! அவனை எனக்குத் தெரியாது; இந்த ஊரில் நான் பார்த்ததேயில்லை. அவன் உயரமாய் வெளுத்திருந்தான்.''

"நாயே! நல்ல காரியம் செய்தாய்! ஒரு திருட்டுப் பயல் என் வண்டியில் ஒளிந்து வந்திருக்கிறான். நீ பார்த்துக்கொண்டு உன் வாயைத் திறக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்திருக்கிறாய்! அவன் எப்பொழுது வண்டியிலிருந்து இறங்கினான்? உனக்குத் தெரியுமா?''

"பிரபுவே! மேட்டில் வண்டி ஏறியதும் அவன் குதித்து ஓடி விட்டான்!''

"அதை நீ வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தாய்! அப்படித்தானே? எருமை மாடே! உனக்குக் கேடுகாலம் நெருங்கி விட்டது! முத்தையா! இவனைக் கட்டி இழுத்துக் கொண்டு போய்க் காவலில் வை! அந்தத் திருட்டுப் பயல் யாரென்பதை அறிய முயற்சி செய்! ஆள் அகப்பட்டால் பிடித்து எதற்காக வண்டியில் தொற்றி வந்தான் என்பதை விசாரி!'' என்று கூறியதும், பிரபு வண்டியை விடச் சொல்லிப் போனார்.

முத்தையன் என்பவன் பிரபுவின் கீழ். அலுவல் பார்க்கும் அவ்வூர் அதிகாரி. நிலபுலங்களின் வேலைகள் நன்ருய் நடைபெறும்படி மேற்பார்வையிடுவதும், குடிமக்களிடம் வரிவசூல் செய்வதும், செல்வ நாயகம் ஏவும் பிறவேலைகளைச் செய்வதும் அவன் பொறுப்பு. இரண்டு நாட்களுக்குமுன் இன்பபுரிக்குச் சென்றிருந்த பிரபு வந்துவிட்டார் என்பதை யறிந்ததும் விரைந்து அங்குவந்து அவரை வணங்கிவிட்டு நின்றுகொண்டிருந்தான். முடிவில் பிரபு கட்டளையிட்டுச் சென்றதும் அவன் காளிமுத்துவை அழைத்துச் சென்ருன்.

செல்வநாயகம் பிரபுவின் வண்டி ஒருமைல் தூரம் ஓடிச் சென்று அவர் மாளிகையின் வாயிலில் நின்றது. இருட்டி விட்டதால் வாயிலில் விளக்கு ஏற்றப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. வாயிற் காவலர்கள் கைவிளக்கை எடுத்துக் கொண்டு வண்டியருகில் வந்து, பிரபு இறங்கியதும் அவருக்குமுன் வெளிச்சம் காட்டிக் கொண்டு போனுர்கள். அவர்களின் பின்னுல் சென்ற பிரபு, உள்ளே நுழைந்து மாடிப்படிகள் ஏறி மேலே சென்ருர். மிகப் பெரிய வாயிற் கதவு உடனே சாத்தப்பட்டது. மேன்மாடியில் அச்சமூட்டும் வாள், ஈட்டி முதலிய கொடிய ஆயுதங்கள் நிறைந்த அறையைக் கடந்து பிரபு தமது அறையை யடைந்தார். பகட்டான தமது ஆடைகளைக் களைந்து விட்டு மாற்றுடையை அணிந்து கொண்ட பிரபு, தமது நாற்காலியில் அமர்ந்தார். அருகிலிருந்த மேசை மீது இருவர்க்குரிய உணவு தனித்தனியே தயாராய் வைக்கப்பட்

டிருந்தது. சமையற்காரன் சிறிது தூரத்தில் அடக்க வொடுக்கமாய் நின்று கொண்டிருந்தான்.

"இன்னும் அவன் வரவில்லையே?" என்று மேசையைப் பார்த்துக் கொண்டே கேட்டார் பிரபு.

அவர் பின்னலேயே வந்து மற்ருேர்புறம் நின்று கொண்டிருந்த பிரபுவின் செயலாளன், "இல்லே; இன்னும் அவர் வரவில்லே" என்ருன் பணிவாக.

"ஒருகால் இன்றைக்கு அவன் வரமாட்டான். ஆயினும் உணவு இங்கேயே இருக்கட்டும்" என்று கூறிக்கொண்டே தமக்குரிய உணவை உண்ணத் தொடங்கினர். கையிலெடுத்த உணவைத் தட்டில் வைத்து விட்டுத் திகிலடைந்த முகத்தினராய்ப் பக்கத்திலிருந்த பலகணியை நோக்கி, "என்ன அது?" என்ருர்.

"என்ன எசமான்?" என்று கேட்டுக்கொண்டே செயலாளன் ஒன்றும் விளங்காமல் பலகணியருகே ஓடினன். சமையற்காரனும் அவனேத் தொடர்ந்தான். பிரபு எதையோ கண்டு அஞ்சுகிருர் என்று செயலாளனுக்குத் தோன்றியது.

"திரைக்கு வெளியே கறுப்பாய் ஒரு மனிதனின் நிழல்போல் தெரிந்தது. திரையை விலக்கி விட்டுப் பார்!" என்று உள்ளத்தின் நடுக்கத்தைக் காட்டாமல் உரைத்தார், பிரபு.

செயலாளன் திரையை விலக்கிவிட்டு வெளியே தலேயை நீட்டிச் சுற்று முற்றும் பார்த்தான். பிறகு திரும்பி, "ஒன்றுமில்லேயே எசமான்! மரம்தான் அவ்வாறு தெரிந்திருக்கும்!" என்று தெரிவித்தான்.

" சரி ; பலகணியை மூடு !" என்று கூறிய பிரபு, அமைதியடைந்து உணவில் ஈடுபட்டார். அப்பொழுது கீழே வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்டது.

நிமிர்ந்து உட்கார்ந்த பிரபு அதைக் கூர்ந்து கவனித்து, " அவன் வந்து விட்டான் போலிருக்கிறது. நீ போய் அவனை இங்கே வரச்சொல் !" என்று செயலாளனை அனுப்பினார்.

வண்டியில் வந்தவன், பிரபுவின் அண்ணன் மகன் **இளங்கோவன்** என்பவன். மணிபுரியில் அவனையறிந்தவர்கள் **மதிவாணன்** என்றழைப்பார்கள். ஏதோ வொரு காரணத்தால் அவன் தன் பெயரை இவ்வாறு மாற்றி வைத்துக் கொண்டிருந்தான். செயலாளன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் மேலே வந்தான்.

இளங்கோவனைக் கண்ட பிரபு முகமலர்ந்து வரவேற்று அமரச் சொன்னார். ஆனால் அம் முகமலர்ச்சியில் அன்பு மலர்ச்சியின் அறிகுறி தோன்றவில்லை ; குரலிலும் அது தெரியவில்லை. இளங்கோவன் நாற்காலியில் அமர்ந்ததும், " நீங்கள் இன்பபுரியிலிருந்து இன்று மாலைதான் புறப்பட்டு வந்தீர்களா ?" என்று கேட்டான்.

" ஆமாம். நேற்றே உன்னை எதிர்பார்த்தேன் ; இன்றைய விருந்தின் போதும் பார்த்தேன். காணவில்லை. விருந்து முடிந்ததும் புறப்பட்டு வந்தேன். நீ மணிபுரியிலிருந்து நேரே வருகிறாயா ?"

" ஆமாம். நீங்கள் இன்பபுரியிலிருந்து புறப்பட்டுவிட்டீர்களென்பதைக் கொற்கைக்கு வந்ததும்

கேள்விப்பட்டேன். ஆகையால் இன்பபுரிக்குச் செல்லாமல் நேரே வந்து விட்டேன்."

"அது சரி. உணவைச் சாப்பிடு" என்ருர் பிரபு. இளங்கோவன் உண்ணத் தொடங்கினன்.

உணவு முடிந்ததும் சமையற்காரன் மேசையின் மீதிருந்த தட்டுகளையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டான். பிரபுவும், மகனும் தனிமையிலிருந்தனர்.

இளங்கோவன் தன் சிறிய தந்தையை நோக்கி, "நான் எதன் பொருட்டு மணிபுரிக்குச் சென்றேனே, அதன் பொருட்டே திரும்பிவந்திருக்கிறேன். அந்த வேலை என்னை எதிர்பாராத ஆபத்தில் சிக்கச் செய்து விட்டது. உயிரையே இழக்கும்படியான அந்த ஆபத்திலிருந்து மயிரிழையில் தப்பினேன். ஆனல், அந்தத் தூய நோக்கத்திற்காக எனது உயிரையும் மதிக்கவில்லை" என்று உணர்ச்சி ததும்பக் கூறினன்.

பிரபுவின் முகம் வியப்பால் விரிந்தது. இளங்கோவனைக் கூர்ந்து நோக்கிக் கொண்டே மெல்லத் தலையை யசைத்தார். வெறுப்புணர்ச்சி மேலோங்க அவன் தொடர்ந்து பேசினன் :

"நாம் நமது குடும்பத்தின் பெருமையைக் கொடுமைச் செயல்களின் அடிப்படையில் வளர்த்து வந்திருக்கிறோம்; அதைப் பெருமையென்று தவருகக் கருதிக் கொண்டிருக்கிறோம்; உண்மையில் சிறுமைதான் வளர்ந்திருக்கிறது. மருத நாட்டிலேயே நம் குடும்பத்தினரைவிட வெறுப்புக்கு ஆளானவர்கள்

வேறு எவரும் இருக்க முடியாதென்று எண்ணு கிறேன்."

" அது நல்லதுதான். கீழ் மக்களின் வெறுப்புத் தானே அவர்கள் நம்மைப் போன்ற மேன்மக்களுக் குச் செலுத்தும் கப்பம்!"

" கீழ் மக்கள்! அவர்கள் உழைத்து உண்கிறார் கள். நாம் அவர்களின் உழைப்பை உண்கிறோம்! யார் கீழ் மக்கள்? உழைப்பவர்கள் தம் உழைப்பின் முழுப்பயனையும் உண்ணுதற்கு உரிமையின்றி உள் ளம் குலைந்து உடல்மெலிந்து வாடுகிறார்கள்! உழைக் காதவர்கள் அவர்களின் உரிமையைப் பறித்து உடல் நலுங்காமல் உண்டு களித்து அவர்களைச் சாடுகிறார் கள் யார் கீழ் மக்கள் ?"

செல்வநாயகம் வாய்திறந்து பேசவில்லை; இளங் கோவனைப் பார்த்துக் கொண்டு அமைதியாகவே இருந்தார். அவன் மேலும் பேசினான் :

" நமது ஊரில் வாழ்வோரின் முகத்தில் எப் பொழுதும் அச்சமே குடிகொண்டிருக்கிறது. அது நமது கொடுமை நிறைந்த அதிகாரத்தின் அறிகுறி."

" அதிகாரம்தான் நமது பரம்பரையின் ஆணி வேர்! அந்த அதிகாரத்தால் விளையும் அச்சந்தான் கீழ்மக்களை அடங்கி வாழச் செய்கிறது! கசையடி தான் அந்தக் கழுதைகளை ஒழுங்குபடுத்துகிறது! இந்த அதிகாரமும் கசையடியுமே ஒழுங்காக வாழ அவர்களுக்கு உதவி செய்கின்றன. இல்லாவிட்டால் அந்த நாய்கள் கெட்டுப் போவார்கள், தெரியுமா ?

இளம் பருவ முறுக்கில் இந்த உண்மையை உணராமல் நீ கொடுமை என்று கூறுகிருய் !"

" நான் உண்மையை உணர்ந்தே பேசுகிறேன். எளியவர்களை வாட்டி வதைப்பதையே வழக்கமாய்க் கொண்டு அப்பழங் கொள்கையில் ஊறிப் போனவர்களுக்கு உண்மை நிலையை உணரமுடியாது. உங்கள் தத்துவம் சரியன்று. அது எனக்கு வேண்டாம். நான் இங்கே இருக்க விரும்பவில்லை. நான் தியாகம் செய்து விட்டுப் போகும்படி இங்கே என்ன இருக்கிறது ? " கொடுமை நிறைந்த அதிகாரம் ; பாவம் மிகுந்த சொத்து. இந்த அதிகாரமும் சொத்தும் என்றேனும் எனக்கு உரியனவாக வருமாளுல், இவற்றின் மீது இருபது ஆண்டுகளாக ஏறியிருக்கும் சாபச் சுமையை ஒழிக்க வழிசெய்வேன். இங்கு வாழும் மக்களெல்லாம் இன்பவாழ்விலே இருக்கச் செய்வேன். ஆளுல், பாவத்தில் வளர்ந்த இச் சொத்தெல்லாம் என்னுடையனவல்ல !"

" உன் புதிய கொள்கைப்படி செய்வதாளுல் நீ எவ்வாறு வாழ்வாய் ?" என்ருர் செல்வநாயகம், புன்முறுவலுடன்.

" நான் வேலை செய்து வாழ்வேன்."

" மணிபுரியிலா ?"

" ஆமாம். அதளுல் நமது குடும்பத்தின் பெயருக்குக் குறைவு நேருமென்று நீங்கள் கருதலாம். அவ்வாறு நேராதென்று உறுதி கூறுகிறேன். நான் வேருெரு பெயரிலேயே மணிபுரியில் இருப்பேன். ஆகையால், நீங்கள் அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை."

"சரி; பிறகு ஓய்வாகப் பேசிக் கொள்வோம். போய்ப் படுத்துத் தூங்கு" என்று, செல்வநாயகம் பெருந்தன்மையான முறையில் மலர்ந்த முகத்துடன் கூறிக்கொண்டே வேலைக்காரனைக் கூப்பிட்டார். அவன் வேகமாய் வந்து விளக்கைக் காட்டினன். இளங்கோவன் எழுந்து அவன்பின் தொடர்ந்து கீழே இறங்கிச் சென்றான்.

செல்வநாயகம் மேன்மாடியிலிருந்த தமது படுக்கையறையை யடைந்து மஞ்சத்தில் படுத்தார். நெடுநேரம் வரையில் அவர் உறக்கம் கொள்ளாமல் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தார். நெட்டை மனிதன்—வீரப்பன்—அழுதுகொண்டு நின்றது, அவனுடைய இறந்த குழந்தை தரையில் கிடந்தது, தண்ணீர்க் குழாயருகில் எளிய மக்கள் திரண்டு நின்றது, பொன் நாணயம் தன்மீது விழுந்தது, வளவன் அலட்சியமாகத் தன்னைப் பார்த்துக் கொண்டு நின்றது ஆகிய மாலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் அவரது உள்ளத் திரையில் ஓவியம் போல் எழுந்து ஒவ்வொன்றாய்க் காட்சியளித்தன. இடையிடையே இளங்கோவனின் புதிய கொள்கைப் பேச்சை எண்ணி அவர் வருந்தினர். இவ்வாறு பல வகை எண்ணங்களால் நிம்மதி யற்றிருந்த அவர், பன்னிரண்டு மணிக்குமேல் சோர்வு மிகுதியால் ஆழ்ந்த உறக்கத்தில் அழுந்தினர்.

மறுநாட் காலையில் நெடுநேரம் வரையில் செல்வநாயகம் பிரபு எழுந்திருக்கவில்லை. அதனால் அவரைப் பார்க்க வந்த வேலைக்காரன் ஒருவன் அறையில்

நுழைந்து எட்டிப் பார்த்ததும், அலறிக்கொண்டு ஓடினன். அக்கூக்குரலால் மாளிகையிலிருந்த எல்லாரும் திகிலுடன் ஓடிவந்து பார்த்தனர். செல்வநாயகம் மஞ்சத்தில் இறந்து கிடந்தார். அவர் மார்பில் கூர்மையான கத்தியொன்று குத்தப்பட்டிருந்தது.

நகரக் காவலர்கள் ஓயாது புலன் விசாரணை செய்து ஆறுமாதங்களுக்குப் பிறகு வீரப்பனைப் பிடித்துத் தண்டித்த பின்னரே, பிரபுவைக் கொன்றவன் வீரப்பனே என்பது வெளியாயிற்று.

## 8. மதிவாணனின் அன்பு

தேனடையில் ஈக்கள் மொய்த்திருப்பதுபோல் மணிபுரியில் மக்கள் நிறைந்திருந்தனர். ஆயினும், மருதவாணர் மனிதர் நடமாட்டம் அதிகம் இல்லாத ஒதுக்கான இடத்திலுள்ள சந்தொன்றில், அழகிய சிறியதோர் இல்லத்தில் தமது மகள் மலர்விழியுடன் வாழ்ந்துவந்தார். மருத்துவத் தொழிலில் தேர்ந்த அனுபவமும் சிறந்த அறிவுமுடைய அவர் மீண்டும் தம் இல்லத்திலேயே அத் தொழிலை நடத்தி வந்தார். அதில் அவருக்குப் போதுமான வருமானம் வந்துகொண்டிருந்தது.

இப்பொழுது மருதவாணரைக் காண்பவர், இன்ப புரியிலுள்ள இருண்ட கிடங்கில் செருப்புத் தைத்துக்கொண்டிருந்த கிழவர் என்று சொல்ல முடியாது. வெள்ளிபோல் நரைத்த தலைமயிரும், முதிர்ந்த அறிவின் ஒளிவீசும் கண்களும், பெருமித

மான தோற்றமுமுடைய அவர்முகத்தில் புதுமையான பொலிவு ஏற்பட்டிருந்தது. இதற்குக் காரணம், மகளின் மாசற்ற அன்பில் திளைத்து வாழும் வாழ்வே எனலாம். ஆனால், பழைய துன்பவாழ்வின் நினைவு வந்துவிட்டால், களங்க மற்ற வானத்தில் திடீரென்று கருமேகங்கள் வந்து கவிந்து கொள்வதுபோல, ஒளி வீசும் அவர் முகத்தில் துன்பநிழல் படரும். அதிர்ச்சி தரும் நிகழ்ச்சி ஏதேனும் நேர்ந்தால், அவர் நிலைமை தடுமாறிவிடும். அப்பொழுது அவர் தம் நினை விழந்து பழைய நிலைமையில் செருப்புத் தைக்கும் வேலையில் ஈடுபட்டுவிடுவார்! அதன் பொருட்டுத் தம் படுக்கை யறையில் செருப்புத் தைக்கும் கருவி முதலிய வற்றை ஓரிடத்தில் வைத்திருந்தார்! ஆனால், மணி புரிக்கு வந்த சிறிது காலம் வரையில்தான் அவை பயன்பட்டன; பிறகு அவற்றிற்கு வேலையே இல்லா மற் போய்விட்டது!

மதிவாணனின் வழக்குக்குப் பின்னர், அவனும் மணவாளனும் மருதவாணரின் இல்லத்திற்கு வந்து போவது வழக்கமாய்விட்டது. இருவரும் சேர்ந்து வருவது கிடையாது. மணவாளன் எப்பொழுதோ ஒரு நாள் வருவான். கல கலப்பின்றி உட்கார்ந்திருப் பான். இரண்டொரு சொற்களைப் பேசிவிட்டுப் போய் விடுவான். அவன் போக்கைக் கண்டு மற்றவர்கள் வியப்படைவார்கள். அவன் ஏன் உற்சாகமின்றி யிருக்கிறான் என்பதைப் பற்றி எண்ணுவார்கள். ஆனால், அதற்குக் காரணம் என்னவென்று ஒருவருக் கும் விளங்கவில்லை.

செல்வநாயகம் பிரபு மறைந்து ஓராண்டு கழிந்து விட்டது. மதிவாணன் இன்ப புரியிலுள்ள தனது அளவற்ற செல்வத்தை, அழுக்குள்ள பாத்திரத்தி லிருக்கும் அமுதத்தை அருவருப்பதுபோல் வெறுத்து ஒதுக்கிவிட்டு, மணிபுரியிலேயே தங்கியிருந்து ஆசிரி யத் தொழில் செய்து, அதிற்கிடைக்கும் சிறு ஊதி யத்தைக் கொண்டு மன நிறைவுடன் வாழலானுன். ஓய்வு நாளில் மருதவாணரின் இல்லத்தை யடைந்து மலர்விழியுடன் பேசிக் களிப்பதில் அவன் பேரவாக் கொண்டிருந்தான். நீதி மன்றத்தில் நீர் மல்கிய கண் களுடன் நின்ற அவளேக் கண்டது முதல் அவளிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தான், மதிவாணன். அவனது வருகையால் மலர்விழி மனம் பூரிப்பாள். அவளும் மதிவாணனிடம் அன்பு கொண்டிருந்தாள் என்பதை அவள் முகம் புலப்படுத்தியது.

மருதவாணர், மதிவாணன் வருங்கால் முக மலர்ந்து அன்புடன் வரவேற்பார்; மகிழ்ச்சியுடன் இன் மொழி பேசுவார். ஆயினும், அவனேக் காணும் பொழுது ஏதோ வொரு பழைய நினைவு அவர் உள் ளத்தில் தோன்றி, அதன் நிழல் முகத்தில் திரை யிடும். ஆனுல், நொடிப்பொழுதில் அது மறைந்து விடும். பிறகு, அந் நினேவே இல்லாதவர்போல் மதி வாணனுடன் மகிழ்ந்து உரையாடுவார்.

ஒரு நாள் மாலே, மலர்விழியும் பெரியநாயகியும் வீட்டிற்கு வேண்டிய பொருள்களே வாங்கும் பொருட் டுக் கடை வீதிக்குச் சென்றிருந்தனர். மருதவாணர் மட்டும் வீட்டில் தனியே இருந்தார். அப்பொழுது

மதிவாணன் அங்கு வந்தான். அவனைக் கண்ட மருத வாணர், "வா, மதிவாணா! நாலைந்து நாட்களாய் உன்னைக் காணவில்லையே! வேலை மிகுதிபோலும்!" என்று வரவேற்று அருகில் அமரச் செய்தார்.

"புதிதாகச் சில நூல்களைப் படிக்க வேண்டி யிருந்தது. அதனால் வருவதற்கு ஓய்வு கிடைக்க வில்லை. மலர்விழி நலந்தானே?" என்றான் மதி வாணன்.

"நலந்தான். பெரியநாயகியுடன் கடைவீதிக்குச் சென்றிருக்கிறாள். விரைவில் வந்து விடுவாள்."

"டாக்டர்! மலர்விழி இவ்வேளையில் வீட்டில் இருக்கமாட்டாள் என்பதை யறிந்தே நான் வந்திருக் கிறேன். நான் தங்களிடம் தனிமையில் பேசவேண்டு மென்று விரும்பினேன். அதற்கு இன்று வாய்ப்புக் கிட்டியிருக்கிறதென்று மகிழ்கிறேன்."

மருதவாணர் மறுமொழி கூறாமல் மதிவாணன் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தார்.

"டாக்டர்! நான் தங்கள் அன்புக்குரிய மகள் மலர்விழியை மனமார நேசிக்கிறேன்; என் உயிர் போல் மதிக்கிறேன். இதைத் தங்களிடம் தெரிவிப் பதில் என் உள்ளம் பூரிப்படைகிறது."

"மதிவாணா! எவ்வளவு நம்பிக்கையுடன் உறுதி யாகப் பேசுகிறாய் நீ! உன் மொழிகளைக் கேட்டு என் மனம் திருப்தியடைகிறது. மலர்விழி உன்னை நேசிக் கிறாளென்று நீ நினைக்கிறாயா?"

"நான் அவ்வாறு உறுதியாய்ச் சொல்ல முடியாது. நாங்கள் பொதுவாகப்பேசிப் பழகுகிறோம்."

" அப்படியானால், நான் ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென்று நீ எதிர்பார்க்கிருயா ?"

" ஆமாம். நான் இப்பொழுது என் உள்ளத்தைத் திறந்து தங்களிடம் என் விருப்பத்தை வெளியிட்டு உரைத்தேன். அதுபோல், மலர்விழி எப்பொழுதேனும் தங்களிடம் தன் மனக்கருத்தை வெளியிட்டுப் பேச நேர்ந்தால், அப்பொழுது என் மனநிலையை அவளுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். அவ்வளவு தான்."

" மதிவாணு! இதில் எனக்குச் சிறிதும் தடையில்லை. மலர்விழி உன்னை நேசிப்பதாகச் சொன்னால், அவளை உனக்குரியவளாக அளித்து விடுகிறேன். அவளுடைய மகிழ்ச்சிதான் எனது இன்ப வாழ்வு. அவள் கருத்துக்கு மாருக ஒன்றும் செய்யேன். அவ்வளவு தானே ?"

" டாக்டர் ! தங்கள் பெருந்தன்மையைக் கண்டு மகிழ்கிறேன். மிக்க நன்றி. தாங்கள் என்னை உண்மையாக நம்புவதானல் தங்களிடம் தெரிவிக்க வேண்டிய இன்னொரு செய்தியிருக்கிறது."

"'என்ன, அது ?"

"'மதிவாணன்' என்பது என்னுடைய உண்மையான பெயரன்று. நான், ஏன் மாறுபெயர் பூண்டு மணிபுரியில் இருக்கிறேன் என்பதையும், எனது உண்மைப் பெயரையும் தங்களிடம் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்."

" வேண்டாம் ! வேண்டாம் !!"

"இல்லை; நான் எதையும் தங்களிடம் ஒளிக்க விரும்பவில்லை. நான் சொல்வதைக் கேட்ட பின்னர், தங்கள் கருத்துப்படி முடிவு செய்வதே தக்கதென்று கருதுகிறேன்."

மதிவாணன் பேசுவதைக் கேட்க விரும்பாதவராய், மருதவாணர் தம் இருகைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டார். அதைப் பார்த்தும் அவன் தன் பேச்சை நிறுத்தாமல், "என் உண்மைப் பெயர்...." என்று தொடங்கினான். உடனே மருதவாணர் அவன் வாயைத் தன் கையால் மூடி, "சொல்ல வேண்டாம். நான் கேட்கும்போது சொல்லலாம். உன் விருப்பம் நிறைவேறி மலர்விழி உன்னை மணந்துகொள்ள உடன்பட்டால், உன் திருமண நாளன்று சொல்; கேட்கிறேன். அதுவரையில் உன் செய்திகளைச் சொல்லவேண்டாம். சரிதானா?" என்றார். மதிவாணன் 'சரி' யென்றான். அவன், தன் செய்திகளைக் கேட்க மருதவாணர் பிடிவாதமாக மறுப்பது ஏனென்று விளங்காமல் வியப்படைந்தான்.

மருதவாணர் அவனை நோக்கி, "மதிவாணா! மாறாக ஒன்றும் நினைக்காதே. உன் செய்திகளை இப்பொழுது கேட்க வேண்டாமென்று என் உள்ளுணர்வு தடுக்கிறது. மலர்விழி வரும் நேரம் நெருங்கிவிட்டது. அதற்குள் நீ போய்விடு. நீ எல்லா நலனும் பெற்று நீடுவாழக் கடவுள் கருணை செய்வாராக!" என்று வாழ்த்துக் கூறி அனுப்பினார்.

மதிவாணன் புறப்பட்டுப் போன பொழுது இருட்டி விட்டது. அரைமணி நேரத்திற்குப் பிறகு

48825
O51:348
MADURAI UNIVERSITY LIBRA

மலர்விழி வீட்டிற்கு வந்தாள். வந்ததும் மருதவாண ரின் அறைக்குள் நுழைந்து பார்த்தாள். அங்கு அவரைக் காணுமையால், 'அப்பா' என்று அழைத் தாள். மறுமொழியில்லை. ஆனால், அவருடைய படுக்கையறையிலிருந்து 'லொட், லொட்' என்றஓசை கேட்டது. மலர்விழி மெதுவாக அங்குச் சென்று எட்டிப்பார்த்தாள். உடனே அச்சத்தால் 'ஐயோ' என்று அலறிக்கொண்டு ஓடி வந்தாள். அவள் அங்குக் கண்ட காட்சி என்ன ? மருதவாணர் செருப் புத் தைத்துக் கொண்டிருந்தார் !

மருதவாணர் மணிபுரிக்கு வந்தபிறகு ஓராண்டு வரையில் எத்தனையோ முறை தம் பழைய துன்ப நினைவால் உந்தப் பெற்று இவ்வாறு செருப்புத் தைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். அப்பொழுது மகளைப் பற்றிய நினைவே அவருக்கு இருக்காது. அதைக் கண்டு மலர்விழி மனம் வருந்துவாள். ஆயினும் அவள், தன் தந்தையின் அருகிலிருந்து அன்புடன் இன்மொழி பேசிச் சிறிது சிறிதாக அவர் துன்ப நினைவை மாற்ற முயல்வாள். அதனால் மருத வாணரும் விரைவில் தெளிவடைந்து மகளுடன் மகிழ்ந்து பேசத் தொடங்கி விடுவார். இவ்வாறு ஓராண்டு முயற்சியில் தன் தந்தையின் மனநோயை அறவே அகற்றி வெற்றி பெற்றுவிட்டாள், மலர்விழி. மகளின் அன்பு மந்திரசக்திபோல் வேலை செய்து மருதவாணரைப் புதிய மனிதராக மாற்றிவிட்டது. அதனால் நாலைந்து ஆண்டுகளாய்ச் செருப்புத் தைக் கும் கருவிகளுக்கு வேலையில்லாமல் போய் விட்டது. 'நமது தந்தை தம் துன்ப நினைவை மறந்து உடம்பு

தேறிவிட்டார். இனிக் கவலையில்லை' என்று எண்ணி மகிழ்ந்திருந்த மலர்விழி, இப்பொழுது திடீரென்று அவர் பழைய நிலையில் செருப்புத் தைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால் அஞ்சிக் கலக்கங் கொள்ளாமல் என்ன செய்வாள்?

மலர்விழி நொடிப்பொழுதில் சமாளித்துக் கொண்டு, 'அப்பா!' என்று அழைத்துக்கொண்டே அறைக்குள் நுழைந்தாள். மகளின் குரலைக் கேட்டதும் மருதவாணர் கையிலிருந்த கருவியைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்து பார்த்தார். அவர் முகத்தில் துயரம் நிறைந்திருந்தது. மலர்விழி அதைக் கண்டு வருந்தினாளாயினும், ஒன்றும் அறியாதவள்போல் அவரிடம் அன்புடன் பேசினாள். அவர் வாய்திறந்து பேசாமல் அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டு மெல்ல எழுந்து நின்றார். மலர்விழி அவர் கையைப் பிடித்துக்கொண்டு வழக்கம்போல் இனிமையாக என்னென்னவோ கேட்டாள். மருதவாணர் அவற்றிற்கு ஒன்றும் விடை கூறாமல் மகள் கையை இறுகப் பிடித்துக் கொண்டு அறைக்குள்ளேயே உலாவினார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் தம் நினைவு வந்தவராய் மகளிடம் இன்முகங் காட்டிப் பேசத் தொடங்கினார். மலர்விழி களிப்படைந்தாள். ஆனால் நீண்ட காலத்திற்குப் பிறகு தன் தந்தை திடீரென்று இன்று தம் பழைய துன்ப நிலையையடைந்ததற்குக் காரணமென்ன என்பதை அறிய முடியாமல் கலங்கினாள்.

## 9. மணவாளனின் மனநிலை

நீதிமன்றத்தில் முதல் முறையாக மலர்விழியைக் கண்டபொழுது, மணவாளனின் உள்ளத்தில் இன்ன தென்று விவரிக்க இயலாத இன்பக் கிளர்ச்சி யொன்று தோன்றி, அவனைச் சிறிது நேரம் மெய் மறந்து நிற்கச் செய்துவிட்டது. எத்தனையோ இள நங்கையரை, எழில் மங்கையரை யெல்லாம் அவன் பார்த்திருக்கிருன். ஆனுல், ஒருவரையும் பொருட் படுத்தி ஏறிட்டுப் பார்த்ததுமில்லை. அத்தகைய அலட்சியப் போக்குள்ள அவன் மனத்தை மலர்விழி யின் தோற்றம் கவர்ந்து நிலைகுலையச் செய்துவிட் டதை நினைக்க அவனுக்கே வியப்பாயிருந்தது.

அதன் பிறகு, மணவாளன் இரண்டொரு முறை மலர்விழியைச் சந்தித்திருக்கிருன். அவளைக் காணும் பொழுதெல்லாம் தன் உள்ளத்தில் மின்சாரம்போல் ஒருவகை உணர்ச்சி தோன்றி உடல் முழுதும் பரவி மெய்சிலிர்க்கச் செய்வதை உணர்ந்து காரணம் விளங் காமல் மனம் குழம்பினுன். மலர்விழியின்பால் தன் உள்ளத்தில் தோன்றுவது இழிவான உணர்ச்சி யன்று, தூய்மையான அன்புணர்ச்சி என்பதைமட்டும் அவன் தெளிவாக அறிந்தான்.

மலர்விழி மதிவாணன்மீது அன்பு கொண்டிருக் கிருள் என்பதை, நீதிமன்றத்தில் அவள் மதிவாண னைப் பார்த்த பார்வையிலிருந்து அன்றே மண வாளன் நன்ருய் உணர்ந்திருந்தான். அத்தகைய அன்புணர்ச்சி தன்மீது அவள் கொள்ளவில்லை என்ப தையும் அவன் அறிந்திருந்தான். ஆகையால், அவ

ளிடம் தன்னையுமறியாமல் சுரந்தெழும் அன்புப் பெருக்கைக் கட்டுப்படுத்திக் கொள்வதே தக்கதென்று அவன் அறிவு அவனுக்கு எச்சரிக்கை செய்தது. அதனால் அவன் மலர்விழியை மறக்க மிகவும் முயன்ருன்; ஆனால், அதில் வெற்றிபெற முடியாமல் வேதனையே கொண்டான். மலர்விழியின் முகம் அவன் நெஞ்சில் நீங்காது நின்று வந்தது.

மணவாளனின் அன்பு மாசற்றது; தன்னலமற்றது. அது, மலர்விழியை மிக மேன்மையாக மதிக்கும்படி செய்தது; அவளைக் காண்பதிலும் அவளுடன் பேசுவதிலும் இணையற்ற இன்பம் இருப்பதாக எண்ணச் செய்தது. ஆகையால், மணவாளன் தனக்கு வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் மருதவாணரின் இல்லத்திற்குச் சென்று மலர்விழியைக் காண விழைந்தான். ஆனால், மலர்விழி அத்தகைய விழைவு கொள்ளாத நிலையில் அடிக்கடி செல்வது விரும்பத் தக்கதன்று என அவன் நுண்ணுணர்வு தடுத்ததால், அவளைச் சந்தித்த ஓராண்டிற்குள் இரண்டு மூன்று முறையே போய் வந்திருக்கிருன். அப்பொழுதும் அதிகம் பேசாமல் சிறிது நேரம் சோர்வுடன் இருந்துவிட்டே திரும்பியிருக்கிருன். ஆயினும், எத்தனையோ முறை அவள் வீட்டின் வீதிவழியே சென்றிருக்கிருன். அப்பொழுதெல்லாம் அந்த வீட்டை எட்ட நின்று கண்குளிரக் கண்டு களிப்பான். மலர்விழி அங்கிருக்கிருள் என்பதால் அந்த வீட்டையும், அந்த வீதியையும் அவன் விலை மதிக்க முடியாத பொருள்களைப்போல் மிக மதித்தான். அன்பின் விந்தைச் செயலை என்னென்று கூறுவது!

மலர்விழியின்மீது தான் கொண்ட அன்பு நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து தன் நெஞ்சை அழுத்தி வருவதைக்கண்ட மணவாளன், அச் சுமையை இறக்கினலொழியத் தனக்கு நிம்மதியிராது என்று முடிவு செய்தான். அதனல் ஒருநாள் மாலை, மருதவாணரின் இல்லத்தை நோக்கி நடந்தான். இப்பொழுது அவன் நடையில் வழக்கமான அலட்சி யப் போக்கோ, சோர்வோ காணப்படவில்லை. ஏதோ வொரு நோக்கத்தால் கிளர்ச்சியடைந்த மனத்தின னய்ச் சுறுசுறுப்புடன் சென்றன். மருதவாணரின் இல்லத்தை யடைந்ததும் மேலே ஏறிச்சென்று மலர் விழியின் அறைக்குள் தலையை நீட்டிப் பார்த்தான். அவள் தனியே மேசையருகிலிருந்த ஒரு நாற்காலி யில் அமர்ந்து புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண் டிருந்தாள். ஆள் அரவங்கேட்டதும் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

மணவாளனைக் கண்டாலே மலர்விழியின் மனம் ஒருவகையான குழப்ப நிலையை அடையும். அதற்குக் காரணம் என்னவென்று அவளுக்கே தெரியாது. ஒரு வேளை அவனுடைய பொறுப்பற்ற தன்மையும் ஒரு விதமாகப் பார்க்கும் பார்வையும் காரணமாயிருக் கலாம். அதனல் அவள் அவனை வெறுக்கவில்லை; அதற்கு மாருக அவனிடம் இரக்கமே கொண்டிருந் தாள்.

மணவாளனைக் கண்டதும் மலர்விழி மனம் குழம் பினளாயினும் அதைச் சமாளித்துக் கொண்டு, "வாருங்கள் மணவாளரே! நாற்காலியில் அமருங்

கள் !" என்று அன்புடன் வரவேற்ருள். மணவாளன் உள்ளே போய் அவளுக்கு எதிர்ப் பக்கத்திலிருந்த மற்ருெரு நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் முகம் மாறுபட்டிருப்பதைக் கண்ட மலர்விழி, " உங் களுக்கு உடல் நலம் சரியாயில்லையா ?" என்று பரி வுடன் கேட்டாள்.

" இல்லை, மலர்விழி ! என் வாழ்க்கையில் உடல் நலத்திற்கு இடமில்லை ! நான் ஒழுங்கற்றவன் தானே ?" என்று மணவாளன் ஏக்கம் நிறைந்த குரலில் தலையைக் குனிந்து கொண்டே கூறிப் பெருமூச் செறிந்தான்.

மலர்விழிக்கு அவன் பேச்சும் போக்கும் புதுமையா யிருந்தன. எதையும் பொருட்படுத்தாமல் பேசும் இயல்புடைய அவன், இன்று தன் வாழ்க்கை நிலையை யுணர்ந்து வருந்திக் கூறியது மலர்விழியின் மனத்தை இளகச் செய்து விட்டது. அதனுல், " உங்கள் வாழ்க்கையை ஒழுங்குள்ளதாக மாற்றிக் கொள்ளக் கூடாதா ?" என்று உருக்கத்துடன் கேட்டாள்.

" அது வீண்முயற்சி ; முடியாது."

" ஏன் முடியாது ?"

மணவாளன் மெதுவாகத் தலைநிமிர்ந்து மலர் விழியை அன்புடன் பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் ததும்பியது. மலர்விழி வியப்பும் திகைப் பும் அடைந்தாள். அவன், " மலர்விழி ! வியப்படைய வேண்டாம். உன் மாசற்ற முகம் என் கடந்த கால வாழ்க்கையை எண்ணி வருந்தச் செய்கிறது ; வேருென்றுமில்லை. ஒழுங்கற்ற பழக்க வழக்கங்

களால் என் வாழ்வு உருக்குலைந்து போய்விட்டது. இனி அது ஒழுங்குபெற முடியாது. நான் முன்னேற வழியில்லை ; இன்னும் கீழ்நிலையே அடைவேன்" என்றான். அவன், துயரம் நிறைந்த குரலில் தடுமாற்றத்துடன் கூறியதும் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு தேம்பினான். உடம்பு நடுங்கியது.

இவ்வாறான நிலையில் மலர்விழி அவனைப் பார்த்ததேயில்லை. அவன் துயரம் அவளுக்கு மிகுந்த மன வேதனையை யளித்தது. என்ன பேசுவதென்று ஒன்றும் தோன்றாமல் கவலையுடன் அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்ட மணவாளன், "மலர்விழி ! என்னை மன்னிக்க வேண்டும். மனத்தினுள்ளேயே கிடந்து மடிந்து போக வேண்டிய என் துயரத்தை வெளியிட்டு உன் மனத்திற்குத் துன்பமளித்து விட்டேன். அது போகட்டும். நான் உன்னிடம் சொல்ல எண்ணியதைச் சொல்லவில்லை. அதை நீ கேட்கிறாயா ?" என்றான். அவன் கண்களில் அன்பின் ஒளி வீசியது.

"உங்கள் உள்ளத்திற்கு ஆறுதலும் மகிழ்வும் அளிக்குமானால் அதனை நான் களிப்புடன் கேட்கிறேன்."

"நான் சொல்வதைக் கேட்டு அஞ்சிவிடாதே. நான் இளம்பருவத்திலேயே இறந்தவனை ஒத்திருக்கிறேன்."

"மணவாளரே ! ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள்? நீங்கள் நன்றாக வாழ முடியுமென்று நான் நம்புகிறேன்."

"மலர்விழி! உன் அன்புக்கு என் நன்றி. ஆனால் நான் அதற்கு ஏற்றவன் அல்லன். நாடோடி வாழ்க்கையில் நலங்கெட்டு, நெறிமுறையின்றிச் சீர் குலைந்து, காண்போரெல்லாம் இகழ்ச்சி செய்யும் நிலையில் இதோ உன் முன்னிலையில் இருக்கும் இந்த மனிதனிடம் நீ அன்பு கொள்வாயானால், மனமார நேசிப்பாயானால் அவன் மிகவும் மகிழ்ச்சியடை வான். ஆம்; அது உண்மை. ஆனால், அவன் உன்னை மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விடுவான்; உன் வாழ்வே சீர்குலைந்து போகும்படி செய்துவிடு வான். உனக்கு அத்தகைய உணர்ச்சி இல்லையென் பதை நான் நன்கறிவேன். நான் அதை வேண்ட வில்லை; அவ்வாறு ஏற்படக் கூடாது என்பதுதான் என் விருப்பம்." அவன் குரல் தழுதழுத்தது; கண்களில் நிறைந்து நின்ற நீர் ஒளிவீசி மின்னியது.

மலர்விழியின் கண்களிலும் கண்ணீர் நிரம்பி நின்றது. அவள் இரக்கம் மிகுந்து, "நீங்கள் எவ் வளவு நம்பிக்கையாய் உங்கள் உள்ளத்தைத் திறந்து பேசுகிறீர்கள்! வேறு யாரிடத்திலும் இவ்வாறு பேச மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். வேறு வழியில் நான் உங்களுக்கு நலம் செய்ய முடியாதா?" என்று அன்புடன் கேட்டாள்.

"இல்லை, மலர்விழி! என் வாழ்வின் அடிப்படை தகர்ந்து விட்டது. அது நலம்பெற முடியாது. அது வேண்டாம். என் உள்ளத்தின் குரலை இன்னும் சிறிது கேள்: என் உயிர்வாழ்வில் எட்டமுடியாத கனவு நீ! நீதி மன்றத்தில் உன் தந்தையுடன் நீ அமர்ந்திருந்த பொழுது நான் உன்னைக் கண்டேன்;

அக்காட்சி, அழிந்து விட்டன என்று நான் முடிவு கட்டியிருந்த என் இன்பவாழ்வின் எண்ணங்களையெல்லாம் உயிர்பெற்று எழும்படி செய்துவிட்டது. உன்னைப் பார்த்தது முதல் என் மனச்சான்று, என் நலங்கெட்ட வாழ்க்கையைக் குறித்து இடித்துக் காட்டி இகழ்ச்சி செய்கிறது ; உன் நினைவு நெஞ்சில் நிறைந்து நின்று, மடிந்துபோன என் பழைய இன்பக் குரல்களை உள்ளத்தில் எழுப்பி முன்னேற்ற வழியில் செல்லும்படி தூண்டுகிறது. ஆனால், எல்லாம் கனவு ! வெறுங் கனவு ! ! ஆயினும் இந்த இன்பங்களையெல்லாம் தூண்டி விட்டது நீதான் என்பது மட்டும் உண்மை."

" மணவாளரே ! உங்கள் மொழி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. உங்கள் வாழ்வு நலம் பெறும்படி நீங்கள் முயற்சி செய்யக்கூடாதா ?"

" மலர்விழி ! நீ மனம் வருந்த வேண்டாம். என் உள்ளத்தைத் திறந்து உன்னிடம் பேசவேண்டுமென்று விரும்பினேன். அதனால் இவ்வளவும் சொன்னேன். இப்பொழுது என் உள்ளத்தின் பளு குறைந்து விட்டது. என் பலவீனமே இதற்குக் காரணம். நீ வெறும் சாம்பலைத் தூண்டி நெருப்பாக்கினாய். ஆனால், அதனால் யாருக்கும் பயனில்லை."

" உங்களைத் துயரத்தில் ஆழ்த்தியவள் நான் தான் என்பதை நினைக்க என் மனம்...."

" அப்படிச் சொல்லாதே மலர்விழி ! குற்றம் என்னுடையதே யன்றி உன்னுடையதன்று. ஒன்று மட்டும் சொல்கிறேன்: உன்னால் நான் கீழ்நிலை அடையமாட்டேன் என்பது உறுதி."

" நான் உங்கள் நல்வாழ்வுக்கு வேறென்றும் செய்ய முடியாதா ?"

" இன்றைய தினம் என் உள்ளக் கருத்தை உன்னிடம் ஒளிக்காமல் உரைத்தேன் என்ற இன்ப நினைவை என் வாழ்நாள் முழுவதும் வைத்துக் கொண்டிருப்பேன். அதுவே எனக்குப் போதும்."

" உங்களால் நன்ருக வாழமுடியுமென்று நான் உறுதியாக எண்ணுகிறேன்."

" மலர்விழி ! அது பயனில்லை. உன் இரக்கச் சிந்தையை நான் உணர்கிறேன். இன்னும் உன் மனத்திற்குத் துன்பந்தர நான் விரும்பவில்லை. மாசற்ற உன் மனத்திலே, எவரிடமும் வெளியிடாத என் துயரக் கதையை ஒப்படைத்திருக்கிறேன் என்பதே எனக்குப் போதுமானது. அது வேறு எவரும் அறியாமல் இருக்கவேண்டும் என்பது என் வேண்டுகோள்."

" உங்களுக்கு ஆறுதலளிக்கும் அது, என் உள்ளத்திலேயே என்றும் இருக்கும்."

" உனக்கு மிக வேண்டியவர்களாய் இருந்தாலும் அவர்களிடம் கூட வெளியிடக்கூடாது. சரிதாஞ?"

"மணவாளரே ! அது உங்கள் இரகசியம் ; என்னுடையதன்று. உறுதியாய்ச் சொல்லுகிறேன் : அதை நான் என் உள்ளத்தில் வைத்துப் போற்றுவேன்."

" மலர்விழி ! உனக்கு நன்றி. இறைவனருளால் உனக்கு எல்லா நலமும் ஏற்படுவதாக ! நான் போய் வருகிறேன் ; வணக்கம்."

மணவாளன் எழுந்து வெளியே செல்லப் புறப் பட்டான். கதவருகிற் சென்றதும் நின்று திரும்பி, "மலர்விழி! நான் இதைப்பற்றி ஒருவரிடமும் பேச மாட்டேன். அஞ்சவேண்டாம். குற்றங் குறை நிறைந்த என் துயர வாழ்க்கைக் கதையை உன் தூய உள்ளத்தில் ஒப்படைத்தேன் என்ற இந் நினைவு, எஞ்சிய என் வாழ்க்கையின் இறுதிவரையில் என் மனத்திலேயே இருக்கும். ஆனால், அதன் பளு உன் மனத்தை அழுத்தாமல் இருக்கவேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்."

மணவாளன் வழக்கத்திற்கு மாறான நிலையில் காணப்பட்டான். அவன் தன் வாழ்க்கையையே உதறி எறிந்து விட்டவன்போல் உணர்ச்சியுடன் பேசினான். அவன் தன் உள்ளத்திற்குள் எவ்வளவு எண்ணங்களை அழுத்தி வைத்துக் கொண்டு, பித்தன் என்று பிறர் இகழும்படி வாழ்ந்திருக்கிறான்! மலர் விழி அவன் மனநிலையை யறிந்ததும் உள்ளங் கரைந்து அழத் தொடங்கினாள்.

அதைக் கண்டதும் மணவாளன், "வருந்தாதே, மலர்விழி! நீ கண்ணீர் விடுவதற்குரிய தகுதியுடை யவன் அல்லன் நான். இன்னும் சிறிதுநேரத்தில் என் போக்கே மாறிவிடும். தெருவில் அலையும் நாய், கழுதைகளுக்கு ஒப்பாக இழிநிலையை அடைந்து விடுவேன். ஆனால் உன்னைப் பொறுத்த வரையில் நான் இப்பொழுது உள்ளதுபோலவே கண்ணியமாக இருப்பேன். இறுதியாக ஒன்று மட்டும் கூறிவிட்டுப் போய்விடுகிறேன்: உனக்கும் எனக்கும் இடையில்

நெருங்கமுடியாத நெடுந்தூரம் இருக்கிறது. ஆயி னும் உன்பொருட்டும், உன் அன்புக்குரிய எவர் பொருட்டும் நான் எதையும் செய்யத் தயாராய் இருக் கிறேன். பாலைவனம் போன்ற என் பாழான வாழ்க் கையில், தியாகம் செய்வதற்குரிய வாய்ப்போ வலி மையோ இருக்குமானல், உன் பொருட்டு எத்தகைய தியாகத்தையும் செய்வேன். மலர்விழி! அதற்குக் காலம் இருக்கிறது. அக் காலம் விரைவில் வரலாம். உன் அன்புக்குரிய கணவனை மணந்து அகமகிழ்ந்து வாழுங்கால், குழந்தைகளைப்பெற்று குதூகலமாய் வாழும் நற்காலம் வரும். அக் காலத்தில் துயரமடை தற்குரிய நிகழ்ச்சி நேராதென்று எவர் சொல்ல முடியும்? இறைவனருளால் அது நேரவேண்டாம் என்பதே என் வேண்டுகோள். ஒருகால் நேர்ந் தால், உன் உயிர் போன்ற ஒருவரைக் காக்கத் தன் உயிரையே கொடுக்க ஒருவன் தயாராய் இருக்கிருன் என்பதை மட்டும் மறவாமல் மனத்தில் பதிய வைத் துக்கொள். போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியேறி மடமட வென்று இறங்கிப் போய் விட்டான்.

## 10. வளவனும் அல்லியும்

மருதநாட்டில் செல்வம் செழித்திருந்தது; ஆனல் வறுமை தாண்டவமாடியது! அறிவு பெருகியிருந்தது; ஆனல், அறியாமை குடிகொண்டிருந்தது! நாகரிகம் தழைத்திருந்தது; ஆனல், அநாகரிகம் மலிந்திருந்தது! இன்பம் நிறைந்திருந்தது; ஆனல், துன்பம் உறைந்திருந்தது! மத நம்பிக்கை பெருகி

யிருந்தது; ஆனால், நாத்திகம் பரவியிருந்தது! ஏன் இந்த முரண்பாடு?

செல்வர்களிற் பலர் தமது சூழ்ச்சியறிவாலும் வஞ்சனைச் செயல்களாலும் ஏழைகளின் உழைப்பின் பயனைத் தமக்கு உரியதாகக் கொண்டு, செல்வத்தைக் குவித்து அறிவிலும் நாகரிகத்திலும் மேம்பட்டு மாளிகை இன்பவாழ்வில் மகிழ்ந்திருந்தார்கள். எளியவர்களோ, தமது கள்ளமற்ற உள்ளத்தால் மெய் வருந்தப் பாடுபட்டும் வயிறு நிறைய உண்ணவோ உடல் மறைய உடுத்தவோ வழியின்றி வறுமையில் வாடிக் குடிசைகளில் வாழ்ந்து துன்புற்றிருந்தார்கள்.

நாட்டில் அரசனும் அரசியும் இருந்தனர்; அரியணையில் வீற்றிருந்து ஆட்சி செய்தனர்; அரண்மனையில் அமர்ந்து விருந்தருந்திக் களித்தனர்; இன்பக் களியாடல்களில் ஈடுபட்டு இறுமாந்திருந்தனர்; நாடு நன்னிலையில் இருப்பதாகக் கருதி மனப்பால் குடித்து மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தனர்! ஆனால், நாட்டின் உண்மைநிலை அவர்களுக்குத் தெரியாது! செல்வாக்குள்ள பெருஞ்செல்வர் சிலரின் கைப்பாவைகளாய் அரசனும் அரசியும் திகழ்ந்திருந்தனர்!

மருதநாட்டு அரசாட்சியில், தந்நலமே குறிக்கோளாகக்கொண்ட இரக்கமற்ற சில செல்வர்களே அதிகாரிகளாய் வீறுபெற்று விளங்கினார்கள். அதனால், நாட்டில் நல்லாட்சி இல்லை; நீதி, காவல் இல்லை; மக்களில் பெரும்பாலோர்க்கு நல்வாழ்வு இல்லை. எளியவர்கள் செல்வர்களால் வஞ்சிக்கப்பட்டும், நீதி நேர்மையின்றித் துன்புறுத்தப்பட்டும்,

மானங் குலையச் சிறுமைப்படுத்தப்பட்டும் வேதனை களுக்குள்ளாகித் தீய செயல்களை அஞ்சாது செய்யும் அளவுக்கு ஆத்திரங் கொண்டிருந்தார்கள்.

பசிக் கொடுமை, நீதியற்ற நிலை, நேர்மையற்ற ஆட்சி ஆகிய சூழ்நிலையில் வாழும் மக்கள் மனிதத் தன்மையை யிழந்து விலங்குகளாய் மாறிவிடுவதில் வியப்பில்லை. பசிக்கொடுமையைத் தணித்துக் கொள் ளவும், தமக்கு இழைக்கப்பட்ட தீமைகளுக்குப் பழி வாங்கவும் அவர்கள், கொள்ளை, கொலைச் செயல் களில் ஈடுபடத் துணிவது இயல்பே எனலாம். ஆகை யால், மருதநாட்டு நகரக் காவலர்களுக்கு ஓயாத வேலை இருந்தது! நீதி மன்றத்தாருக்கும் இடையருத பணி இருந்துவந்தது! சிறைக் கூடங்களுக்கு இடம் போதாத நிலை ஏற்பட்டிருந்தது! ஆனல், குற் றங்கள் குறையவில்லை! அதற்கு மாருக நாட்டையே சூறையாடும் புயற் காற்ருென்று உருவாகிக்கொண் டிருந்தது! அதற்கு உருவங்கொடுக்கும் உலைக் களமாக விளங்கி வந்தது, வளவனின் தேநீர்க் கடை. மக்களின் உள்ளக்கொதிப்பால் வீறிட்டெழும் ஆற்றலை ஒன்று திரட்டும் பணியில் ஓயாது உழைத்து வந்தான் வளவன். அவன் உழைப்புக்கு ஊக்கமும் உறுதியும் அளிக்கும் அருமருந்தாய் விளங்கினுள் அல்லி.

ஒரு நாள் காலை, வளவனின் தேநீர்க் கடையில் கூட்டம் நிரம்பியிருந்தது. ஆனல், வியாபாரம் அதிகமில்லை. எல்லாரும் ஒருவர்க் கொருவர் 'குசு குசு' வென்று பேசிக்கொண்டிருந்தனர். கடையில்

வளவன் இல்லை; அல்லி மட்டும் தன்னிருப்பிடத்தில் அமர்ந்திருந்தாள். அவள்முன் இருந்த மேசையின் மேல் பின்னல் வேலைக்குரிய நூலும் ஊசியும் இருந்தன.

பகற்பொழுது ஆயிற்று. அப்பொழுது வளவன் உள்ளே நுழைந்தான். அவனுடன் காளிமுத்து என்பவனும் வந்தான். இவர்களைக்கண்டதும் உள்ளேயிருந்தவர்கள் பேசுவதை நிறுத்தி விட்டார்கள். அவர்களில் ஒருவன் எழுந்து வெளியே சென்றான்.

வளவன் தன் மனைவியிடம் சென்று, "இவன் பெயர் புயல்; நல்லவன். நாங்கள் களைத்திருக்கிறோம். சிற்றுண்டியும் தேநீரும் கொடு" என்றான். அப்பொழுது இன்னொருவன் எழுந்து வெளியே சென்றான். மருதநாட்டில் கிளர்ச்சியை மூட்டிச் செல்வர்களிடம் வஞ்சந் தீர்த்துக்கொள்ள எண்ணியிருந்த புரட்சிக் கூட்டத்தினர், தங்களுக்குள் ஒருவரையொருவர் 'புயல்' என்ற பெயரால் மறைமுகமாகக் குறிப்பிடுவது வழக்கமாயிருந்தது.

அல்லி கொண்டுவந்து கொடுத்த சிற்றுண்டியைத் தின்றுவிட்டுத் தேநீரைப் பருகிக் களைதீர்ந்தனர், இருவரும். அப்பொழுது மற்றொருவன் எழுந்து வெளியே போனான். உடனே, வளவன் காளிமுத்துவை அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

இருவரும் சிறிது தூரம் சென்று குறுகிய மாடிப் படிகளில் ஏறிக் கிடங்கு போன்ற ஓர் அறையை அடைந்தனர். அந்த அறையில்தான் முன்னே டாக்டர் மருதவாணர் நினைவிழந்த நிலையில் செருப்புத்

ழைத்துக்கொண்டிருந்தார். அறையினுள் சென்றதும், வளவன் கதவைச் சாத்தி விட்டான். அறையினுள் தேநீர்க் கடையிலிருந்து வெளியேறிய மூவரும் இருந்தனர்.

வளவன் அவர்களை நோக்கி, "புயல் ஒன்று! புயல் இரண்டு!! புயல் மூன்று!!! இவன்தான் நான் கண்டு பேசிய ஆள். இப்பொழுது இவன் எல்லா வற்றையும் தெரிவிப்பான்" என்று கூறிவிட்டு, "சொல் லப்பா புயல் ஐந்து!" என்றான், காளிமுத்துவை நோக்கி.

காளிமுத்து பேசத் தொடங்கினான் :

"சென்ற ஆண்டில் செல்வநாயகம் பிரபு ஏறி வந்த பெட்டி வண்டியின் பின்னால் வீரப்பன் ஒளிந்து வந்தான். அவனைப் பிரபு பார்த்துவிடுவாரோ என்று அஞ்சி, நான் குறுக்கு வழிகளில் ஓடிவந்து இரண்டு மூன்று இடங்களில் கவனித்து வந்தேன். பிரபு அவனைப் பார்க்கவில்லை; ஆனால் என்னைப் பார்த்துவிட்டார். வண்டி மேட்டில் ஏறத்தொடங்கி யதும் மெதுவாய்ச் சென்றது. அதுதான் தக்க சமய மென்று வீரப்பனைத் தப்பிச் சென்று விடும்படி குறிப்புக் காட்டினேன். அவன் அவ்வாறே செய் தான். இரண்டு மூன்று முறை என்னைக் கண்ட தால் பிரபுவுக்கு என்மீது ஏதோ ஐயம் ஏற்பட்டு விட்டது. அதனால் என்னைக் கூப்பிட்டு அச்சுறுத்திக் கேட்டார். நான் ஒன்றும் தெரியாதென்று சாதித்துவிட்டேன். பிரபு கொல்லப்பட்ட பிறகு ஆறுமாதம் வரையில் வீரப்பனை நான் பார்க்கவில்லை.

அதன் பிறகு ஒரு நாள் காவலர்கள் அவனை விலங் கிட்டு அழைத்துச் சென்றதைப் பார்த்தேன். வீரப் பன் முகத்தில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவனைப் பார்க்க எனக்கு மிகவும் இரக்கமாயிருந்தது. நான் என்ன செய்யமுடியும்? காவலர்கள் அவனைக் குன்றின்மேல் கட்டப்பட்டிருக்கும் சிறைக் கூடத் திற்கு அழைத்துச் சென்றார்கள். இரண்டு மூன்று நாள் கழித்து வீரப்பன் தூக்கு மேடையில் தொங் கினான். பிரபுவைக் கொன்ற குற்றத்திற்காக அவனை ஆட்சியினர் தூக்கில் மாட்டிக் கொன்று விட்டனர். அவன் இறந்து தொங்கிய காட்சி பரி தாபமாயிருந்தது. அதைப் பார்த்த எல்லோரும் கண்ணீர் விட்டு அழுதார்கள். எல்லோருக்கும் அச்சம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவே எளிய வர்கள் வாழும் பொது விடத்தில் தூக்குப் போட்டார் களாம். இவ்வளவுதான் நானறிந்த செய்தி."

இதைக்கேட்ட நால்வரும் ஈட்டியால் குத்தப் பட்ட புலிபோல் சினம் பொங்க ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு, வளவன் காளி முத்துவை வெளியே அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பி வந்தான். அவன் மற்றவர்களை நோக்கி, "பிரபுவின் குடும்பம் அழியவேண்டியது தானே?" என்றான்.

"ஆமாம்; அடியோடு ஒழியவேண்டும்; ஒருவர் கூடத் தப்பக் கூடாது" என்றான் ஒருவன் ஆத்திரத் துடன்.

"நாம் தயாரித்து வரும் அழிவுப் பட்டியலில் அனைவர் பெயரும் தவருமல் இருக்குமா?" என்ருன் இன்னொருவன், வளவனை நோக்கி.

"என் மனைவியின் பின்னலில் எல்லாப் பெயர் களும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அதில் பதிந்த பெயர் ஒருநாளும் மாருது. கவலைப் பட வேண்டாம்" என்ருன் வளவன். பின்னர் எல் லோரும் எழுந்து வெளியே சென்றனர்.

மற்ருெரு நாள் வளவனும் அல்லியும் எங்கேயோ சென்றுவிட்டுத் திரும்பி வந்துகொண் டிருந்தனர். அப்பொழுது அல்லி தன் கணவனைப் பார்த்து, "அந்தக் காவலன் என்ன சொன்ஞன்? நம் கடையை மோப்பம் பிடிக்கும் வேலை நடக்கிறதென்று தெரிவித்தாஞ?" என்று மெதுவாகக் கேட்டாள்.

"ஆமாம். நம் பக்கத்திற்கு வேருெரு ஒற்றனைப் புதிதாக அனுப்பியிருக்கிருர்களாம். அவன் பெயர் நஞ்சப்பன்; நெய்தல் நாட்டினஞம். அவன் ஐந்தடி ஒன்பது அங்குல உயரம் இருப்பான்; மெலிந்த உடம்பு; கொஞ்சம் கறுப்பு நிறம்; நீண்ட முகம்; வளைந்த மூக்கு; கொடிய பார்வை; வயது நாற்பது. இந்த அடையாளங்களை நமது இரகசிய ஆளாகிய அக் காவலன் தெரிவித்தான்" என்று வளவன் கூறிஞன்.

"உருவ வருணனை, ஓவியம் தீட்டலாம் போல் இருக்கிறதே! அவனை நமது பட்டியலில் பதிவு செய்துவிட வேண்டியதுதான். நாளைய தினம் பதிவாகிவிடும்" என்ருள் அல்லி, மெல்ல நகைத்துக் கொண்டே.

மறுநாள் பிற்பகலில் அல்லி தேநீர்க் கடையிலுள்ள தன் இருப்பிடத்தில் அமர்ந்து பின்னல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். அவளருகில் அழகிய அல்லி மலரொன்று இருந்தது. கடையில் சிலரே இருந்தனர். அப்பொழுது புதிய ஆள் ஒருவன் உள்ளே நுழைந்தான். அவனைக் கடைக்கண்ணால் நோக்கிய அல்லி, உடனே தன் வேலையை நிறுத்தி விட்டு மலரை எடுத்துத் தன் கொண்டையில் சொருகிக் கொண்டாள். அதைக் கண்டதும் கடையில் பேசிக்கொண்டிருந்தவர்கள் மௌனமாயினர்; பிறகு ஒவ்வொருவராய் எழுந்து வெளியேறி விட்டனர்.

புதிதாய் வ்ந்தவன் அல்லியைப் பார்த்து, "வணக்கம் அம்மா! களைப்பாயிருக்கிறது. சிற்றுண்டியும் தேநீரும் வேண்டும்" என்று கூறிக்கொண்டே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

அல்லி பதில் வணக்கம் கூறிவிட்டு, எழுந்து போய்ச் சிற்றுண்டி கொண்டுவந்து வைத்தாள். அப்பொழுது அவள் தன் மனத்திற்குள், 'ஐந்தடி ஒன்பது அங்குலம்; மெலிந்த உடம்பு; நீண்ட முகம்; வளைந்த மூக்கு; கொஞ்சம் கறுப்பு நிறம்; வயது நாற்பது. ஆ! எல்லாம் சரியாயிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டாள்.

புதியவன் சிற்றுண்டியைத் தின்று கொண்டே அல்லியைப் பார்த்து, "இது மிகவும் சுவையாயிருக்கிறது! நீங்கள் செய்தது போலும்!" என்றான்.

மட்டமான மாவில் செய்யப்படும் அச்சிற்றுண்டியை இதுவரையில் எவரும் புகழ்ந்தது கிடையாது.

ஆயினும் புதியவன் கூறிய புகழ் மொழியை ஏற்றுக் கொண்டவள்போல் அல்லி மறுமொழி கூறிவிட்டுப் பின்னல் வேலையைச் செய்து கொண்டிருந்தாள்.

அவள் விரல்களைச் சிறிது நேரம் உற்றுப்பார்த்த ஒற்றன், "நீங்கள் நன்றாய்ப் பின்னுகிறீர்களே!" என்றான்.

"இது எனக்குப் பழக்கம்!'

"எதற்காகப் பின்னுகிறீர்கள்?"

"வெறும் பொழுது போக்கு வேலை இது!"

"அப்படியா? இதனால் பயனில்லையா?'

"ஒரு காலத்தில் பயன்படலாம்!"

"ஒரு காலத்திலா? நீங்கள் கூறுவது விளங்க வில்லையே!"

"நன்றாய்ப் பின்னினால் பயன்படும் என்றேன்!"

அப்பொழுது சிலர் கடையினுள் நுழைந்தனர். அல்லியின் தலையிலிருந்த மலரைக் கண்டதும் அவர்கள் யாரையோ தேடுபவர்போல நாற்புறமும் பார்த்துவிட்டு வெளியே நழுவி விட்டனர். அல்லி ஒற்றனின் பெயரையும் அடையாளத்தையும் பின்னலில் பதிந்து கொண்டிருந்தாள்.

"கடையில் வியாபாரம் நன்றாய் நடக்கவில்லை போலிருக்கிறது. அதனால்தான் நீங்கள் பின்னல் வேலை செய்கிறீர்கள்!" என்றான் ஒற்றன் புன்முறுவலுடன்.

"ஆமாம். மக்கள் மிகவும் ஏழைகளாய் விட்டார்கள். எப்படி வியாபாரம் நடக்கும்?"

"மக்கள் நிலை வருந்தத் தக்கதுதான். பாவம், ஏழைகளாய் விட்டார்கள்! ஏழைகளாய் ஆக்கப் பட்டும் விட்டார்கள், நீங்கள் சொல்வதைப்போல!"

"நீங்கள் சொல்வதைப்போல!" என்று அழுத்தமான குரலில் கூறினாள் அல்லி.

"ஆமாம். நான்தான் கூறினேன். ஆனால், நீங்கள் அவ்வாறு நினைக்கிறீர்கள்; இல்லையா?"

"நானா? எனக்கும் என் கணவனுக்கும் இங்கே நினைப்பதற்கு நிறைய செய்திகள் இருக்கின்றன. தொழிலை நடத்தி வயிறு வளர்ப்பது எப்படி என்பதை நினைப்பதற்கே நேரம் போதவில்லை. ஊரைப்பற்றி நினைக்க நேரமேது?"

துப்பறிய வந்த ஒற்றனின் முகத்தில் தோல்விக் குறி தோன்றியது. ஆயினும் அதைக் காட்டிக் கொள்ளாமல், அல்லி கொண்டுவந்து வைத்த தேநீரைப் பருகிக்கொண்டே, "நீங்கள் சொல்வது உண்மைதான். இருந்தாலும் ஊரைப்பற்றியும் எண்ணும்படி நேர்ந்து விடுகிறது. அந்த வீரப்பனைத் தூக்கில் மாட்டிக் கொன்றார்களே, அது எவ்வளவு கொடுமை!" என்று இரக்கம் மிகுந்தவன்போல் கூறினான்.

"அவன் தான் செய்த செயலின் பயனை அடைந்தான். அதனால் என்ன?" என்றாள் அல்லி, அமைதியாக.

"நீங்கள் கூறுவது சரிதான். ஆனால், இந்தப் பக்கத்தில் வாழ்வோர் வீரப்பனைக் கொன்றதைப்பற்றி

மிகவும் இரக்கப்படுகிறார்கள்; ஆத்திரம்கூடக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்."

"அப்படியா? ஆத்திரம் கொண்டிருக்கிறார்களா?"

"நீங்கள் 'இல்லை' என்கிறீர்களா?"

"இதோ என் கணவர் வருகிறார்!"

வளவன் கடைக்குள் நுழைந்தான்: அவனைக் கண்ட ஒற்றன், "வாருங்கள் புயல்! வணக்கம்" என்று புன்னகையுடன் கூறினான். வளவன் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, "என் பெயர் புயல் அன்று; வளவன். நீங்கள் தவறாக நினைத்து விட்டீர்கள் என்று நினைக்கிறேன்" என்றான்.

"இரண்டும் ஒன்றுதானே! அது போகட்டும். வீரப்பனின் தண்டனையைப்பற்றி நான் அம்மாவிடம் சொன்னேன், அவன்மீது இப்பக்கத்தில் இரக்கம் இருக்கிறதென்று. சரிதானே?" என்றான் ஒற்றன்.

"அப்படியா? இதுவரையில் நான் அவ்வாறு கேள்விப்பட வில்லையே! இப் பக்கத்தில் என்னைவிட உங்களுக்கு அதிகப் பழக்கம்போல் இருக்கிறது!"

"இல்லையில்லை; இனிமேல்தான் நான் நன்றாய்ப் பழக விரும்புகிறேன். ஏனென்றால், எளியவர்களிடம் எனக்கு எப்பொழுதும் இரக்கமுண்டு."

"ஓ! அப்படியா?"

"தோழரே! உங்களோடு பேசும் பேறு கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன். உங்களைப் பார்த்ததும் உங்கள் தொடர்புள்ள செய்தியொன்று நினைவுக்கு வருகிறது!"

"என்ன அது?"

"டாக்டர் மருதவாணர் விடுதலையடைந்ததும் அவரிடம் ஊழியராயிருந்த நீங்கள்தானே அவரை அழைத்து வந்து உங்கள் வீட்டில் வைத்திருந்தீர்கள்? எனக்குத் தெரியும். அவரை உங்களிடம்தான் ஒப் படைத்தார்கள். இல்லையா?"

"ஆமாம். நீங்கள் கூறுவது உண்மை."

"டாக்டருடைய மகள் மலர்விழியும் அம்பல வாணரும் வந்து அவரை அழைத்துக்கொண்டு போனார்கள். அதையும் நான் அறிவேன். மருத வாணரையும் மலர்விழியையும் எனக்கு நன்றாய்த் தெரியும்."

"அப்படியா?"

"அவர்களிடமிருந்து இப்பொழுது உங்களுக்குச் செய்தி வருவதில்லையோ?"

"இல்லை,"

"மலர்விழிக்கு மணம் ஆகப் போகிறது! மணந்து கொள்பவன் நெய்தல் நாட்டினன் அல்லன்; மருத நாட்டினன்; இன்னும், வீரப்பன் அழிவதற்குக் காரணராயிருந்த செல்வநாயகம் பிரபுவின் அண்ணன் மகன். அவனுக்கு மணிபுரியில் மதிவாணன் என்று பெயர்!"

இதைக் கேட்டதும் வளவனும் அல்லியும் திடுக் கிட்டனர். ஆயினும, அல்லி தன் உணர்ச்சியை ஒரு சிறிதும் வெளிக்காட்டாமல் பின்னிக் கொண்டிருந் தாள். ஆனல், வளவன் தன் உணர்ச்சியைக் கட்டுப்

படுத்த முடியாமல் திணறினான். அதை ஒற்றன் நன்றாய்க் கவனித்து, 'இந்த ஒரு கணையேனும் வெற்றியளித்ததே!' என்று மனங்களித்தவனாய் எழுந்து பணத்தைக் கொடுத்துவிட்டு வெளி யேறினான்.

வளவனும் அல்லியும் நெடுநேரம் வரையில் ஒற்றன் திரும்பி வருவானோ என்ற ஐயத்தால் வாய் திறவாதிருந்தனர். பிறகு, "டாக்டர் மகளைப்பற்றி அவன் சொல்லியது உண்மையாய் இருக்குமா?" என்று தன் மனைவியை நோக்கி மெதுவாகக் கேட் டான் வளவன்.

"உண்மையாய் இருக்கலாம்."

"அப்படியானால், அது வரும்போது—புயல் வீசும் காலத்தில் அவள் கணவன் இன்பபுரிக்குள் வராமல் இருக்கவேண்டும்."

"அவள் கணவனின் விதி அவனை எவ் வழியில் இழுத்துச் செல்கிறதோ அம்முடிவை அவன் அடை வான்!"

அல்லி, இவ்வாறு அலட்சியமாகக் கூறிவிட்டுத் தன் தலையிலிருந்த மலரை எடுத்துக் கீழே வைத் தாள். அதற்காகவே எதிர்பார்த்துக் காத்திருந்த வர்கள்போல் பலர் எங்கிருந்தோ ஒவ்வொருவராகக் கடைக்குள் நுழைந்தார்கள்.

# 11. மலர்விழியின் மணம்

மலர்விழி, மதிவாணனின் சீரிய பண்பையும், கூரிய அறிவையும், நேரிய அன்பையும் கண்டு மகிழ்ந்து அவனை நேசித்துவந்தாள். அதனால் அவனையேமணந்துகொள்ள விரும்பித் தன் கருத்தை மருதவாணரிடம் தெரிவித்தாள். அவர் மகிழ்ந்து மதி வாணனின் விருப்பமும் அவ்வாறிருப்பதைக் கூறி இன்புறுத்தினர். பிறகு திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மணநாளன்று காலை குறிப்பிட்ட சிலர் வந்து மருதவாணரின் வீட்டில் காத்திருந்தனர். மருத வாணர் மதிவாணனுடன் அறைக்குள்ளே தனியாகப் பேசிக்கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து இரு வரும் வெளியே வந்தனர். அப்பொழுது மதி வாணரின் முகம் வெளுத்திருந்தது. ஆயினும் அவர் தோற்றத்தில் மாறுபாடு சிறிதும் தெரியவில்லை. அமைதியாக நடந்து வந்த அவர் மலர்விழியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வெளியி லிருந்த வண்டியை நோக்கிச் சென்றார். அவர்கள் வண்டியில் ஏறியதும் மற்றவர்கள் வேறு வண்டிகளில் ஏறினர்கள். வண்டிகள் புறப்பட்டன.

மலர்விழியின் மணம் ஒரு கோயிலில் ஆடம்பர மற்ற எளியமுறையில் இனிது நிறைவேறியது. மண மக்களை எல்லோரும் மனமுவந்து வாழ்த்தினர். சிலர் மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கினர். அம்பலவாணர் மலர்விழிக்கு வைரமணிமாலை ஒன்றை மணப் பரிசாக

அளித்து அணியச் செய்து அகமகிழ்ந்தார். பெரிய நாயகி மலர்விழியை மணக்கோலத்தில் கண்டு உள்ளம் பூரித்தாள். மருதவாணர் தம் மகளின் மண நிகழ்ச்சியில் களிப்புடன் இருந்தாராயினும் தளர்ச்சியுடன் காணப்பட்டார். அதனை அம்பலவாணவர் மட்டுமே அறிந்தார் ; மற்றவர்கள் கவனிக்கவில்லை.

திருமணம் முடிந்ததும் எல்லோரும் மருதவாணரின் இல்லத்திற்குத் திரும்பினர். அங்கு யாவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு அனைவரும் மருதவாணரிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றனர். அதன் பின்னர், மணமக்கள் சிறிதுகாலம் இன்பமாய்ப் பொழுது போக்குவதற்காகப் புறப்பட்டார்கள். மலர்விழி தன் தந்தையைப் பிரிந்து செல்வதற்காக மனம் கலங்கினள். அதைக்கண்ட மருதவாணர் மலர்ந்த முகத்துடன் அவளுக்கு ஆறுதல் கூறி மகிழச் செய்து புறப்படும்படி ஊக்கமூட்டினர் ; மதிவாணனை நோக்கி, "மதிவாண! மலர்விழி இனி உனக்குரியவள். அவளை அன்புடன் அழைத்துக்கொண்டு போ!" என்றார். இருவரும் வண்டியிலேறினர். மருதவாணர், அம்பலவாணர், பெரியநாயகி ஆகிய மூவரும் வாயிற்படியருகில் முகமலர்ச்சியுடன் நின்று மணமக்களை வாழ்த்தி வழியனுப்பினர்.

வீட்டிற்குள் திரும்பியதும் மருதவாணரின் தோற்றத்தில் பெரிய மாறுதல் காணப்பட்டது. அதைக் கண்ட அம்பலவாணர் திகைத்துவிட்டார். மருதவாணர் அளவுகடந்த சோர்வுடன் தள்ளாடி நடந்து

போய்த் தம் அறைக்குள் நுழைந்தார். அம்பலவாணர் பெரியநாயகியை நோக்கி மெதுவாக, "மகளின் பிரிவால் மருதவாணர் சோர்ந்திருக்கிருர். இப்பொழுது அவரிடம் பேசாமலிருப்பதே நல்லது. நீ அவரைப் பார்த்துக்கொள். எனக்குக் கொஞ்சம் வேலையிருப்பதால் நான் போய்விட்டு விரைவில் விந்துவிடுகிறேன். அதன் பிறகு அவரை வெளியே அழைத்துக்கொண்டுபோய் ஆறுதல் செய்வோம்" என்று கூறிவிட்டு வெளியேறினுர்.

அம்பலவாணர் நெடுநேரங் கழித்துத் திரும்பி வந்தார். அவர் நேரே மாடிப்படிகளில் ஏறிப்போய் மருதவாணரின் அறையில் நுழைந்து பார்த்துத் திடுக்கிட்டு, "கடவுளே! என்ன இது!" என்ருர். மருதவாணர் அறைக்குள் செருப்புத் தைத்துக்கொண்டிருந்தார்!

அம்பலவாணரின் பின்ளுலேயே வந்து நின்றுகொண்டிருந்த பெரியநாயகி அச்சமும் கலக்கமும் நிறைந்த முகத்தினளாய், "ஐயோ! நான் என்ன செய்வேன்! அவருக்கு என்னைத் தெரியவில்லை!" என்று கலக்கத்துடன் மெதுவாய்த் தெரிவித்தாள்.

அம்பலவாணர் மருதவாணரிடம் பலமுறை பேசிப் பார்த்தார். அவர் தம் செயலிலேயே ஆழ்ந்து மறுமொழி பேசவில்லை. உலாவிவரும் பொருட்டு அவரை வெளியில் அழைத்துச் செல்ல எவ்வளவு முயன்றும் முடியவில்லை. ஆகவே, அம்பலவாணரும் பெரியநாயகியும் அவர் அருகிலேயே இருந்து பாது காத்து வருவதென முடிவு செய்து ஒன்பது நாட்கள்

வரையில் இரவுபகலாய்க் கவலையுடன் கண்காணித்து வேண்டியதைச் செய்து வந்தனர். அம்பலவாணர் தம் ஓய்வு நேரத்தை யெல்லாம் இவ்வாறு செலவழித்தார்.

பத்தாம் நாள் காலையில் மருதவாணரின் தோற்றத்தில் மாறுதல் ஏற்பட்டது. பக்கத்தறையில் உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிக்கொண்டிருந்த அம்பலவாணர் கண்விழித்ததும் டாக்டரின் அறைக்குப்போய் அவரைப் பார்த்து வியப்பும் மகிழ்வுமடைந்தார். மருதவாணரின் அருகில் செருப்புத் தைக்கும் கருவிகளைக் காணோம்! அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்தார்.

அவரது அமைதியைக் கலைக்க விரும்பாத அம்பலவாணர் பேசாமல் திரும்பிவந்து பெரியநாயகியிடம் செய்தியைச் சொன்னார். அவள் களிப்படைந்தாள். பிறகு, "பெரியநாயகி! ஒன்பது நாட்களாய் ஒன்றும் நிகழாததுபோல் நாம் அவரிடம் நடந்துகொள்ள வேண்டும். நான் உணவு நேரத்திற்கு வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அம்பலவாணர் வெளியே சென்றார்.

அம்பலவாணர் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தார். அவர், மருதவாணர் உணவு உண்டு முடிந்ததும் அவரைப் பார்த்து, "டாக்டர்! உங்களிடம் ஒரு யோசனை கேட்க விரும்புகிறேன். எனது நெருங்கிய நண்பர் ஒருவர் ஏதோ மன அதிர்ச்சியால் சில சமயம் நினைவிழந்து விடுகிறார். இப்பொழுது அவ்வாறு ஏற்பட்டுவிட்டது. அவருக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளை நினைக்க இரக்கமாய் இருக்கிறது.

இதற்கு என்ன செய்வது? சிறந்த மருத்துவராகிய நீங்கள்தாம் ஏதேனும் ஒரு வழி சொல்லவேண்டும்" என்று அன்பாகக் கேட்டார்.

"இப்பொழுது எவ்வளவு காலம் நினைவிழந்து இருந்தார்?" என்று மருதவாணர் மெதுவாகக் கேட்டார்.

"ஒன்பது நாட்கள் வரையில் இரவும் பகலும் நினைவிழந்திருந்தார். மிகவும் மெதுவாகத்தான் தெளிவடைந்தார். ஆனால், தெளிவடைந்ததும் வழக்கம் போல் சுறுசுறுப்பாய் இருக்கிறார்."

"நினைவிழந்த பொழுது அவர் என்ன செய்தார்? ஒருகால் அவ்வாறான நிலையில் முன்பு செய்து பழகிய பழைய வேலையைச் செய்தாரோ?"

"ஆமாம்!"

"அவருக்கு ஒரு மகள் இருப்பதாகச் சொன்னீர்களே, அவளுக்கு இச் செய்தி தெரியுமோ?"

"தெரியாது. அவளுக்குத் தெரியவேண்டாமென்று ஏற்பாடு செய்திருக்கிறேன்."

மருதவாணர் அம்பலவாணரின் கையைப் பிடித்துக்கொண்டு நன்றியுடன், "நண்பரே! நீங்கள் செய்ததுதான் சரி!" என்றார்.

அம்பலவாணர் ஆர்வத்துடன் அவரை நோக்கி, "நண்பரே! இந்த அதிர்ச்சி ஏன் ஏற்படுகிறது? இனி மேலும் ஏற்படுமா? இதைத் தடுக்கமுடியுமா? இவற்றையெல்லாம் எனக்கு விளக்கிக் கூறும்படி கேட்டுக்

கொள்ளுகிறேன். எனக்கு உங்களைத்தவிர உதவி செய்யும் நண்பர் வேறு யார் இருக்கிறார்கள்?'' என்றார்.

மருதவாணர் சிறிதுநேரம் ஆழ்ந்து எண்ணி விட்டு, "அவர் ஒரு பெரிய துன்பத்திலிருக்கும்போது இந்த நோய் முதலில் ஏற்பட்டிருக்க வேண்டும் அப்பொழுது எத்தகைய எண்ணம் அவர் மனத்தில் இருந்ததோ, அதுபோன்ற எண்ணமோ அல்லது அதன் தொடர்புள்ள எண்ணமோ ஏற்படும்பொழுது இந்த நோய் தோன்றுகிறது. அவர் அத்தகைய நிகழ்ச்சி யொன்றை எதிர்பார்த்து வருந்தியிருக்க வேண்டும். அது நேரவும் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் போய்விட்டது. மறுபடியும் தெளிந்துவிட்டார் என்று சொல்வதால் இனி அச்சங்கொள்ள வேண்டியதில்லை'' என்று நிதானமாகத் தெரிவித்தார்.

"நல்லவேளை! இனிக் கவலைப்பட வேண்டிய தில்லையே?'' என்று களிப்புடன் கேட்டார் அம்பல வாணர்.

"கவலைப்படவேண்டியதில்லை!'' என்று கூறினார் மருதவாணர் நன்றியுடன்.

## 12. மணவாளனின் வேண்டுகோள்

புது மணமக்களாகிய மதிவாணனும் மலர் விழியும் ஒரு திங்களுக்குப் பிறகு திரும்பிவந்ததும், அவர்களை முதன் முதலில் வரவேற்க வந்தவன் மண வாளன்தான். அவன் வழக்கம்போலவே காணப்

பட்டாளுயினும், ஏதோ வொரு குறிக்கோளுடனேயே வந்துள்ளான் என்பது முகக் குறியிலிருந்து தோன்றியது.

சிறிதுநேரங் கழித்து அவன் மதிவாணனை அழைத்துக் கொண்டுபோய்த் தனியிடத்தில் அமர்ந்து, ''மதிவாணு! நாம் இருவரும் நட்பாய் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்'' என்று கூறினுன்.

வியப்புடன் நோக்கிய மதிவாணன், "நாம் எப்பொழுதும் நட்பாய்த்தானே இருக்கிரும்!" என்ருன்.

"வெறும் சொற்களை அவ்வாறு சொல்வது அழகாய்த்தான் இருக்கிறது! ஆனல், நான் அவ்வாறு சொல்லவில்லை!"

"நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே!"

"நாம் இருவரும் முன்ஞெருமுறை உணவு விடுதியில் சிற்றுண்டிகளை உண்டோமே, நினைவிருக்கிறதா? அபபொழுது நான் நிறையத் தின்றேனே!"

"நினைவிருக்கிறது! அப்பொழுது என்னைக் கட்டாயப்படுத்தி நீ பெருந்தீனி தின்பவன் என்று சொல்லச் செய்தாய்!"

"ஆமாம். அப்பொழுதிருந்த எனது நிலை அவ்வாறு பேசும்படி செய்துவிட்டது. அதற்குக் காரணம் உண்டு. அன்று 'உன்னைப் பிடிக்கவில்லை' என்று சொன்னேன். இல்லையா?

"ஆமாம். அது எனக்கு வியப்பாயிருந்தது."

" அதை மறந்து விடு."

" அதை நான் அன்றே மறந்து விட்டேன் !"

" மீண்டும் வெறும் சொல்லைச் சொல்கிருயே ! நான் சொன்னதை என்ஞல் எளிதில் மறக்க முடியவில்லை. ஆகையால், 'மறந்துவிட்டேன்' என்று சொல்வது போதாது."

"மன்னிக்கவேண்டும். உண்மையில் நான் அன்றே அதை மறந்துவிட்டேன். நீ அன்றைய தினம் எனக்குச் செய்த பெரிய உதவிக்கு இந்தச் சிறிய செய்தியைத்தான நினைவில் வைத்திருக்க வேண்டும்?"

"அப்படியானல் மகிழ்ச்சி. நீ அந்த உதவியைப் பற்றிக் குறிப்பிட்டாய். அதை நான் உனக்காகச் செய்யவில்லை; தொழில் முறையில் செய்தேன். ஆயினும்...."

" நீ எளிதாகச் சொல்கிருய். நான் அவ்வாறு மதிக்கவில்லை. உயிரைக் காப்பாற்றிய உதவி எவ்வளவு பெரியது !"

" இல்லை, மதிவாண ! அது உனக்குச் செய்த உதவியன்று. சிலரைப்போல் உயர்ந்த நோக்கமோ அரிய செயலோ உடையவனல்லன் நான். ஒரு காலத்திலும் நற்செயல்கள் செய்ய என்ஞல் முடியாது."

" நான் அவ்வாறு நினைக்கவில்லை"

" அப்படியாஞல் நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்."

"தடையின்றிச் செய்கிறேன்."

"என்னைப்பற்றி உனக்குத் தெரியும். இழிவான முறையில் எங்குந் திரிந்து பிறர் அவமதிக்கும் நிலையிலுள்ள நான், இங்கே வந்து போவதற்கு நீ இசைய வேண்டும். அதிகமில்லை; ஓராண்டில் நாலைந்து முறை வருவேன்; அவ்வளவுதான். ஆனால், நான் விருப்பம்போல் இங்கே வருவதற்கு உரிமையிருக்கிறது என்ற மனநிறைவு எனக்கு ஏற்படவேண்டும். இதுதான் எனது வேண்டுகோள்."

"நாலைந்து முறைதானா? எங்கே, உன்னால் எத்தனைமுறை வரமுடிகிறதென்று பார்க்கிறேன்!"

"மகிழ்ச்சி, மதிவாணா! உன் பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். இந்த உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன்!"

இவ்வாறு கூறிய மணவாளன் மதிவாணனின் கையைப் பிடித்து நன்றியுடன் குலுக்கி விட்டு விடை பெற்றுச் சென்றான்.

மணவாளனின் அலட்சியப் போக்கையும் ஒழுங்கற்ற வாழ்க்கையையும் அறிந்திருந்த மதிவாணன் அவனைக் குறைவாகவே மதித்து வந்தான். ஆகையால், ஒரு நாள் மருதவாணர், அம்பலவாணர், மலர்விழி முதலியோருடன் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கும்பொழுது, "மணவாளன் பயனற்ற வீணன்" என்று, அவனைப்பற்றித் தாழ்வாகக் குறிப்பிட்டான். இவ்வாறு பேசியது மணவாளனை வெறுத்துக் கூறியதன்று; மணவாளனையறிந்த எவரும் பொதுவாகக் கூறக் கூடியதாகும். ஆனால், அவன்

பேச்சு மலர்விழியின் மனத்தில் ஆழப்பதிந்து வருத்தத்தை அளித்துவிட்டது.

இரவு மதிவாணனும் மலர்விழியும் தங்கள் அறையில் தனியே இருந்தபொழுது மலர்விழிமகிழ்ச்சியின்றிச் சோர்வுடன் இருப்பதைக் கண்ட மதிவாணன், "மலர்விழி! ஏன் சோர்வாக இருக்கிறாய்?" என்று அன்புகனியக் கேட்டான்.

"அதற்குக் காரணம் இருக்கிறது" என்று நிமிர்ந்து பார்க்காமலே விடையளித்தாள் மலர்விழி.

"என்ன காரணம், மலர்விழி!"

"ஏன் என்று கேட்காமலிருந்தால் சொல்கிறேன்."

"வியப்பாய் இருக்கிறதே! சரி, சொல்!"

"இன்று மாலை மணவாளனைப் பற்றிக் குறைவாகக் கூறினீர்கள் அல்லவா? அதுதான்."

"அப்படியா? அதற்கு நீ வருத்தமாய் இருப்பானேன்?"

"அதைத்தான் நீங்கள் கேட்கக்கூடாது. பாவம், அவனிடம் இன்னும் கொஞ்சம் இரக்கங் கொண்டு பேச வேண்டும். அவனிடம் குறைகள் பலவுண்டு. அவற்றைக் கொண்டு அவனை அவமதித்துப் பிறரிடம் பேசக் கூடாது. அவன் தன் நிலை குறித்து உள்ளம் உடைந்து உருகியதை நான் என் கண்ணால் கண்டிருக்கிறேன். அவனிடம் சிறந்த பண்பும் இளகிய நெஞ்சமும் இருக்கின்றன என்பதை நீங்கள் நம்ப வேண்டும்."

"வியப்படைகிறேன். நான் அவனைப் பற்றி இவ்வாறு எண்ணியதேயில்லை, மலர்விழி!"

"நான் கூறியது உண்மை. அவன் இனித் தன் வாழ்வில் உயர்வடைய மாட்டான். ஆனால், அவனால் அரிய செயல் செய்ய முடியுமென்று நான் நம்புகிறேன்.

தன் வாழ்க்கையையே பாழாக்கிக் கொண்டு திரியும் ஒருவன்மீது, தன் மனைவி இவ்வளவு நம்பிக்கை கொண்டு உயர்வாக மதித்துப் பேசியது மதிவாணனை வியப்பில் மூழ்கச் செய்து விட்டது. மணவாளனைப் பெருமையாக மதித்துப் பேசிய தன் மனைவியின் மாசற்ற முகத்தில் புதிய ஒளிவீசித் திகழ்வதைக் கண்ட மதிவாணன், அம் முகத்தின் எழிலில் ஈடுபட்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மலர்விழி அவனிடம் நெருங்கிவந்து அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, "ஆருயிர்த் தலைவரே! நாம் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறோம்! அதில் நமக்கு எவ்வளவு உறுதி இருக்கிறது! அவனைச் சிறிது எண்ணிப்பாருங்கள்! துயர வாழ்க்கையில் அவன் எவ்வாறு உழல்கிறான்! நாம் அவனிடம் இரக்கங் காட்டிப் பெருமையாக மதிக்க வேண்டாமா?" என்று உருக்கத்துடன் உரைத்தாள்.

"மலர்விழி! நீ அவனை இவ்வளவு பெருமையாக மதிக்கிறாய் என்பதை அறியாமற் பேசிவிட்டதைக் குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். அவன் மனநிலையை நீ அறிந்திருக்கிறாய் என்பதே எனக்குப் போதுமானது. இனி நான் அவனைப் பெருமையாக

மதித்துப் பேசுவேன். இது உறுதி!"—இவ்வாறு அன்புடன் கூறிய மதிவாணன், மலர்விழியின் கண்களில் நிறைந்து நின்ற கண்ணீரைத் துடைத்துக் களிப்படையச் செய்தான்.

## 13. காலடி ஓசைகள்

மருதவாணரின் இல்லம் ஒதுக்கான இடத்தில் இருந்ததாயினும், தூரத்தில் மக்கள் நடமாடும் காலடியோசைகள் இரவு பகல் எந் நேரத்திலும் கேட்கும். மலர்விழி தன் தந்தையுடன் வந்து அவ்வில்லத்தில் வாழத் தொடங்கிய காலத்தில் தனியே தன் அறையில் அமர்ந்து சில வேளைகளில் அக் காலடியோசைகளைக் கூர்ந்து கேட்டு வியப்பும் மகிழ்வும் அடைவாள். தொடக்கத்தில் புதுமையாயிருந்ததால் அது அவளுக்கு இன்பப் பொழுதுபோக்காய் இருந்து வந்தது. ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அக் காலடியோசைகள் பெருகி வளர்ந்து வருவதாக அவள் மனத்துள் தோன்றியதால், அது அவளுக்கு அச்சம் அளிப்பதாக மாறியிருந்தது. அதனால், திடீரென்று நூற்றுக்கணக்கான பேர் ஓடிவருவதாகவும், திடுதிடுவென்று தன் அறைக்குள் நுழைவதாகவும் கருதி உள்ளம் நடுங்கியதும் உண்டு. இவையெல்லாம் அவள் உள்ளத்தின் கற்பனை யென்று அம்பலவாணர் கூறி நகைப்பார். மருதவாணரும் பெரிய நாயகியும் அதிற் கலந்து கொள்வார்கள். ஆனால், மலர்விழியின் வாழ்க்கையில் அத்தகைய காலடியோசைகள் புகுந்து பிற்காலத்தில் பெருங்கவலையில் மூழ்கச் செய்யும் என்பதை அவர்கள் கனவிலும்

கருதியதில்லை. ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்படப் போவதை எவர்தாம் அறிய முடியும்?

மலர்விழி பயங்கரமான காலடியோசைகள் கேட்ட காலம் போய் ஆறு ஆண்டுகள் ஆய்விட்டன. இப்பொழுது மலர்விழி வேறு வகையான காலடி யோசைகளைக் கேட்டுக் களித்து வரலானாள். அவள், மதிவாணன் அலுவல் பார்க்கச் சென்று மாலையில் திரும்பி வருங்கால், அவனுடைய காலடியோசை யைக் கேட்டு அன்புடன் எதிர் சென்று வரவேற்று மகிழ்வாள். நாளடைவில் அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. எழிலி என்னும் பெயருள்ள அக் குழந்தைக்கு இப்பொழுது ஐந்து வயது நிரம்பி விட்டது அக்குழந்தை தளர்நடை நடந்து யாவரை யும் களிக்கச் செய்யும். அதன் பட்டுப் போன்ற பாதத்தின் மெல்லோசை மலர்விழியை உவகை கொள்ளச் செய்தது.

மணவாளனின் காலடியோசை முன்போல் அடிக்கடி கேட்பதில்லை. அவன் எப்பொழுதோ ஒரு நாள் வருவான்; எதையோ இழந்து விட்டவன் போல் ஏக்கத்துடன் உட்கார்ந்திருப்பான்; இரண் டொரு சொற்களைப் பேசிவிட்டுத் தானே போய் விடுவான்.

1789-ஆம் ஆண்டில் ஒருநாள் இரவு அம்பல வாணர் அழகப்பா பாங்கிலிருந்து நெடுநேரம் கழித்து மருதவாணரின் வீட்டுக்கு வந்தார். அப்பொழுது மதிவாணனும் மலர்விழியும் தங்கள் அறையில் அமர்ந்து எழிலியிடம் கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்

தனர். அவரைக் கண்டதும் இருவரும் மகிழ்ந்து வரவேற்று அமரச் செய்தனர்.

அம்பலவாணர் களைப்படைந்தவர் போல் காணப் பட்டார். அவர், "இன்று பாங்கில் வேலை ஓயவே யில்லை. இன்பபுரியில் பெருங் குழப்பம் ஏற்பட் டுள்ளது. அங்குள்ள செல்வர்களெல்லாம் தமது செல்வங்களை இங்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார் கள்" என்று தெரிவித்தார்.

மதிவாணன் வியப்படைந்தவனாய், "அதற்குக் காரண மென்ன ?" என்று கேட்டான்.

"காரணமா ? வரவர மக்களின் அறிவுநிலை மாறி வருகிறது. எங்களைப் போன்ற வயது முதிர்ந்தவர் களுக்கு அது விளங்குவதேயில்லை"

"அவ்வாறாஞல் இளம் வயதினர்க்கு விளங்கு மென்று நினைக்கிறேன் !"

"மதிவாணா ! 'செல்வர்கள் எளியவர்களுக்குத் தீங்கிழைக்கிறார்கள் ; அந்நிலை மாற வேண்டும்' என் னும் புதிய கொள்கை உடையவன், நீ. அதை மனத்தில் கொண்டு நீ வேடிக்கையாகக் கூறிஞலும், மக்கள் வெறி பிடித்தவர்கள்போல் குழப்பத்திலிறங்கி அழிவு வேலை செய்வதை நான் ஆதரிக்கமுடியாது."

"மருந்தால் தணியச் செய்யும் நோயைக் கவனிக் காமல் விட்டுவிட்டால் அது பெரியதாகி உடம்பையே அழிக்கும் நிலையை அடைந்து விடுகிறது. இந்த இயற்கை விதி மக்கள் சமூகத்துக்கும் பொருந்தும்."

"இந்தத் தத்துவமெல்லாம் பேசுவதற்கு என்னவோ அழகாய்த்தான் இருக்கிறது. ஆனல்

நடைமுறையில் எந்த அளவு ஏற்றதென்று எனக்குத் தெரியவில்லே. இன்பபுரியில் ஏற்பட்டுள்ள குழப்பத்தால் எத்தனேபேர் உயிரிழந்தார்களோ என்று எண்ணும்போதே என் உள்ளம் நடுங்குகிறது!"

இவ்வாறு இவர்கள் மணிபுரியில் உரையாடிக் கொண்டிருந்த அதே சமயத்தில், இன்பபுரியின் ஒரு பகுதியில், ஆத்திரத்தால் வெறிகொண்ட மக்கள் திரளின் பயங்கரக் காலடியோசைகள் கேட்டன. அன்றையதினம் காலேயிலிருந்தே ஆயுதந்தாங்கிய இராணுவ வீரர்களின் நடமாட்டம் இருந்து வந்தது. ஆயினும் அதைப் பொருட்படுத்தாத ஆயிரக் கணக்கான எளிய மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் கையில் கிடைத்த ஆயுதங்களேத் தாங்கிக் கடலொலிபோல் முழங்கிக்கொண்டு கிளம்பிவிட்டனர். அவர்களேத் தடுத்து நிறுத்த இராணுவத்தினரால் இயலவில்லே.

காட்டாற்று வெள்ளம்போல் கடுஞ்சினத்துடன் கிளம்பிய இக் கும்பலுக்கு ஊற்றிடமாயிருந்தது, வளவனின் தேநீர்க்கடை. அங்கே ஆத்திரங் கொண்ட மனிதர்களுக்குப் போர் வெறியை மூட்டிக் கொண்டு அவர்களின் தலேவனுய் விளங்கிய வளவன், தன் உடல் முழுவதும் வியர்வை வழிவதை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் ஆயுதங்களேக் கொடுப்பதும் கட்டளேகள் இடுவதுமாய் இருந்தான்.

அல்லி, வளவன் அருகில் நின்றுகொண்டிருந்தாள். அவள் கையில் பின்னல் கருவிகளுக்குப் பதிலாக ஒரு சிறிய கைக்கோடரியிருந்தது; இடையில் கைத் துப்பாக்கியும் கத்தியும் தொங்கின. அவளேப்

பெருமையுடன் பார்த்த வளவன், "அல்லி! நீ பெண்கள் கூட்டத்தை நடத்திச்செல்!" என்று கூறி விட்டு மறுபக்கம் திரும்பி, "நண்பர்களே! வாருங்கள்! எல்லோரும் சிறைச்சாலையை நோக்கிச் செல்வோம்! அதைத் தகர்த்து ஒழிப்போம்!" என்று முழங்கிக் கொண்டு கிளம்பினன். யாவரும் அவனைப் பின் பற்றினர். அவ்வாறு சென்ற பல்லாயிரக் கணக்கான ஆண்-பெண் மக்களின் முகங்களில்பசியின் கொடுமை யும் பழிவாங்கும் ஆத்திரமும் நிரம்பியிருந்தன.

கடல் சீறியெழுந்ததுபோல் புரட்சிக் கூட்டத் தினர் சிறைச் சாலையை நோக்கித் திரண்டு ஓடினர். மணிகள் அலறின; துப்பாக்கி வெடிகள் காதைத் துளைத்தன. ஆழமான அகழிகள், அவற்றைத் தாண்டும் பாலங்கள், உயர்ந்த கோபுரம் முதலிய எல்லாம் உடைந்து நொறுங்கின. நூற்றுக் கணக் கான சிறைக்காவலர்கள் கொல்லப்பட்டனர். எங்கும் புகை பரவி மூடியது. சிறிது நேரத்தில் கோட்டை பிடிபட்டது. வளவன், மனித வெள்ளத்தினிடையே ஊடறுத்துக்கொண்டு சிலருடன் உள்ளே ஓடினன். தப்பிய சில சிறைக் காவலர்கள் சென்றவிடந் தெரி யாமல் மறைந்துவிட்டனர். உள்ளே சென்ற வளவன் சிறையிலிருந்த கைதிகளை யெல்லாம் விடுவித்தான். அவர்களும் புரட்சிக் கூட்டத்தில் ஊக்கத்துடன் கலந்துகொண்டனர். வளவன் அங்கு அஞ்சியிருந்த சிறையதிகாரி ஒருவனைப் பிடித்துக்கொண்டு, "நூற் றைந்து, வடகோட்டை என்ருல் என்ன?" என்று கேட்டான். "அது ஒரு அறை" என்ருன் அதிகாரி "அது எங்கேயிருக்கிறது? காட்டு! உம். சீக்கிரம்."

என்று அதட்டினான் வளவன். அவ் வதிகாரி நடுக்கத்துடன் வளவன் முதலியோரை அழைத்துக் கொண்டுபோனான்.

குகைகள்போல் தோன்றிய பல அறைகளின் வழியே ஏறிச்சென்று கோட்டையின் உச்சியை அடைந்ததும், அதிகாரி ஒரு சிறிய அறையைத் திறந்து, "இதுதான் நூற்றைந்து, வடகோட்டை" என்று தெரிவித்தான். வளவன் முதலியோர் உள்ளே நுழைந்தனர். தீப் பந்தத்தின் வெளிச்சத்தில் வளவன் அந்த அறையைச் சுற்றி உற்றுக் கவனித்தான். அறையினுள்ளே மிகப் பழைய ஒரு மேசையும் நாற்காலியும், வைக்கோல் மெத்தையும் இருந்தன; குப்பை நிறைந்திருந்தது. சுவர்களில் அழுக்குப் படிந்திருந்தது. ஒரு சுவரில் "மருதவாணன்—ஓர் எளிய மருத்துவன்" என்று எழுதியிருந்ததைக் கண்டதும், வளவன் அருகிலிருந்த ஒருவனை நோக்கி, "உன் கையிலுள்ள கடப்பாறையைக் கொடு" என்று வாங்கி புகைபோக்கி போல் தெரிந்த இடத்தைத் தாக்கி இடித்தான். அது நொறுங்கியதும் உள்ளிருந்து ஒரு கடிதச் சுருள் வெளிப்பட்டது. அக் கடிதத்தைப் பார்த்த வளவன் ஆவலுடன் அதையெடுத்துத் தன் சட்டைப் பைக்குள் திணித்துப் பத்திரமாக வைத்துக்கொண்டான். பிறகு, "வாருங்கள் போவோம்" என்று எல்லாரையும் அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

வளவன் தன் படைத்திரளுடன் திரும்பிக் கீழே வரும்பொழுது, சிறைக்குள் இருந்து காவல்வீரர்

களை ஏவிப் புரட்சிக் கூட்டத்தினரைச் சுட்டுத்தள்ளச் செய்த சிறைச்சாலைத் தலைவனைப் புரட்சிக் கூட்டத்தினர் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து சித்திர வதை செய்துகொண்டிருப்பதைப் பார்த்து மனங் களித்தான். அல்லி, அத் தலைவனருகில் நின்று அவன் வதைக்கப்படுவதை மன நிறைவுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். வெறிபிடித்த கும்பலால் அலைக்கழிக்கப்பட்ட சிறைச்சாலைத் தலைவனின் தலை கொஞ்ச நேரத்தில் அல்லியின் கைவாளால் துண்டிக்கப்பட்டு நிலத்தில் உருண்டது. இவ்வாறு அவ்விடத்தில் எண்ணற்ற தலைகள் உருண்டோடின; தெருவில் குருதி வெள்ளம் பெருக்கெடுத் தோடியது; கொதித்த உள்ளங்களின் பயங்கரக் குரல்கள் எங்கும் எதிரொலித்தன.

இன்பபுரியின் வீதிகளிலே மிதித்துச்சென்ற குருதிதோய்ந்த காலடிகளின் ஓசைகள் காற்றிலே மிதந்து வந்து, முன்னர்க் கூறியபடி மணிபுரியில் வாழ்வோரின் காதுகளில் கேட்டன. அக் காலடியோசைகள் மலர்விழியின் வாழ்வில் வந்து புகுமா என்பதைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றி அம்பலவாணரும் மதிவாணனும் அமைதியுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

## 14. சிறை மீட்கச் சென்றான்!

மருதநாட்டின் தலைநகரான இன்பபுரியில் புரட்சிப்புயல் வீசிக்கொண்டேயிருந்தது; சிறிதும் தணியவில்லை. பழிவாங்க வேண்டுமென்னும் ஆத்திரத்தால் உள்ளங்கொதித்தெழுந்த எளிய மக்களின் உணர்ச்சி

வெள்ளம் கட்டுக்கடங்காத கடல்போல் கொந்தளித்துப் பாய்ந்து கொடுமைகளை இழைத்துக் கொண்டிருந்தது. அதனால் எத்தனையோ மாளிகைகள் இடிந்து தகர்ந்தன; செல்வர்கள் பலர் மடிந்து மறைந்தனர்; மூன்று ஆண்டுகளுக்குள் அரசாங்கமே நிலைகுலைந்து போய்விட்டது; அரசனும் அரசியும் அரண்மனையிலேயே சிறைக் கைதிகள்போல் புரட்சியாளரின் காவலுங்கடங்கி வாழ்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட புதிய அரசாங்கம் ஏற்பட்டு ஆட்சி நடைபெற்று வந்தது.

மணிபுரியில் கொதித்தெழுந்த புரட்சி வெள்ளம் செல்வபுரத்திலும் சீறிப் பாய்ந்தது. ஒருநாள் செல்வநாயகம் பிரபுவின் சிறந்த மாளிகை நெருப்புக்கு இரையாகி நீருயிற்று. மாளிகை பற்றி யெரியுங்கால், அப் பக்கத்தில் வாழும் எளியவர்கள் திரண்டு நின்று அக்காட்சியைக் கண் குளிரக்கண்டு களித்தனர். நெடுங்காலமாகத் தங்களைக் கொடுமைப் படுத்திவந்த செல்வநாயகம் பிரபு வாழ்ந்திருந்த மாளிகை என்பதால், அது அழிவதில் அவர்களுக்கு அத்தகைய மகிழ்ச்சி ஏற்பட்டது.

இன்பபுரியில் வாழ்ந்திருந்த செல்வர்கள் பலர், புரட்சி எழுந்த உடனேயே தங்கள் செல்வங்களையெல்லாம் இன்பபுரியிலுள்ள அழகப்பா பாங்கில் சேர்த்து விட்டு எவருமறியாமல் மணிபுரிக்கு ஓடிவிட்டனர். அவர்கள் மணிபுரியிலுள்ள அழகப்பா பாங்குக்கு அன்ருடம் வந்து இன்பபுரியின் நிலைமைகளை

அறிந்து வந்தனர். இன்பபுரியிலிருந்து வருவோர் மணிபுரிக்கு வந்ததும் அழகப்பா பாங்குக்குத்தான் முதலில் வந்து தங்குவார்கள். ஆகையால் இன்பபுரியின் நிகழ்ச்சிகளை அறிய விரும்புவோர் அங்கே வந்து கூடுவது வழக்கமாய் விட்டது.

மதிவாணன் அழகப்பா பாங்குக்கு நாள்தோறும் வந்து இன்பபுரியின் நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கேட்டறிந்து வந்தான். அவன் உள்ளத்தில் இன்பபுரிக்குச் செல்லவேண்டுமென்னும் எண்ணம் துடிதுடித்து நின்றது. ஒருநாள் அவன் வழக்கம்போல் பாங்குக்கு வந்து அம்பலவாணரிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு கணக்கர் வந்து, "இந்தக் கடிதத்துக்குரியவர் இன்னுரென்று தெரியவில்லை" என்று கூறி ஓர் உறைக் கடிதத்தை அம்பலவாணரிடம் கொடுத்தார். அதில், "இளங்கோவன், மேற்பார்வை: அழகப்பா பாங்கு, மணிபுரி" என்று இருந்தது. அக் கடிதத்தின் முகவரியைக் கண்ட மதிவாணன் திடுக்கிட்டான். அவனது இயற்பெயர் மருதவாணரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. ஆகையால், அக்கடிதம் மதிவாணனுக்கு உரியது என்பதை அம்பலவாணர் அறியவில்லை.

கணக்கர் கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றதும் மதிவாணன் அம்பலவாணரிடம், "இக் கடிதத்திற்குரியவரை நான் அறிவேன்" என்ருன்.

"அப்படியாளுல் இதை அவரிடம் சேர்த்து விடுகிருயா?" என்ருர் அம்பலவாணர்.

"சேர்த்து விடுகிறேன்" என்று கூறிய மதி வாணன் கடிதத்தை வாங்கிக்கொண்டு வெளியே புறப்பட்டான். தனக்கு வந்த அக் கடிதத்தின் உறையில் " மிக்க அவசரம்" என்று எழுதப்பட்டு இருந்ததால் அச்செய்தியை அறியவேண்டுமென்னும் ஆவலுடன் விரைவாகத் தனியிடத்தை யடைந்து அதைப் பிரித்துப் படித்தான் :

இன்பபுரி, சிறைச்சாலை
21—6—1792.

இளங்கோப் பிரபு அவர்களுக்கு, ஊழியன் முத்தையன் வணக்கம் செய்து எழுதுவது :

பிரபுவே ! நான் செல்வபுரம் மக்களின் கையில் அகப் பட்டுச் சித்திரவதைக்குள்ளானேன். என்னுடைய வீட் டைக் கொடியவர்கள் கொளுத்திவிட்டார்கள். அவர்கள் என்னை இன்பபுரிக்கு இழுத்துக் கொண்டு வந்து சிறைச் சாலையில் அடைத்து வைத்துத் துன்புறுத்தி வருகிருர்கள்.

நான் தங்களைத் தப்பி ஓடும்படி செய்து விட்டேனும். தாங்கள் தப்பியோட உதவி செய்தேனும். உண்மையை எவ்வளவு சொல்லியும் ஒருவரும் நம்பவில்லை. 'அவன் எங்கே ? அந்த ஓடுகாலி எங்கே யிருக்கிருன் ?' என்று நாள்தோறும் என்னை நெருக்கிக் கேட்கிருர்கள். நான் என்ன செய்வேன் ?

நான் ' இளங்கோப் பிரபுவின் கட்டளைப்படி மக்களிடம் வரி வசூலிப்பதில்லை ; எல்லாவற்றையும் பொது மக்களுக்கே ஒப்படைத்து விட்டேன் ' என்று கூறியும் அவர்கள் கேட்க வில்லை. ' ஓடிய ஆள் எங்கே ' என்றே கேட்டுவருகிருர் கள்.

அருள்நாயகம் பிரபுவின் அருமைக் குமரரே! தங்கள் தந்தையார் வாழ்ந்திருந்தால், இந்தக் கேடுகளெல்லாம் ஏற்பட்டிருக்கமாட்டா வென்று எண்ணுகிறேன். எல்லாம் தங்கள் சிறிய தந்தையரின் இரக்க மில்லாக் கொடிய அதிகாரத்தின் விளைவுகளே என்பதில் தடையில்லை. அவர் இளம் பருவத்திலிருந்து செய்து வந்த இழி செயல்களும் கொடுமைகளும் எண்ணிறந்தவை. எத்தனை எளிய இளம்பெண்களின் மானம் குலைந்திருக்கிறது! எத்தனை ஏழைகள் உயிர் இழந்திருக்கிறார்கள்! வெட்கித் தலைகுனியக் கூடிய அவருடைய இழிநடத்தைகளாலேயே கண்ணிய மிகுந்த தங்கள் தந்தையார் மனங் குன்றி நடுத்தர வயதிலேயே மடிந்தார் என்பதை நான் நன்கறிவேன். தங்கள் சிறிய தந்தையாரே அவரைக் கொன்று விட்டாரென்று கூடக் குடிமக்கள் கூறுவதுண்டு. இப்பொழுது எல்லாப் பாவங்களும் என் தலைமீது வந்து சுமந்திருக்கின்றன.

பிரபுவே! அவர்களைப் போலவே நானும் கேட்கிறேன்: தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்? ஆதரவிழந்து தவிக்கும் என்னைக் காப்பாற்ற வரமாட்டீர்களா? கடல்கடந்து உங்களைக் கூவி அழைக்கிறேன். ஒருகால் என் அபயக்குரல் உங்கள் காதில் விழுமென்று நம்பியே இக்கடிதத்தை அழகப்பா பாங்கின் வழியாக அனுப்புகிறேன்.

துன்பம் நிறைந்த சிறையில் வாழ்வின் முடிவை எதிர் நோக்கித் துடித்துக் கொண்டிருக்கும் இந்த ஏழையைக் காக்க விரைந்து வாருங்கள், பிரபுவே! வணக்கம்.

இங்ஙனம்
துன்பத்தில் வாடும் தங்கள் ஊழியன்,
முத்தையன்.

கடிதத்தைப் படித்ததும் மதிவாணனின் உள்ளத்தில் பலவகை உணர்ச்சிகள் கொந்தளித்து

எழுந்தன. தன் குடும்பத்திற்காக நெடுங்காலம் பாடுபட்டுவந்த அந்த நம்பிக்கையுள்ள ஊழியனின் பரிதாபநிலை பயங்கர வடிவமெடுத்துக் காட்சியளித்தது. தனது அளவற்ற செல்வத்தை உதறிவிட்டு வெளியேறியபோது, நிலபுலங்களை யெல்லாம் முறைப்படி மக்கள் கைக்கு மாற்றிவிட்டு வராததன் குறையை எண்ணி மதிவாணன் வருந்தினான். பிரபு பட்டமும் குடும்பப் பெருமையும் தனக்கு வேண்டா மென்று வெறுத்துவிட்டு வந்து, எளிய மக்களில் ஒருவன் போல் உழைத்து வாழ்ந்து வந்தானாயினும், மதிவாணன் அப் பட்டத்தையும், பெருமையையும் முறைப்படி விலக்கவில்லை. அது இப்பொழுது முத்தையன் துன்புறும் நிலையை ஏற்படுத்திவிட்டது.

முன்னரே இன்பபுரிக்குச் செல்லவேண்டு மென்று எண்ணியிருந்த மதிவாணன், முத்தையனை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டுமென்னும் எண்ணத்தால் உந்தப்பட்டு உடனே புறப்படுவதென்று துணிந்தான். மறுநாட்காலையில் அழகப்பா பாங்கின் அலுவல் காரணமாக அம்பலவாணர் இன்பபுரிக்குச் செல்கிறார் என்பதை அவன் அறிந்திருந்தான். அவரிடம் தான் புறப்படப் போவதைத் தெரிவித்தால், ஆபத்து நிறைந்த அந் நகருக்குச் செல்லக் கூடாதென்று தடுத்து விடுவாரென்று கருதி அவர் அறியாமலே புறப்படுவதென்று தீர்மானித்தான். அதே காரணத்தால் மருதவாணர், மலர்விழி ஆகியோருக்கும் தெரிவிக்காமல், அவர்களுக்கு 'அவசரமான அலுவலின் பொருட்டு வெளியூருக்குச் செல்ல வேண்டியிருப்பதால் நாலைந்து நாட்களில் வந்து

விடுகிறேன் ' என்று, அன்றிரவு தனித்தனியே கடிதங்கள் எழுதிவைத்துவிட்டு விடியற்காலையில் எவருமறியாமல் புறப்பட்டு விட்டான். கண்ணுக்குத் தெரியாத விதி அவனைக் கவர்ந்து, உயிருக்கே தீங்கு நேரும் பேராபத்தில் தானே போய் அகப்படும்படி இழுத்துக் கொண்டு சென்றது.

புரட்சி மூண்டு ஆட்சி நிலை மாறியிருந்த அந்தக் காலத்தில் மணிபுரியிலிருந்து இன்பபுரிக்குச் செல்வோருக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டிருந்தன. ஒவ்வொரு ஊரின் எல்லையிலும் சாவடிகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. அங்கிருந்த புதிய ஆட்சியினரின் அலுவலர்கள், வருவோர் போவோரைத் தடை செய்து நிறுத்திச் சோதனை செய்த பின்னரே அனுப்பி வந்தனர். சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளதாகப் பறைசாற்றும் புதிய அரசாங்கத்துக்கு ஊறு நேராமல் காக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால் பயணம் செய்தோர் அடைந்த தொல்லைகள் பலவாகும்.

ஒரே நாளில் இன்பபுரியை அடைந்து விடலாமென்று புறப்பட்ட மதிவாணன், இடைவழியிலேயே தங்கும்படி நேரிட்டு விட்டது. அதற்குக் காரணம், அவனுடைய பெட்டியில் காணப்பட்ட கடிதங்களிலிருந்து அவன் செல்வபுரத்துப் பிரபு குடும்பத்தான் என்பது வெளிப்பட்டதேயாகும். இதையறிந்த சாவடி அதிகாரி மதிவாணனைக் காவலரின் பாதுகாப்பில் இன்பபுரிக்கு அனுப்பிவைத்தார். அவனைப்

போலவே இன்னும் பலர் அவனுடன் இருந்தனர். யாவரும் உரிமையிழந்த நிலையில் கைதிகள் போல் கொண்டு போகப் பட்டார்கள். நாலைந்து நாட்களுக்குப் பிறகு மதிவாணன் இன்பபுரியிலுள்ள சிறைச் சாலையில் அடைக்கப்பட்டு வருந்திக் கொண்டிருந்தான். முத்தையனைச் சிறையிலிருந்து விடுவிக்க வந்த மதிவாணன், இவ்வாறு தானே சிறையில் அகப்பட்டுத் தன்னை எதற்காகச் சிறையில் அடைத்திருக்கிறார்கள் என்பதையும் அறிய முடியாமல் தவித்தான்.

ஒருநாள் வளவன் வந்து சிறையதிகாரியின் ஏற்பாட்டின்படி மதிவாணனைத் தனிச்சிறைக்கு அழைத்துக் கொண்டு போனான். துப்பாக்கி யேந்திய வீரர்கள் இருவர் பின்னால் வந்தனர். அப்பொழுது வளவன் மெதுவாக, "டாக்டர் மருதவாணரின் மகளை மணம் புரிந்து கொண்டவன் நீதானா ?" என்று கேட்டான்.

மதிவாணன் வியப்படைந்து, "ஆமாம்" என்றான் மெலிந்த குரலில். அவன் வளவன் என்பதை மதிவாணன் உணர்ந்து கொண்டான்.

"நீ ஏன் இன்பபுரிக்கு வந்தாய் ?" என்று கேட்டான் வளவன்.

மதிவாணன், தான் வந்த காரணத்தைத் தெரிவித்துவிட்டுத் தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்பதை விளக்கினான். வளவன் அதைக்கேட்டு மறுமொழியொன்றும் கூறவில்லை. அதனால் கலக்கமடைந்த மதிவாணன், "என்னை நெடுங்காலம் சிறை

யிலேயே வாழும்படி செய்து விடுவார்களோ ?" என்று வினவினுன்.

" அதனுல் என்ன ? இதற்கு முன் எத்தனையோ பேர் அவ்வாறு இருந்திருக்கிருர்களே !" என்ருன் வளவன். அவன் குரலில் கடுமை மிகுந்திருந்தது.

அவனிடம் பேசுவதில் பயனில்லை யென்று கருதிய மதிவாணன் பேசாமல் பின் தொடர்ந்தான். பெரிய சிறைச்சாலையை யடைந்ததும் அங்குள்ள தனி யறையில் அவன் அடைக்கப்பட்டான். அங்கிருந்த காவலர்கள் மதிவாணனைக் கண்டதும், 'ஓடுகாலி இளங்கோவன்' என்று இகழ்ந்து பேசினர். அறைக் குள் தனியே யிருந்த மதிவாணன் அதை எண்ணி யெண்ணி மனவேதனை யடைந்தான்.

'தனிச் சிறை' என்பது விசாரணை யின்றி நீண்ட காலம் இருப்பது என்பதை அறிந்திருந்தால், அவன் இன்னும் பெருவேதனை அடைந்திருப்பான் என்பதில் தடையில்லை.

## 15. விடுதலையும் சிறையும்

இன்பபுரியில் சிறந்து விளங்கிய ஒரு வீதிக் கருகில் இருந்தது அழகப்பா பாங்கு. அதன் நாற் புறத்திலும் உயரமான சுற்றுச் சுவரும், முன்பக்கத் தில் உறுதியான வாயிலும் இருந்தன. நடுவில் மேன்மாடத்துடன் விளங்கிய கட்டிடத்தில் பாங்கின் அலுவல்கள் நடைபெற்றுவந்தன.

புரட்சிப் புயலால் பாங்கின் பொருள்களுக்கு அழிவு நேராமல் பாதுகாத்தற்குரிய ஏற்பாடுகளைச்

செய்யும் பொருட்டு வந்திருந்த அம்பலவாணர், மேன் மாடத்திலுள்ள தமது தனியறையில் அமர்ந் திருந்தார். மாலை நேரம். அப்பொழுது படீரென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த மருத வாணரையும் மலர்விழியையும் கண்டதும் அம் பலவாணர் திகைத்துவிட்டார். பெரிய நாயகி எழிலியைத் தூக்கிக் கொண்டு பின்னாலேயே வந்து நின்றாள்.

மலர்விழியின் துயரமுகத்தைக் கண்ட அம்பல வாணர், "ஏன், என்ன நடந்துவிட்டது?" என்று படபடப்புடன் கேட்டார்.

"என் கணவருக்கு ஆபத்து! அவர் இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டார்! சிறையில் வைத் திருக்கிறார்களாம்!" என்று கோவெனக் கதறியழு தாள், மலர்விழி.

அம்பலவாணர் பதறிவிட்டார். கவலை நிறைந்த முகத்துடன் அவர் மலர்விழிக்கு ஆறுதல் செய்து அமரச் செய்துவிட்டு மருதவாணர் பக்கம் திரும்பினார். அப்பொழுது வீதியில் மக்கள் இரைச்சல் கேட்டது. அது என்னவென்று அறிவதற்காக மருத வாணர் பலகணியைத் திறந்து பார்த்தார். அதைக் கண்ட அம்பலவாணர், "வெளியே எட்டிப் பார்க்கா தீர்கள்!" என்று கத்தினார்.

மருதவாணர் புன்முறுவலுடன் திரும்பி, "நண்பரே! அஞ்சாதீர்! இந் நகரத்தில் நான் நீண்டகாலம் சிறைக் கைதியாயிருந்தேன் அல்லவா? அந்தத் துன்ப வாழ்க்கை இப்பொழுது எனக்கு

அரியதொரு ஆற்றலை அளித்திருக்கிறது. நான் நீண்டகாலச் சிறைக் கைதி என்பதை அறிந்ததும் புரட்சியாளர்கள் என்னிடம் பெருமதிப்பு வைத்துப் போற்றுகிருர்கள். அந்த ஆற்றலாலேயே சோதனைச் சாவடிகளை யெல்லாம் எளிதில் கடந்து இங்கு வந் திருக்கிறோம். மதிவாணன் சிறைப்பட்டிருக்கும் செய்தி யையும் அவர்களின் வாயிலாகவே அறிந்தோம். மதி வாணனைக் காப்பாற்றிவிட முடியுமென்று நான் உறுதியாக நம்புகிறேன் '' என்ருர்.

மருதவாணரின் மொழிகளைக் கேட்டதும் அம்பல வாணரின் முகத்தில் சிறிது தெளிவேற்பட்டது. அவர் மலர்விழி முதலியோரை அழைத்துக்கொண்டு போய்ப் பக்கத்தறையில் இருக்கச் செய்துவிட்டு வந்தார். மருதவாணர் பலகணி வழியே பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு, தாமும் அச்சத்துடன் தலையை நீட்டிப் பார்த்தார். வீதியில் கொலை வெறி பிடித்த கும்பல் கத்தி முதலிய கருவிகளுடன் திரண்டு நின்று கூச்சல் போட்டுக்கொண் டிருந்தது. மருத வாணர் “என்ன இது?” என்று அம்பலவாணரை நோக்கிக் கேட்டார்.

“அவர்கள் புரட்சி வெறியர்கள். அவர்களிடம் உங்களுக்குச் செல்வாக்கு உண்டு என்பது உண்மை யாளுல், நீங்கள் இப்பொழுதே சென்று உங்களை அப் பேய்களிடம் அறிமுகம் செய்துகொண்டு மதி வாணனை விடுவிக்க வழி செய்யுங்கள். காலதாமதம் செய்வது ஆபத்து” என்று மெதுவாகக் கூறினுர், அம்பலவாணர்.

மருதவாணர் நன்றி கூறிவிட்டு உடனே அங்கிருந்து கீழே இறங்கித் தமது முதுமைப் பருவத்தையும் மறந்து ஓடினார். சிறிது நேரத்திற்கெல்லாம் வெள்ளித் தலைமயிரும் உறுதியான தோற்றமுமுடைய அவர், கும்பலின் நடுவில் காணப்பட்டார். உடனே கூட்டத்தினரிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் முணு முணு வென்று பேசிய மக்கள் திடீரென்று, "நீண்ட காலச் சிறைக் கைதி வாழ்க!" என்று ஆரவாரம் செய்து கத்தினார்கள். சிலர் மருதவாணரை நெருங்கி வணக்கம் செய்து மரியாதை காட்டினர். உடனே "டாக்டரின் மருமகனுக்கு விடுதலைவேண்டும்!" என்று எல்லோரும் முழங்கினர்.

இவற்றைப் பலகணி வழியே பார்த்துக்கொண்டிருந்த அம்பலவாணர் களிப்படைந்தவராய், மலர்விழியிடம் ஓடிச் செய்தியைத் தெரிவித்து அஞ்சாமலிருக்கும்படி உற்சாக மூட்டினார். மலர் விழியின் முகம் சிறிது மலர்ந்தது. ஆயினும் அவள் மயங்கிய நிலையில் இருந்தாள்.

மறுநாட் காலையில் அம்பலவாணர், பாங்குக்கு அருகிலிருந்த தெருவில் ஒரு வீட்டை வாடகைக்குப் பேசி, மலர்விழி முதலியோரை அழைத்துக் கொண்டு போய் அதில் இருக்கும்படி செய்து அவர்களுக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொடுத்தார்; தன்னுடன் வந்திருந்த பொன்னையனை அவர்களுக்குத் துணையாக இருக்கச் செய்தார்.

அன்றிரவு அவர் தமது அறையில் அமர்ந்து சிந்தனையில் மூழ்கியிருக்கும் பொழுது யாரோ படியில்

ஏறிவரும் காலடியோசை கேட்டது. உள்ளே வந்த ஆள் நின்று அம்பலவாணரை நோக்கி, " என்னைத் தெரிகிறதா ?" என்று கணீரென்ற குரலில் கேட்டான்.

அவனை உற்றுப் பார்த்த அம்பலவாணர், " ஆ ! தெரிகிறது. நீங்கள் வளவன் அல்லவா ? மருதவாணரிடமிருந்து வருகிறீர்களா ?" என்றார்.

" ஆம் " என்று கூறிய வளவன் அவரிடம் ஒரு கடிதத்தை நீட்டினான்.

நடுங்கும் கையால் அக்கடிதத்தை வாங்கிய அம்பலவாணர் அதைப் படித்தார் :

" மதிவாணன் நலமாயிருக்கிறான். நான் சில நாட்களில் வருகிறேன். என் முயற்சியால் மதிவாணன் தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறான். அதை வளவனே நேரில் கொடுக்கட்டும். மருதவாணர்."

இதைப் படித்ததும் அம்பலவாணர் மலர்ந்த முகத்துடன் வளவனை நோக்கி, " மலர்விழியிடம் போகலாமா ?" என்றார்.

" வாருங்கள் போகலாம் " என்று வளவன் கூறியதும், இருவரும் கீழே இறங்கி வெளியே வந்தனர். அங்கே அல்லியும் இன்னொரு பெண்ணும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் அம்பலவாணர், " ஓ ! அல்லியும் நம்முடன் வருகிறாளா ?" என்றார்.

" ஆமாம். மலர்விழியின் நன்மைக்காக அவளைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டாமா ? அதற்காகத்தான் " என்றான் வளவன்.

அம்பலவாணர் அவன் பேச்சைக் கேட்டு ஐயமுற்று அவர்களை அழைத்துக் கொண்டு நடந்தார். அவர்கள் மலர்விழியின் வீட்டை அடைந்த பொழுது, அவள் தன் அறையில் அழுதுகொண்டு உட்கார்ந் திருந்தாள். அம்பலவாணர் கூறிய நற்செய்தியைக் கேட்டதும் அழுகை மாறி முகமலர்ச்சி கொண்டாள். வளவன் கொடுத்த கடிதத்தை ஆவலுடன் வாங்கிப் படித்தாள் :

"மலர்விழி ! தைரியமாயிரு. நான் நலமாய் இருக் கிறேன். உன் தந்தைக்கு இங்கே மிகுதியான செல் வாக்கு இருக்கிறது. அதனால் நான் விரைவில் விடுதலை பெற்று வந்து விடுவேன் : அஞ்சாதே. மதிவாணன்."

இக் கடிதத்தைப் படித்ததும் மலர்விழி யடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவள் வளவனையும் அல்லியையும், நோக்கி நன்றி கூறினாள். ஆனால், அவர்கள் மறுமொழி ஒன்றும் கூறாது பேசாமல் நின் றனர். அல்லி, பெரியநாயகி வைத்துக்கொண்டி ருந்த எழிலியை உற்றுப் பார்த்துவிட்டு, "இது தான் அவன் குழந்தையா ?" என்று அலட்சியமாகக் கேட் டாள்.

அம்பலவாணர் "ஆமாம்" என்றார்.

அல்லியின் கொடுந் தோற்றத்தைக் கண்டு அஞ்சிய மலர்விழி, "என் கணவருக்குத் தீங்கு நேராதல்லவா ? அவரைக் காப்பாற்றுவீர்களா ?" என்று அவளை நோக்கிக் கொஞ்சும் குரலில் கேட் டாள்.

" உன் கணவன், கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறுன் ?'' என்றுள் அல்லி, மிடுக்காக.

" என் தந்தைக்கு இங்குச் செல்வாக்கு இருப்பதாக எழுதியிருக்கிறுர் " என்றுள் மலர்விழி.

" அப்படியாளுல் நீ ஏன் அஞ்சுகிறுய் ? அச்செல்வாக்கில் உன் கணவன் விடுதலே அடைவான் " என்று கூறிவிட்டு, வளவனே நோக்கி, " நாம் போவோமா ?" என்றுள்.

வளவன் சரியென்றதும் அல்லி அவ்விடத்திலிருந்து புறப்பட்டாள். மற்ற இருவரும் தொடர்ந்து சென்றுர்கள்.

டாக்டர் மருதவாணர் நான்கு நாள் கழித்துத்தான் வந்தார். அந்த நான்கு நாட்களுக்குள் புரட்சி வெறியர்கள் ஆயிரக் கணக்கான கைதிகளே இரக்கமின்றிக் கொன்று குவித்தார்கள். அவர்கள் தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட ஐவர் அடங்கிய நீதி மன்றத்தில் கைதிகளேக் கொண்டு வந்து நிறுத்தி விசாரணே செய்து தீர்ப்புக் கூறியதும் கொலேத் தண்டனேயை நிறைவேற்றி வந்தார்கள். இந்தக் கொடுமை நாள்தோறும் இடைவிடாமல் நடந்து கொண்டேயிருந்தது. ஒருநாள் கொலேஞர்கள் ஆரவாரத்துடன் அரசனுடைய தலேயைத் தூக்கிக் கொண்டுவந்து மக்களுக்குக் காண்பித்தனர்; இன்ஞெருநாள் அரசியின் தலேயைக் காண்பித்தனர். அத் தலேகளேக் கண்ட மக்கள் களிவெறி கொண்டு கூத்தாடினர்.

இவ்விதமான பயங்கர நிலையில் மருதவாணர் நீதிமன்றத்தாரிடம் தம்மை அறிமுகம் செய்து கொண்டு மதிவாணனை விடுவிக்க முயன்றார். பதினெட்டு ஆண்டுகள் முறையின்றிச் சிறையிலிருந்த கைதி என்பதால் அவரை நீதி மன்றத்தார் நன்கு மதித்துப் போற்றினர். அதனால் மருதவாணர் விரைவில் வெற்றி கிட்டுமென்றே நம்பினார். ஆனால் யாது காரணத்தாலோ அது தடைப்பட்டு விட்டது. ஆயினும் அவர் மனந்தளராமல் விரைவில் விடுதலை செய்யா விட்டாலும் மதிவாணனை விசாரணையாவது செய்ய வேண்டுமென்று முயன்று வந்தார். இம் முயற்சியிலேயே ஓராண்டு கழிந்து விட்டது. அப்பொழுது புரட்சி மிகப் பயங்கர நிலையை அடைந்திருந்தது.

மருதவாணரின் விடா முயற்சியால் மதிவாணனின் விசாரணைக்கு ஏற்பாடாயிற்று. நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகளும் வந்து அமர்ந்தனர். குடியரசு ஆட்சியாளரின் வழக்கறிஞரும் நடுநிலையாளர்களும் கூடியிருந்தனர்; பொது மக்கள் நிறைந்திருந்தனர்; ஒரு பக்கத்தில் வளவனும் அல்லியும் அமர்ந்திருந்தனர். மதிவாணன் நீதிமன்றத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

“இளங்கோவன் என்பவன் ஓடுகாலி. அக்குற்றத்திற்காக விதிப்படி அவனுக்குக் கொலைத்தண்டனை அளிக்கவேண்டும்” என்று வழக்கறிஞர் வாதித்தார்.

உடனே கூட்டத்தினர், "மக்களின் பகைவன் மடிய வேண்டும்" என்று கூச்சலிட்டனர்.

தலைவன் அவர்களை அமைதியாயிருக்கும்படி கேட்டுக் கொண்டு, மதிவாணனை நோக்கி, "மருத நாட்டினனுகிய நீ நெய்தல் நாட்டிற்குச் சென்று வாழ்ந்திருக்கிருய். ஆகையால் நீ ஒரு ஓடுகாலி தானே ?" என்று கேட்டார்.

"இல்லை. நான் விரும்பாத பட்டத்தையும், செல்வத்தையும் வெறுத்துவிட்டு, நான் மணிபுரியில் உழைத்துப் பொருள்தேடி வாழ்ந்து வந்தேன். ஆகையால், என்மீது குற்றமில்லை" என்று உறுதியாகக் கூறினுன் மதிவாணன்.

"நீ கூறுவது உண்மைதான் என்பதற்குச் சாட்சி யார் ?"

"இதோ அமர்ந்திருக்கும் டாக்டர் மருதவாணர் என் நிலையை நன்கு அறிவார். அவர் மகளைத்தான் நான் மணம் புரிந்து கொண்டிருக்கிறேன்."

இதைக் கேட்டதும் மக்களிடையே ஆரவாரம் எழுந்தது. மதிவாணனைக் கொல்ல வேண்டுமென்று கூச்சலிட்டவர்கள் இப்பொழுது அவனிடம் இரக்கங் காட்டிப் பேசினர்.

"மணிபுரியிலிருந்த நீ எதற்காக இன்பபுரிக்கு வந்தாய்?" என்று கேட்டான் தலைவன்.

"இங்குள்ள மருதநாட்டினன் ஒருவனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அறிந்தேன். அவனைக் காக்க வேண்டும் என்பதற்காகவே வந்

தேன். இந்நாட்டு மனிதனின் உயிரைக் காப்பாற்ற வந்தது குற்றமா ?" என்ருன் மதிவாணன்.

"இல்லை, இல்லை, குற்றமில்லை!" என்று கத்தினர் கூட்டத்தினர்.

"அந்த மனிதன் யார் ?" என்று தலைவன் கேட்டான். மதிவாணன் முத்தையனின் பெயரைத் தெரிவித்ததும் அவன் வரவழைக்கப் பட்டான். முத்தையன், மதிவாணன் கூறியவை யாவும் உண்மை என்பதை விவரமாகக் கூறி மெய்ப்பித்தான்.

பிறகு மருதவாணர் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர், மதிவாணன் தெரிவித்தவை மெய்யென்று விளக்கிக் கூறிவிட்டு, மணிபுரியில் செல்வர்களின் ஆட்சிக்கு மாருகச் சதி செய்தானென்று விசாரிக்கப்பட்டான் என்பதையும் தெரிவித்தார். இச்செய்தி மதிவாணனின் குற்றமற்ற நிலையை நன்கு விளக்கியதால், விசாரணையை மேலும் வளர்க்காமல் நடு நிலையாளர்கள், "கைதி குற்றமற்றவன்" என்று தம் கருத்தைத் தெரிவித்தார்கள். உடனே தலைவன், கைதி விடுதலையடைந்துவிட்டதாகக் கூறினன். அவ்வளவுதான்; கூட்டத்தினர் களிப்புடன் கைதட்டிக் கட்டிடம் அதிரும்படி ஆரவாரம் செய்தார்கள்.

இருவர் எழுந்து ஓடி மதிவாணனை ஒரு நாற்காலியில் உட்காரவைத்துத் தூக்கிக்கொண்டனர். உடனே "குடியரசு வாழ்க !" என்று எல்லோரும் காது செவிடாகும்படி கத்தினர். அந்தக் களிவெறி கொண்ட கூட்டத்தினர் மருதவாணர் என்ன சொல்லியும் கேளாமல் மதிவாணனைத் தூக்கிக்

கொண்டு ஊர்வலமாகப் புறப்பட்டுப் போய் மலர்விழி யிருந்த வீட்டில் இறக்கி விட்டுவிட்டனர். பிறகு கூட்டத்திலிருந்த ஒருவரை நாற்காயில் வைத்துத் தூக்கிக்கொண்டு பெருங்கூச்சலுடன் திரும்பிச் சென்றனர்.

மருதவாணர் முன்னமேயே சென்று மலர்விழிக் குச் செய்தியைத் தெரிவித்து மகிழ்ச்சியூட்டினுர். அத ஞல் உவகையில் மூழ்கிய அவள், மதிவாணன் வந்த தும் அவன் தோள்மீது சாய்ந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். அப்பொழுது அவர்களின் உள்ளத்தி லெழுந்த உணர்ச்சிப் பெருக்கை உள்ளவாறு உரைப் பது எளிதன்று.

"மலர்விழி ! நான் உயிர்பிழைத்து விட்டேன். உன் தந்தைதான் என்னைக்காப்பாற்றினுர். அவருக்கு இங்கே எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது !" என்று மதிவாணன் மலர்விழியின் தலையை வருடிக் கொண்டே மகிழ்ச்சி ததும்பக்கூறினுன். பிறகு எழி லியைத் தூக்கிக் கொஞ்சினுன். மலர்ந்த முகத்துடன் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார் மருதவாணர்.

காலையில் ஏற்பட்ட இந்த மகிழ்ச்சி மாலையில் நிலைத்திருக்க வில்லை. ஒளி மங்கிய மாலையில் பெரிய நாயகியும் பொன்னையனும் வீட்டுக்கு வேண்டிய உணவுப் பண்டங்கள் வாங்கும் பொருட்டுக் கடைத் தெருவுக்குச் சென்றிருந்தார்கள். மதிவாணனும் மலர்விழியும் மேன்மாடியிலுள்ள அறையில் உரை யாடிக்கொண்டிருந்தனர். எழிலி தன் தாத்தாவுடன் மழலைமொழி பேசிக் கொண்டிருந்தாள். அப்பொழுது சிலர் திடுதிடுவென்றுபடிகளில் ஏறிவந்து அறையின்

கதவைப் பலமாகத் தட்டினர். மலர்விழி திகைத்து நடுநடுங்கி, "அப்பா! அது என்ன?" என்று கலவரத்துடன் கேட்டாள்.

மருதவாணர் அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்து கதவைத் திறந்தார். வெளியே இருந்தவர்கள் உள்ளே நுழைந்தனர். அவர்களில் ஒருவன், "இளங்கோவன்! நீ மீண்டும் குடியரசின் கைதி! உன்னை அழைத்துப் போகவே வந்திருக்கிறோம்!" என்று, வெடிகுண்டை வீசியதுபோல் கூறினான்.

மதிவாணன் எழுந்து வந்து, "ஏன் என்னைக் கைது செய்ய வேண்டும்?" என்று கேட்டான். நான்கு பேர் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒருவன், "நாளையதினம் விசாரணையில் உன் கேள்விக்கு விடை கிடைக்கும், நீ இப்பொழுது எங்களுடன் வரவேண்டும்" என்று கூறிவிட்டு மதிவாணனைப் பிடித்து அழைத்துக் கொண்டு விரைந்து சென்றான். மற்றவர்கள் தொடர்ந்து போயினர். மருதவாணரும் மலர்விழியும் திகைத்துச் சிலைபோல் நின்றார்கள்.

## 16. மணவாளனின் மறைமுக ஏற்பாடு

வீட்டில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சியைச் சிறிதும் அறியாத பெரிய நாயகியும் பொன்னையனும் கடை வீதிக்குச் சென்று வேண்டிய பண்டங்களை வாங்கிக் கொண்டு திரும்பினர். வரும் வழியில் ஓர் உணவு விடுதியிலிருந்து வெளியே வந்த ஒருவனைக் கண்டதும் பெரிய நாயகி பர பரப்படைந்து, "தம்பீ!

தம்பீ !!" என்று ஆவலுடன் கூப்பிட்டாள். அவன் திரும்பிப் பார்த்துத் திகைப்புடன் நின்ருன்.

பெரிய நாயகி அவனருகிற் போய், "ஆ! தங்கப்பா! உன்னைப் பார்த்து எவ்வளவு காலமாய் விட்டது! நீ இங்கேயா இருக்கிருய் ?" என்று அன்பு ததும்பக் கேட்டாள்.

"மெதுவாகப் பேசு. எனக்கு ஆபத்தை உண்டாக்கி விடாதே !" என்று அவன் கலக்கத்துடன் இரு பக்கமும் திரும்பிப் பார்த்துக் கொண்டே சொன்ஞன்.

"தங்கப்பா ! ஏன் இப்படி நடுங்குகிருய் ? கலவர மடைந்து நிற்கிருயே ! உன்னைப் பார்த்ததால் நான் எவ்வளவு மகிழ்ச்சி யடைகிறேன் தெரியுமா ?" என்ருள் பெரிய நாயகி.

"என்னைத் 'தங்கப்பன்' என்று கூப்பிடாதே ! ஆபத்து உண்டாகும். இவன் யார் ? ஏதோ ஒரு புதுமையான பொருளைப் பார்ப்பது போல் என்னை வெறித்துப் பார்க்கிருனே !" என்ருன் அவன்.

அம் மனிதனை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த பொன்னையன், "ஏன் பார்க்கிறேனு ? ஆமாம், உன் பெயர் தங்கப்பனு? இல்லை.மணிபுரியில் உனக்கு வேறு பெயர் அல்லவா ? அது என்ன பெயர் ?" என்ருன்.

"நாகப்பன்" என்றது ஒரு புதிய குரல்.

"ஆம், ஆம். அதுதான் உன் பெயர்" என்று கத்தினுன் பொன்னையன். நாகப்பன் திடுக்கிட்டு அஞ்சிய தோற்றத்துடன் திரும்பிப் பார்த்தான். மணவாளன் அலட்சியமாக வந்து அருகில் நின்ருன். பெரிய நாயகி "ஆ ! நீங்களா ?" என்ருள்.

"பெரிய நாயகி! திடீரென்று நான் எப்படி இங்கு வந்து குதித்தேன் என்று வியப்படையாதே. நான் நேற்று மாலையே வந்துவிட்டேன்; அம்பல வாணரின் இருப்பிடத்தில் தங்கியிருக்கிறேன். இப்பொழுது உன் தம்பியைக் கண்டு பேசி ஒரு ஏற்பாடு செய்யவே நான் இவ்விடத்திற்கு வந்தேன். நீ 'தங்கப்பன்' என்று செல்லமாய் அழைக்கும் நாகப்பனுக்கு, இங்கே 'நஞ்சப்பன்' என்று பெயர். ஒருவனுக்கு எத்தனை பெயர் என்று எண்ணாதே. உளவறியும் வேலை பார்ப்பதென்றால் எளிதானதா? குடியரசுக் குழுவினருக்குத் தூதனாய் இருப்பதோடு, உன் தம்பி சிறைச்சாலையில் உளவறியும் வேலையும் பார்க்கிறான்!" என்று மணவாளன் கூறிவிட்டு, குறும்புப் புன்னகையுடன் நாகப்பனைத் திரும்பிப்பார்த்தான். பெரிய நாயகி பிரமித்துப் போனாள்.

"எவ்வளவு துணிவு!" என்று சீறினான் நாகப்பன்.

"நாகப்பா! சீற்றங்கொள்வதில் பயனில்லை. அது உனக்குத்தான் ஆபத்தை உண்டாக்கும். ஒரு மணி நேரத்திற்கு முன் நான் சிறைச் சாலையின் வெளியே நின்று அதன் சுவர் எவ்வளவு உயரம் இருக்குமென்று அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது நீ உள்ளேயிருந்து வெளியே வந்ததைக் கண்டேன். மறக்க முடியாத உன் முகத்தைக் கண்டதும், 'உனக்கு இங்கு என்ன வேலை' என்பதையறிய இவ் விடத்திற்கு வந்தேன். உணவு விடுதியில் உன் பின்புறம் அமர்ந்து, நீ மற்

ருருவனுடன் பேசியதையெல்லாம் கேட்டறிந்தேன். அதனுல், நான் எண்ணி வந்த செயல் எளிதில் நிறை வேறுவதற்குரிய வழி தெரிந்தது. அதனுலேயே உன்னுடன் பேச இங்கு வந்தேன்" என்று அழுத்த மான குரலில் கூறினுன் மணவாளன்.

"என்னுடன் என்ன பேச வேண்டும்?"

"அதை இங்கே நின்று பேசுவது சரியன்று. இருவருக்கும் ஆபத்தை உண்டாக்கும். நீ அம்பல வாணரின் இருப்பிடம் வரையில் என்னுடன் வர முடியுமா?"

"நான் ஏன் வரவேண்டும்?"

"நாகப்பா! நீ வர முடியாதென்ருல் நான் என்ன செய்ய முடியும்?"

நாகப்பன் வெறுப்புடன் பெரிய நாயகியை நோக்கி, "நான் அப்பொழுதே சொன்னேன், பார்த் தாயா? உன்னுல் எனக்கு இந்தத் தொந்தரவு ஏற் பட்டிருக்கிறது!" என்ருன்.

மதிவாணன் புன் முறுவலுடன், "நாகப்பா! தொந்தரவு ஒன்றுமில்லே. உன் அக்காளே வெறுத்துப் பேசாதே. அவளிடம் எனக்குள்ள நன்மதிப்பால் நம் இருவருக்கும் நலமான ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ள விரும்புகிறேன். அதை நீ தொந்தரவு என்று நினைத்தால் நீ உன் வழியிற் செல்; நான் என் வழியிற் செல்கிறேன். என்ன சொல்கிருய்?" என்று சிறிது மிடுக்குடன் கேட்டான்.

" என்னை மருட்டி உங்கள் வழியில் இழுக்கப் பார்க்கிறீர்கள். அப்படித்தானே ?"

" இல்லை, நட்பு முறையில் உன்னிடம் நடந்து கொள்ள எண்ணுகிறேன்."

" சரி. உங்கள் ஏற்பாடு என்னவென்றுதான் பார்க்கிறேன். வாருங்கள் போகலாம்."

உடனே எல்லோரும் புறப்பட்டனர். பெரிய நாயகி வருத்தத்துடன் விடைபெற்றுச் சென்றாள். மற்ற மூவரும் அமபலவாணரின் இருப்பிடத்தை யடைந்தனர். புதிய மனிதனைக் கண்டதும் வியப்புடன் பார்த்த அம்பலவாணர், " இவனை எங்கேயோ பார்த்ததுபோல் நினைவிருக்கிறதே !" என்றார்.

" பார்த்தாயா, உன் முகம் மறக்க முடியாதது என்று சொன்னேனல்லவா ?" என நாகப்பனிடம் கூறிய மணவாளன், அம்பலவாணரை நோக்கி, " இவன் பெரியநாயகியின் தம்பி, நாகப்பன் ; மணி புரியில் நடந்த மதிவாணன் வழக்கில் சாட்சியாய் இருந்தவன். அது போகட்டும். மதிவாணன் மறு படியும் கைது செய்யப்பட்டிருக்கிறான். உங்களுக்குத் தெரியுமா ?" என்றான்.

" என்ன ! என்ன !! மதிவாணனா ?" என்று பதறி விட்டார், அம்பலவாணர்.

" ஆமாம். நாகப்பன் உணவு விடுதியில் பேசிக் கொண்டிருக்கும் பொழுதுதான் இச் செய்தியை நான் அறிந்தேன். நாளையதினமே விசாரணையாம்" என்று கூறிவிட்டு, நாகப்பன் பக்கம் திரும்பிப் பார்த்

தான், மணவாளன். அவன் 'அது உண்மை தான்' என்று கூறும் பாவனையில் தலையை அசைத்தான். அம்பலவாணர் திகைத்துப்போய் இருவரையும் பார்த்துக் கொண்டு பேசாதிருந்தார்.

சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையிலிருந்த மணவாளன் அம்பலவாணர் பக்கம் திரும்பி, "நாளைய தினம் விசாரணையில் டாக்டரின் செல்வாக்கு மதிவாணனுக்கு நலம் செய்யுமென்று நினைக்கிறேன். ஆனால், எனக்கு முழு நம்பிக்கையில்லை. ஏனென்றால், அவனைக் கைது செய்யாமல் தடுக்க இன்று அவரால் முடியவில்லை யல்லவா?" என்றான்.

"உண்மைதான்" என்றார் அம்பலவாணர்.

"இது மிகவும் நெருக்கடியான நிலை. எதையும் பொருட்படுத்தாமல் முயற்சி செய்யவேண்டும். டாக்டர் தம் வழியில் முயலட்டும். நான் என் வழியில் முயலப் போகிறேன். என் முயற்சிக்குத் தகுந்த கருவியாய் இருப்பவன் ஒரு நண்பன். அவனுக்குச் சிறைச்சாலையில் காவல் வேலை. அந்த நண்பனின் பெயர் நாகப்பன்!"

"அவன் உங்களுக்கு உதவாவிட்டால்....?"

"உதவும்படி செய்வேன், நாகப்பா! நான் எத்தகைய முரடன் என்பது உனக்குத் தெரியாது; அம்பலவாணர் அறிவார். நீ, மணிபுரியில் உள்ள மருதநாட்டு அரசாங்கத்தின் பகைவரான ஒரு அதிகாரிக்குக் கையாளாய் இருந்து கொண்டு இங்கிருந்து இரகசியமாகச் செய்திகளை யனுப்புகிறாய். இது

எனக்குத் தெரியும். இன்னும் இங்குள்ள உன் அதிகாரிகளிடம் நீ பொய்ப் பெயரைச் சொல்லியிருக்கிருய். இவற்றை நீ மறுக்க முடியுமா? முடியாது. உனக்குத் தீங்கு செய்ய நான் நினைவிக்கவில்லை. ஆனால், நல்ல முறையில் என் ஏற்பாட்டுக்கு நீ இசையா விட்டால், இங்குள்ள அதிகாரிகளிடம் உன்னைப்பற்றித் தெரிவிக்கச் சிறிதும் தயங்கமாட்டேன்."

நாகப்பனின் உடம்பு நடுங்கியது. அவன் மணிபுரியில் பிழைக்க வழியின்றி இங்கு வந்தான். முதலில் பழைய அரசாங்கத்தில் இரகசிய ஒற்றனாய் இருந்தான். வளவனின் தேநீர்க் கடையில்கூட ஒருமுறை உளவறியச் சென்றிருக்கிருனல்லவா? அல்லியின் பின்னலில் தன் பெயர் பதியப்பட்டிருப்பது அவனுக்குத்தெரியும். மணவாளன் கூறுவதுபோல் செய்தால் நாகப்பன் துண்டு துண்டாக வெட்டப்பட்டு மடிவான் என்பது உறுதி. இதை எண்ணியபோது நாகப்பனின் முகம் வெளுத்தது. அவன் மெதுவாக, "என்னல் என்ன உதவி செய்யமுடியும்?" என்றான், கெஞ்சும் குரலில்.

"பெரிய உதவி ஒன்றுமில்லை. நீ சிறைச்சாலையில் காவல்வேலை செய்வது உண்டல்லவா?"

"சில வேளைகளில் உண்டு.'

" நீ விரும்பினல் அங்கே காவலாளாய் இருக்கலாமல்லவா?"

'என் விருப்பம்போல் உள்ள போய் வரலாம்."

" அதுபோதும். இனி நாம் இருவரும் தனியே போய்ப் பேசி நம் ஏற்பாட்டைத் திட்டம் செய்து கொள்வோம்."

மணவாளன் நாகப்பனை அழைத்துக்கொண்டு அடுத்த அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான். கொஞ்ச நேரங்கழித்து இருவரும் வெளியே வந்தனர். வந்ததும் மணவாளன், "நாகப்பா! நமது ஏற்பாடு முடிந்துவிட்டது. இனி நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை. போய்வா" என்று கூறி அவனை அனுப்பிவிட்டு அம்பலவாணர் அருகில் வந்து அமர்ந்தான்.

ஒன்றும் விளங்காமல் மணவாளனையே பார்த்துக்கொண்டிருந்த அம்பலவாணர், "என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?" என்று ஆவலுடன் கேட்டார்.

"ஒன்றும் முடியாமற் போகுமானால், இறுதியாக மதிவாணனை ஒருமுறை நேரில் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறேன்; அவ்வளவுதான்" என்று தலை குனிந்த வண்ணம் கூறினான் மணவாளன்.

அதைக் கேட்டு ஏமாற்றமடைந்த அம்பலவாணர், சோர்வடைந்து ஆசனத்தில் சாய்ந்தார். அவர் முகத்தில் துயரக்குறி படர்ந்தது; கண்களில் நீர் அரும்பியது.

நிமிர்ந்து பார்த்த மணவாளன் நெஞ்சுருக, "ஐயா! என் தந்தையையொத்தவரான உங்கள் உள்ளத்தின் துயரை உணர்ந்து வருந்துகிறேன். உங்கள் நிலையே இவ்வாறானால், மலர் விழி இன்னும் எவ்வளவு துயரமடைவாள்! அதை எண்ணும்போதே என் மனம் தூண்டிற்புழுவினைப்போல் துடிதுடித்து

வேதனையடைகிறது. அதைப்பற்றிப் பேசுவதில் பயனில்லை. நான் செய்யக் கூடிய சிறு உதவியை அவளைப் பார்க்காமலே செய்ய எண்ணியிருக்கிறேன். நான் நாகப்பனைக் கண்டு பேசிய செய்தியை அவளிடம் தெரிவிக்கவேண்டாம். நீங்கள் இப்பொழுது அங்கே போகப் போகிறீர்கள் அல்லவா?'' என்ருன்.

''ஆமாம்'' என்ருர் அம்பலவாணர்.

''சரி. வாங்கள் போவோம். அவள் வீட்டு வாயிற்படி வரையில் நானும் உங்களுடன் வருகிறேன்'' என்று மணவாளன் எழுந்தான்.

இருவரும் புறப்பட்டு வெளியே சென்றனர். மலர்விழியின் வீட்டை நெருங்கியதும் அம்பலவாணரை அனுப்பிவிட்டு, மணவாளன் அங்கேயே சிறிது நேரம் நின்று அவ்வீட்டை உருக்கமாகப் பார்த்தான். பிறகு, ''சிறைச்சாலையில் இருந்த தன் கணவனைப் பார்ப்பதற்காக அவள் இந்த வழியில் எத்தனையோ முறை நடந்திருக்கிருள். நானும் இந்த வழியிலேயே செல்கிறேன்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே திரும்பி நடந்தான். அவன் சிறைச்சாலையின் எதிரில் போய் நின்றபொழுது, இரவு பத்து மணி அடித்தது.

அங்கே எளியவனுகத் தோன்றிய தொழிலாளி ஒருவன் யாரையோ எதிர்பார்ப்பவன்போல் நின்றுகொண்டிருந்தான். மணவாளன் அவனிடம் நெருங்கி ''வணக்கம், ஐயா! ஆட்சி எப்படி இருக்கிறது?'' என்று, புரட்சியாளரின் ஆட்சி நிலையை அறிய விரும்புவன்போல் வினவினுன்.

திரும்பிப்பார்த்து வியப்படைந்த அத்தொழிலாளி மணவாளனை முன்னே அறியாதவனாயினும் முகமலர்ந்து, "வணக்கம்! ஆட்சி நன்றாய் நடக்கிறது! இன்றைக்கு அறுபத்து மூன்றுபேர் பலி! நாளைக்கு இன்னும் அதிகமாகலாம்! கொலைஞர்களுக்குக் கை ஓய்ந்துவிட்டது, போங்கள்!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

அவனுடைய உள்ளக்களிப்பைக் கண்டு முகஞ் சுளித்த மணவாளன், அவனிடம் மேலும் பேசிக் கொண்டிருக்க விரும்பாமல் அவ்விடத்தை விட்டுத் திரும்பி விரைவாக நடந்தான்; நெடுநேரம் வரையில் பல தெருக்களைக் கடந்து சென்று ஒரு மருந்துக் கடையினுள் நுழைந்தான்; அங்கு ஏதோ ஒரு மருந்தை வாங்கிக் கொண்டு நகரின்புறம் நோக்கி மெதுவாக நடக்கலானான்.

கொலைக்கருவியே ஆட்சி செய்யும் அந்நகரத்தில் அச்சம் சிறிதுமின்றி நள்ளிரவில் நடந்து செல்லும் மணவாளனின் உள்ளத்தில், நாள்தோறும் பலியிடப் படுவோரின் துயரம் தோன்றி வருந்தச் செய்தது.

மனிதர்களின் ஒழுங்கற்ற வாழ்க்கையாலும் இழிநடத்தைகளாலும் உடம்பில் ஏற்படும் கோளாறுகள் நாளடைவில் பெருகி வளர்ந்து கொடிய நோயாகத் தோன்றி, செல்வர் என்றும் வறியவர் என்றும் வேறுபாடு கருதாமல் அவர்களைத் துன்புறுத்தி அழிக்கின்றன; அவர்களின் மரபில் பிறந்தவர்கள் குற்றமற்றவர்களாயினும் குருதியின் தொடர்பால் அவர்களையும் பற்றி அழிக்கின்றன. அவ்வாறே, நெடுங்

காலமாக எளியவர்களுக்கு இழைத்துவந்த செல்வர்களின் கொடுமைகள், மக்கள் உள்ளத்தில் ஆத்திரத்தை வளர்த்துவந்து உரிய காலத்தில் புரட்சிமூளச் செய்த பொழுது, செல்வர்களை மட்டுமின்றி, குற்றமற்ற அவர்களின் குடும்பத்தாரையும் அவர்கள் சார்பிலிருந்த எளியவர்களையும் இரக்கமின்றிக் கொன்று குவிக்கச் செய்தன. அதனால், இன்பபுரியில் நாள்தோறும் கொடுங்கோலரின் கொடுவாளுக்குப் பலர் பலியாகி வந்தனர். இக் கொடுமை முறையின்றி நடைபெறுவதை அறிந்திருந்ததாலேயே மணவாளனின் உள்ளம் அதையெண்ணி வருந்தியது.

மணவாளனின் பெற்றோர் பல ஆண்டுகளுக்கு முன்னரே மண்ணுலகினின்றும் மறைந்து விட்டனர். அப்பொழுது அவன் சிறுவனாயிருந்தான். தன் தந்தையின் உடம்பை அடக்கம் செய்யக் கொண்டு போன ஊர்வலத்தில் அவன் அழுதுகொண்டு சென்றிருக்கிறான். அவ்வூர்வலத்தில், முதியவர் ஒருவரால் உரத்துப் படிக்கப்பட்ட மறைநூலின் சொற்றொடர் ஒன்று, அவன் மனத்தில் நன்றாய்ப் பதிந்திருந்தது. அது இப்பொழுது துயரத்தில் வருந்தும் அவன் மனத்திற்கு ஆறுதல் அளிக்கும் அருமருந்தாய் நினைவில் தோன்றி ஒலித்தது :

"இறைவர் சொன்னார் : நானே வாழ்வு ; மறுவாழ்வு. என்னிடம் நம்பிக்கையுள்ளவன் இறந்தவனாலும் என்றும் இருந்தவனாகிறான்."

இச் சொற்றொடர் தன் காதுகளில் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்க நடந்து சென்ற மண

வாளன் ஒரு ஆற்றங்கரையின் அருகில் போய் அமர்ந்து சிந்தனையில் மூழ்கினான். பிறகு, அங்கேயே படுத்து உறங்கிவிட்டான்.

காலையில் அவன் கண்விழித்து எழுந்த பொழுது, கதிரவன் தோன்றி மேலே எழுந்துவிட்டான். நல்ல உறக்கத்தில் ஏற்பட்ட மனத்தெளிவுடன் எழுந்து நின்ற மணவாளன் கதிரவன் ஒளிபட்டுத் திகழும் ஆற்றில் பெருகியோடும் வெள்ளத்தைக் கண்டு களித்துச் சிறிது நேரம் அசைவற்றிருந்தான். அப்பொழுது திடீரென்று நீரில் தோன்றிய ஒரு சுழல், பல முறை சுழன்று முடிவில் மூழ்கி மறைந்ததைப் பார்த்து, அதனோடு தன் வாழ்க்கையை ஒப்பிட்டு எண்ணிப் பெருமூச் செறிந்தான். பிறகு, அந்த எண்ணத்துடனேயே அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

## 17. மருதவாணரின் வரலாறு

பகல் ஒன்பது மணிக்கே மதிவாணனின் விசாரணை தொடங்க ஏற்பாடாயிற்று. நீதிமன்றத்தில் கூட்டம் நிரம்பியிருந்தது. மருதவாணர், அம்பலவாணர், வளவன், அல்லி முதலிய எல்லோரும் அமர்ந்திருந்தனர். மலர்விழி தன் தந்தையின் அருகில் துயரமே வடிவாய் உட்கார்ந்திருந்தாள். மணவாளன் கூட்டத்தினரில் ஒருவனாய் ஒரு மூலையில் இருந்தான்.

மதிவாணன் கொண்டுவந்து நிறுத்தப் பட்டான். விசாரணை தொடங்கியது. வழக்கறிஞர் எழுந்து,

" இளங்கோவன் என்பவன் நேற்று விடுதலையாகி உடனே கைது செய்யப்பட்டவன் ; பரம்பரையாக எளியவர்களை வதைத்து வந்த பிரபுக்கள் மரபில் பிறந்தவன் ; ஆகையால் குடியரசு விதிப்படி உயிரை இழக்க வேண்டிய குற்றவாளி " என்றார்.

தலைவன், " இவன் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது இரகசியமாகவா ? வெளிப்படையாகவா ?" என்று கேட்டான்.

" வெளிப்படையாக மூவர் குற்றஞ்சாட்டி யுள்ளனர் : அவர்களில் இருவர் வளவன், அல்லி என் போர் " என்றார் வழக்கறிஞர்.

" இன்னொருவர் ?"

" டாக்டர் மருதவாணர் !"

இதைக் கேட்டதும் கூட்டத்தினர் ஆரவாரித் தனர். மருதவாணர் கைகால்கள் நடுங்க எழுந்து நின்று, " தலைவரே ! நான் குற்றஞ்சாட்டுகிறேன் என்பது பெரும் பொய். எதிரி என் மகளுடைய கண வன் என்பது எல்லோருக்கும் தெரியும். அவன் என் அன்புக் குரியவன். அவன்மீது குற்றஞ் சாட்டு கிறேன் என்று கூறும் பொய்யன் யார் !" என்று ஆத் திரத்துடன் கத்தினார்.

" மருதவாணரே ! சினம் வேண்டாம். குடியர சுக்கு நீங்கள் ஒரு தியாகம் செய்ய நேரிட்டால் அதைச் செய்துதான் ஆகவேண்டும்."

கூட்டத்தினர் மீண்டும் ஆரவாரம் செய்தனர். மருதவாணர் பேசாது உட்கார்ந்து விட்டார். உடனே

வளவன் விசாரிக்கப்பட்டான். அவன் பெருமிதமாக நின்று, " நான் நெடுங்காலத்திற்குமுன் டாக்டர் மருதவாணரிடம் ஊழியனுயிருந்தேன். அவர் என்னை அன்புடன் நடத்தினர். அதனல் நான் அவரிடம் அன்புடையவனய் வேலை செய்து வந்தேன். பிறகு அவர் நீண்ட காலம் சிறையிலிருந்து வாடும்படி நேரிட்டுவிட்டது. அவர் 'நூற்றைந்து, வடகோட்டை' என்ற தனியறையில் விசாரணையின்றி அடைபட்டிருந்தார் என்பது எனக்குத் தெரியும். அதை அவரே என்னிடம் தெரிவித்தார். ஆகையால், புரட்சி தோன்றிச் சிறைச்சாலையைக் கைப்பற்றிய போது நான் அந்த அறைக்குச் சென்று சோதனை செய்தேன். அங்கே இந்தக் கடிதம் கிடைத்தது. இது டாக்டர் மருதவாணர் எழுதியது. எனக்கு அவர் கையெழுத்து நன்ருய்த் தெரியும். இதைத் தலைவரிடம் கொடுக்கிறேன். இக் கடிதத்தைப் படித்தால் டாக்டர் எதிரியின் மீது குற்றஞ் சாட்டுகிருர் என்ற உண்மை விளங்கும் " என்று கூறியதும் கடிதத்தைத் தலைவரிடம் அளித்து விட்டுத் தன்னிடத்தில் அமர்ந்தான்.

கடிதத்தின் செய்தியை அறிய வேண்டுமென்னும் ஆவலில் கூட்டத்தினர் அமைதியாயிருந்தனர். தலைவன் எழுந்து கணீரென்ற குரலில் கடிதத்தைப் படித்தான் :

## டாக்டர் மருதவாணரின் கடிதம்

நாஞ்சில் நகரில் பிறந்து வாழ்ந்திருந்து, இன்பபுரியில் வந்து மருத்துவத் தொழில் செய்து வந்த மருதவாணனுகிய

நான், சிறைச்சாலையிலிருந்து 1767-ஆம் ஆண்டின் இறுதியில் சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தெரியாமல் இக்கடிதத்தை எழுதுகிறேன். ஒரு காலத்தில் இது பயன்படும் என்பதுதான் நான் இதை எழுதுவதன் நோக்கம்.

1757-ஆம் ஆண்டின் இறுதியில் (பத்து ஆண்டுகளுக்கு முன்) ஒரு நாள் முன்னிரவில் நான் ஆற்றோரமாக உலாவி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது என் முன்னே வந்த பெட்டி வண்டி என்னருகில் வந்ததும் நின்றது. வண்டியிலிருந்தவன் ''டாக்டர் மருதவாணர் நீங்கள் தானே?'' என்று கேட்டான். நான் ''ஆமாம்'' என்றதும் அவன் கீழே இறங்கி, ''உங்களை வீட்டில் பார்த்தேன்; காணவில்லை. இப்பக்கம் வந்திருப்பதாக அறிந்து இங்கு வந்தேன். தயவு செய்து வண்டியில் ஏறி என்னுடன் வருகிறீர்களா?'' என்று கேட்டான்.

அவன் அடக்கமாகக் கேட்டானாயினும் அவன் குரலில் அதிகாரத்தின் தன்மையிருந்தது. என்னையொத்த இளம் வயதினனாகிய அவன் பெருஞ்செல்வன் என்பதோடு கொடிய இயல்பினன் என்பதையும் அவனது முகத்தோற்றம் விளக்கியது. ஆகையால், நான் பணிவாக, ''நீங்கள் யார்? நான் எதற்காக வரவேண்டும்? தயவு செய்து சொல்லலாமா?'' என்று கேட்டேன்.

அவன் மிடுக்காக ''டாக்டர்! நான் செல்வாக்கு உள்ளவன். நீங்கள் நேரில் வந்து பார்த்தால் எதற்காக என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். சரி, வண்டியில் ஏறுகிறீர்களா?'' என்றான். அவன் குரல் கடுமையாயிருந்தது.

மந்திரத்தால் கட்டுப்பட்டவன்போல் நான் மறுமொழி பேசாமல் வண்டியில் ஏறினேன். வண்டி விரைந்து செல்வபுரத்தை நோக்கிச் சென்றது. அவ்வூரையடைந்ததும் ஒரு மாளிகையின் முன் நின்றது. இருவரும் இறங்கி உள்ளே செல்லும்பொழுது மேன்மாடியில் யாரோ ஒருவர் கூச்சலிட்டுக் கொண்டிருந்த குரலொலி கேட்டது. செல்வன்

என்னை மேன்மாடிக்கு அழைத்துக் கொண்டு போனுன். அங்கே மூளைக் கோளாறுல் கத்திக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியைக் கண்டேன். அந்நோயாளி ஓர் அழகிய இளம்பெண். தலைமயிர் அவிழ்ந்து கிடந்தது; கைகள் துணியால் பிணைக்கப்பட்டுக் கட்டிலில் கட்டப்பட்டிருந்தன.

நான் அப்பெண்ணின் நிலையை ஆராய்ந்து கொண்டிருந்தபொழுது இன்னொருவர் அங்கு வந்து நின்றார். இருவரும் உருவத்தில் ஒத்திருந்ததால் அவர்கள் அண்ணன் தம்பிகள் என்பதை ஊகித்துணர்ந்தேன். வண்டியில் வந்தவன் இளையவன் என்பதும் தெரிந்தது. மூத்தவர் முகத்தில் கடுமைக் குறி தோன்றவில்லை; கவலைக்குறிதான் இருந்தது. நான் அவரை நோக்கி, "இவள் எவ்வளவு காலமாய் இப்படியிருக்கிறாள் ?" என்று கேட்டேன்.

" நேற்று இரவு முதல் ' என்றார் அவர்.

நான் இளையவனை நோக்கி, " இப்பொழுது நான் என்ன செய்வது? இதைத் தெரிவித்திருந்தால் நான் மருந்துடன் வந்திருப்பேனே !" என்றேன். இளையவன் போய் ஒரு மருந்துப் பெட்டியைக் கொண்டு வந்து வைத்தான். அந்தப் பெண் கத்திக் கொண்டேயிருந்தாள். நான் பெட்டியிலிருந்த மருந்துகளை ஆராய்ந்து ஒரு மருந்தைக் கொடுத்து நோயாளியைக் குடிக்கச் செய்தேன். அவள் போடும் கூச்சல் ஓயவேயில்லை. அரை மணி நேரங் கழித்துக் கொஞ்சம் அமைதியாய் இருந்தாள்.

மூத்தவர் என்னை நோக்கி, " இன்னொரு நோயாளியைப் பார்க்க வேண்டும் ; வாருங்கள் போவோம் " என்றார். நான் திகைத்துப் போய்ப் பேசாமல் அவர் பின்னால் சென்றேன். இளையவன் விளக்கைப் பிடித்துக்கொண்டு முன்னால் போனுன். பின் பக்கமிருந்த படிகளின் வழியாய் இறங்கி மற்றொரு நோயாளி படுத்திருந்த அறையை அடைந்தோம். புழுதி படிந்திருந்த அவ்வறையில் அழுக்கு நிறைந்த ஒரு பாயின்மேல் பதினெட்டு வயதுள்ள ஒருவன் படுத்திருந்

தான். அவன் பற்களை நெறுநெறுவென்று கடித்துக்கொண்டு ஆத்திரத்துடன் தனக்குள் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். அவன் கையில் கூரிய வாளால் குத்தப்பட்ட காயம் இருந்தது. அதிலிருந்து ஒழுகிய இரத்தம் உடம்பெங்கும் படிந்திருந்தது.

* * *

[சிறைக் காவலர்கள் பார்த்து விடுவார்களோ' என்ற அச்சத்துடன் நான் இக்கடிதத்தை எழுத வேண்டியிருக்கிறது. ஆகையால் சுருக்கமாய் எழுதுகிறேன்.]

* * *

அந்தச் செல்வர்களில் மூத்தவர் பெயர் அருள் நாயகம் பிரபு. இளையவன் பெயர் செல்வநாயகம் பிரபு. இளையவன் அந்த இளம்பெண்ணின்மீது இழிவான இச்சை கொண்டு அதற்கு இடையூறுயிருந்த அவள் கணவனைத் துன்புறுத்திக் கொன்றுவிட்டு அவளைக் கொண்டுவரச் செய்திருக்கிறான். வலியவரால் எளியவர் அடையும் இன்னலை என்னென்று சொல்வது? அக்கயவனின் கொடுமையால் கணவனை இழந்து வருந்திய அவள், அவனால் கற்பையும் இழந்து, அறிவு திரிந்து பைத்தியம் போலானாள். இச்செய்தியை யறிந்த அவள் தம்பி கடுஞ்சினங் கொண்டு இளையவனைத் தாக்க வந்திருக்கிறான். அவனைக் கண்ட இளையவன் வாளால் வீழ்த்தி விட்டான். தன் கொடுஞ் செயல்கள் வெளியில் தெரியாதிருக்கும் பொருட்டே இளையவன் என்னை அழைத்துப் போய் நோயால் இறந்ததாகக் காட்ட நாடகம் நடித்திருக்கிறான்.

நான் அருகிலிருந்து மருத்துவம் செய்தும் பயன்படாமல் மறுநாள் இளம்பெண்ணும் அவள் தம்பியும் இறந்து விட்டார்கள். அதைக் குறித்து அவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இளையவன் என்னிடம் வந்து எனக்குப் பொன் நாணயங்களைக் கொடுத்தான். நான் அவற்றை வாங்க மறுத்து விட்டு என் இருப்பிடம் சேர்ந்தேன்.

பிறகு, நானறிந்த செய்திகளையெல்லாம் விவரமாக எழுதி அரசாங்க அமைச்சருக்கு அனுப்பினேன். அதனால், இறந்து விட்ட அந்த எளியவர்களுக்கு ஒரு பயனும் இல்லை யாயினும் மற்றவர்களுக்கேனும் அத்தகைய கொடுமை நேராமலிருக்க நம் கடமையைச் செய்தோம் என்று ஆறுதலடைந்தேன். ஆனால், அதுவே எனக்குக் கொடுமை இழைத்து விட்டது.

ஒரு நாள் இரவு பெட்டி வண்டியொன்று வந்து என் வீட்டினருகில் நின்றது. அப்பொழுது கருக்கொண்டிருந்த என் மனைவியுடன் நான் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந் தேன். உள்ளே வந்த பணியாள் ஒருவன், வண்டியிலுள்ள பிரபு என்னை அழைப்பதாகத் தெரிவித்தான். நான் எழுந்து வண்டியருகிற் சென்றேன். உடனே இருவர் என்மீது பாய்ந்து முகத்தில் துணியைப் போட்டு மூடி அமுக்கிக் கொண்டு கைகால்களைக் கட்டி வண்டிக்குள் போட்டனர். என்னால் கத்த முடியவில்லை. வண்டி புறப்பட்டு வேக மாய்ச் சென்றது. நகரத்தைக் கடந்ததும் முகத்தை மூடி யிருந்த துணியை எடுத்து விட்டனர். வண்டியில் செல்வ நாயகம் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தேன். அவன் கடுஞ் சினத்துடன், "இதுதானா நீ அமைச்சருக்கு எழுதிய கடிதம்? முட்டாளே! நான் யார் தெரியுமா? உன் கடிதம் என்னை என்ன செய்யும்? உன் கடிதம் அடையும் கதியைப் பார்!" என்று கூறிக் கொண்டே வண்டியின் விளக்கில் நீட்டி அக்கடிதத்தைக் கொளுத்தினான். பிறகு, அவன் தன் செல்வாக்கினால் விசாரணையின்றித் தனிச் சிறையில் கிடந்து நான் வாடும்படி செய்து விட்டான். அதன் பிறகு நான் அன்புக்குரிய என் மனைவியைப் பார்க்கவேயில்லை. அவள் இருக்கிறாளோ இறந்தாளோ தெரியாது. அவ ளுக்குப் பிறந்த குழந்தை என்னாயிற்றோ அதுவும் தெரியாது. அவர்களை எண்ணிக் கண்ணீர் வடித்துக்கொண்டு காலங் கழிக்கிறேன்.

குற்றமற்ற எனக்கு இந்தக் கொடுமையைச் செய்தவன் என்றேனும் ஒரு நாள் துன்புற்று மடிவான் என்பதில் தடை யில்லை. அவன் அழிய வேண்டும்; அவன் குடும்பத் தோன்றலாய் இளங்கோவன் என்னும் சிறுவன் ஒருவனே உள்ளான் என்று அறிகிறேன். அவனும் அழிய வேண்டும்; அவன் மரபினரும் ஒருவர் கூட எஞ்சாமல் அழியவேண்டு மென்று சபிக்கிறேன்.

இங்ஙனம்

மருதவாணன்

இக் கடிதத்தைப் படித்து முடித்ததும் கூட்டத்தினரிடையே ஆத்திரம் பொங்கிய பல குரலொலிகள் எழுந்தன. "டாக்டருக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறதாமே! எங்கே, இப்பொழுது அவர் அவனைக் காப்பாற்றட்டும்!" என்று மலர்விழி யின் பக்கம் திரும்பிக் கத்தினாள், அல்லி.

நடு நிலையாளர்கள் தங்கள் கருத்தை யறிவித்த பொழுது கூட்டத்தில் பெருமுழக்கம் எழுந்தது. நீதிபதிகள் "எளியவர்களை வதைத்து வந்த பிரபு குடும்பத்தினனாகிய இளங்கோவன் நாளையதினம் மாலைக்குள் மடிய வேண்டும்" என்று தீர்ப்பளித்தனர்.

## 18. இருளும் ஒளியும்

மரண தண்டனை விதிக்கப் பெற்ற மதிவாணன் மலைத்து ஒன்றுந் தோன்றாமல் மயங்கிய நிலையில் நின்றான். மலர்விழி அழுது கொண்டு ஓடி வந்து அவனைத் தழுவிக்கொண்டு கதறினாள். கன்னெஞ் சரையும் கரைந்துருகச் செய்யும் அக்காட்சியைக்கண்டு களிவெறி கொண்ட அக்கும்பல் கெக்கொலி கொட்டி நகைத்தது. பிறகு கூட்டம் கலைந்து சென்றது.

காவலர்கள் மதிவாணனை இழுத்துச் சென்றனர். 'மலர்விழி! வருந்தாதே! குழந்தைக்கு என் அன்பைத் தெரிவி! நான் போய் வருகிறேன்' என்று கூறிக்கொண்டே மதிவாணன் சென்றான். கணவன் செல்வதைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த மலர்விழி, அவன் மறைந்ததும், அருகில் நின்றுகொண் டிருந்த அம்பலவாணரின் மேல் சாய்ந்து நினைவிழந்து கீழே விழுந்தாள். ஒதுங்கி நின்றுகொண்டிருந்த மணவாளன் அங்கே விரைந்து வந்து மலர்விழியைத் தூக்கிக்கொண்டு போய் வெளியே நின்று கொண்டிருந்த வண்டியில் படுக்கவைத்தான். அம்பலவாணரும் மருதவாணரும் வந்து பேசாது வண்டியில் ஏறியமர்ந்தனர். மண வாளன் முன் பக்கத்தில் ஏறியதும் வண்டி புறப்பட்டது.

வீட்டை யடைந்ததும் மணவாளன் மீண்டும் மலர்விழியைத் தூக்கிக்கொண்டு உள்ளே போய் அறையிலுள்ள மஞ்சத்தில் மெல்லப் படுக்கவைத் தான். அவளைப் பார்த்ததும் பெரிய நாயகியும் எழிலியும் அழத்தொடங்கினார்கள். மணவாளன் அவர்களை வெளியே அழைத்துக் கொண்டு வந்து 'சத்தம் போடவேண்டாம்' என்றான்.

அறையின் வெளியே அம்பலவாணரும் மருத வாணரும் நின்றுகொண் டிருந்தனர். மணவாளன் அங்கு வந்ததும், "டாக்டர்! காலம் தாழ்த்தக் கூடாது. உடனே போங்கள்! நீங்கள் முயன்றால் முடிவை மாற்றலாம்" என்று தூண்டினான்.

" அதைத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். இதோ போகிறேன் " என்று கூறிக்கொண்டே மருதவாணர் விரைந்து வெளியே சென்றார்.

அவர் சென்றதும் அம்பலவாணர். " எனக்கு நம்பிக்கையில்லை " என்றார் மெலிந்த குரலில்.

" எனக்கும் தான். அவர் கவலையில் ஆழ்ந்து விடாமல் இருப்பதற்காகவே இதைச் சொன்னேன். நீங்களும் கவலைப்படாமல் இருங்கள். என் ஏற்பாடு நிறைவேறுவது உங்கள் கையில் தான் இருக்கிறது. நான் இரவு ஒன்பது மணிக்கு வந்து உங்களைப் பாங்கில் பார்க்கிறேன். அப்பொழுது நான் சில செய்திகளை உங்களிடம் தெரிவிக்கிறேன் " என்று கூறி விட்டு, மணவாளன் வெளியே போய் விட்டான்.

அவன் பித்தனைப் போலத் தெருக்களின் வழியே சென்று வளவனின் தேநீர்க் கடைக்குள் நுழைந் தான். அங்குப் பலர் உணவு அருந்திய வண்ணம் மகிழ்ச்சியுடன் பெருங்குரலில் பேசிக் கொண்டிருந் தனர். மணவாளனும் அக்கும்பலில் ஒருவனாய் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டே அவர்கள் பேசுவதைக் கூர்ந்து கேட்டான்.

இரவு ஒன்பது மணிக்கு அம்பலவாணரின் அறையில் நுழைந்த மணவாளன், அங்கே நினைவிழந்த நிலையில் தன் சட்டையைக் கழற்றிக் கீழே எறிந்து விட்டு தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு, " எங்கே என் கருவிகள் ? அந்தச் செருப்பை நான் தைத்து முடிக்க வேண்டும் " என்று

சிறு குழந்தைபோல் கத்திக் கொண்டிருந்த மருத வாணரைக் கண்டு திகைத்து நின்ருன். அவர் நிலையி லிருந்து அவரது முயற்சி வெற்றி பெறவில்லை என் பதை அவன் உணர்ந்து கொண்டான். அவருக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்த அம்பலவாணர் அவ ரைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய் மஞ்சத்தில் படுக்க வைத்தார். சோர்வு மிகுதியால் களைத்திருந்த மருதவாணர் படுக்கையில் கண்களை மூடிக்கொண்டு அசைவற்றிருந்தார்.

கீழே கிடந்த மருதவாணரின் சட்டையை மண வாளன் எடுத்தான். அதன் பையிலிருந்து ஒரு கடிதம் விழுந்தது. அதை எடுத்துப் பார்த்ததும், " ஆ! நல்லதாயிற்று! டாக்டர் சிறந்த அறிவாளி! திட்டத்தோடு செயல் செய்திருக்கிருர்!" என்று அக மகிழ்வுடன் கூறினன் அவன்.

" என்ன செய்திருக்கிருர்?" என்று அம்பல வாணர் ஆவலுடன் கேட்டார்.

" இதோ பாருங்கள்! இது இந்நகரத்தை விட்டு வெளியேறுவதற்குரிய இசைவுச் சீட்டு. இதைக் கொண்டு டாக்டர், அவருடை மகள், எழிலி ஆகியோர் வெளியேறலாம். விரைவில் இந் நகரத்தை விட்டுப் போய்விட வேண்டு மென்பதற்காக இதை நேற்றே வாங்கி யிருக்கிருர் மருதவாணர். இது என் ஏற்பாடு வெற்றி பெறுவதற்குச் சிறந்த உதவி யாயிற்று."

" என்ன ஏற்பாடு செய்திருக்கிருய்?"

"அதைக் கேட்க வேண்டாம். நான் சொல்வதை மட்டும் கவனமாய்க் கேளுங்கள். உங்கள் வேலையெல்லாம் முடிந்து விட்டதாகவும் அதனால் நான்கு நாட்களுக்கு முன்பே இசைவுச் சீட்டு வாங்கி வைத்திருப்பதாகவும் சொன்னீர்கள் அல்லவா ?"

"ஆமாம்"

"இதோ பாருங்கள் ! இது என் இசைவுச் சீட்டு. இதையும் டாக்டருடைய சீட்டையும் பத்திரமாக வைத்திருங்கள். நாளையே நீங்கள் புறப்பட்டுவிட வேண்டும், மலர்விழி முதலியோர் இங்கே இருக்கக் கூடாது."

"அவர்களுக்குக் கூடவா ஆபத்து வரும் ?"

"ஆமாம். நான் வளவனின் தேநீர்க்கடைக்குப் போயிருந்தேன். அவர்கள் மலர்விழி, எழிலி ஆகியோரையும் பிடித்துத் தண்டனையடையச் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மருதவாணர்கூட அதில் தப்பமாட்டார் என்று நினைக்கிறேன். ஒற்றன் நாகப்பனைக் கண்டு பேசியதில் அது உண்மை என்று தெரிந்தது."

"என்ன கொடுமை !"

"நீங்கள் அஞ்ச வேண்டாம். அக்கொடியவர்களின் எண்ணம் செயலில் வருவதற்கு இன்னும் இரண்டுமூன்று நாட்களுக்குமேல் ஆகும். அதற்குள் நீங்கள் எல்லாவற்றையும் காப்பாற்றிவிட முடியும். நாளைய தினம் காலையிலேயே ஏற்பாடு செய்து வண்டியைத் தயாராய் வைத்திருங்கள் ! பிற்பகல் இரண்டு மணிக்குப் புறப்பட வேண்டும்."

" நான் தயாராய் இருப்பேன் "

" இந்த இரவே மலர்விழியிடம் புதிய ஆபத்தைப் பற்றித் தெரிவித்து மருதவாணர்,எழிலி ஆகியோரின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக உடனே புறப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுங்கள். இது அவள் கணவனுடைய இறுதி விருப்பம் என்றும் தெரிவியுங்கள். பெரியநாயகி, பொன்னையன் இருவரையும் பற்றிக் கவலையில்லை. அவர்களை அடுத்த நாள் வர ஏற்பாடு செய்து விடுங்கள். அதுதான் நல்லது. நான் சொல்லியவற்றில் ஒன்றும் தவறாமல் செய்து முடித்ததும், டாக்டர், மலர்விழி, எழிலி ஆகியோரை வண்டியில் ஏற்றிவிட்டு நீங்களும் ஏறிக் கொள்ளுங்கள். சரியாகப் பிற்பகல் இரண்டு மணிக்கு என்பதை மறந்துவிட வேண்டாம். நான் வந்து ஏறியதும் உடனே வண்டி புறப்பட்டுவிட வேண்டும்."

" நீ வருவதற்குச் சிறிது நேரமானாலும் காத்திருக்க வேண்டும் அல்லவா ?"

" நேரமாகாது. என் பயண இசைவுச் சீட்டு உங்களிடமிருக்கிறது. ஆகையால், வண்டியில் எனக்குரிய இடம் இருக்கட்டும். அந்த இடம் நிரம்பியதும், உடனே வண்டி புறப்பட்டுப் பிறர் பார்த்து ஐயுறுவதற்கு இடமின்றி விரைந்து செல்லவேண்டும். இந்த ஏற்பாட்டைச் சிறிதும் மாற்றாமல் நிறைவேற்றுவதாக உறுதிமொழி தாருங்கள் !"

" உறுதியாக நிறைவேற்றுவேன்."

" ஏதேனும் மாறுதலோ, காலத் தாழ்வோ செய்தால் எல்லாரும் இந்நகரில் அழிய வேண்டியது

தான். இதை நன்ருய் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்."

"நீ கூறியவற்றை நினைவில் பதிய வைத்துக் கொண்டு என் கடமையை அணுவும் தவருமல் செய்து முடிப்பேன்."

"நானும் என் கடமையைத் தவருமல் செய்து முடிப்பேன். போய் வருகிறேன்."

இவ்வாறு சொல்லிவிட்டு எழுந்த மணவாளன், மஞ்சத்திலிருந்த மருதவாணரைப் பார்த்தான். அவர் எழுந்து உட்கார்ந்து பித்தர் போல் ஏதோதோ பிதற்றிக்கொண்டிருந்தார். உடனே அம்பலவாணரின் உதவியுடன் அவரைத் தூக்கிக் கொண்டுபோய் அவர் வீட்டில் சேர்த்து விட்டு வெளியே வந்தான். அவன் கண்கள் தாமாகவே மேன்மாடியில் மலர்விழியிருந்த அறையை ஆவலுடன் பார்த்தன. பலகணி வழியே வெளிச்சம் வீசிக் கொண்டிருந்தது. அறையின் உட்புறச் சுவரில் மலர்விழியின் நிழல் படிந்திருப்பதுபோல், அன்பொளி வீசும் அவன் கண்களுக்குத் தோன்றியது. "அன்பே! போய்வருகிறேன். நீ மகிழ்வுடன் வாழ்க!" என்று அவன் வாய் மெதுவாக முணுமுணுத்தது. உடனே உள்ளத்தில் பொங்கிய உவகையுடன் அவன் அவ்விடத்தினின்றும் புறப்பட்டான். மலர்விழியின் உள்ளத்தில் துன்ப இருள் சூழ்ந்திருந்தது. ஆனல் மணவாளனின் உள்ளத்திலோ இன்ப ஒளி வீசுவதாக அப்பொழுது அவன் முகம் புலப்படுத்தியது.

## 19. அன்பின் அருஞ்செயல்

மறுநாள் பொழுது விடிந்தது. அன்றைய தினம் பிற்பகல் மூன்று மணிக்கு மதிவாணனின் மரண தண்டனையை நிறைவேற்றச் சிறையதிகாரிகள் நேரங் குறிப்பிட்டிருந்தனர். ஆகவே அந் நேரத்தில் அவன் வாழ்நாள் முடிவடைந்துவிடும். அதைப் பற்றிய கவலை சிறிதுமின்றி, அவன் மலர் விழியையும் எழிலியையும் பற்றியே எண்ணி வருந்திக்கொண்டிருந்தான். அவ் வருத்தத்தோடு தன் மனைவிக்கும், அவள் தந்தைக்கும் இரு கடிதங்கள் எழுதி முடித்தான். நேரம் செல்லச் செல்ல வருந்துவதை விட்டுத் தன் மனைவியும் குழந்தையும் நலமாய் வாழவேண்டுமென்று இறைவனை யெண்ணி வேண்டத் தொடங்கினன். இடையிடையே மருதவாணரின் பெருந் தன்மையை யெண்ணி மனத்துள் பாராட்டினன்; அம்பலவாணரின் பேரன்பை நினைத்துப் போற்றினன். ஆனல் மணவாளனைப் பற்றிய எண்ணமே அவன் மனத்தில் எழவில்லை.

பகல் பன்னிரண்டு மணி ஆயிற்று. மதிவாணன் தன் முடிவு நேரத்தை எதிர்பார்த்து அறைக்குள் உலாவிக் கொண்டிருந்தான். நேரம் மெதுவாய்ச் செல்வதுபோல் அவனுக்குத் தோன்றியது. மூன்று மணிக்குத்தான் அவன் வாழ்வு முடிவடையும் இடத்திற்குப் போகவேண்டும். ஆனல், சிறையிலிருந்த மணி ஒன்று அடித்ததும் அறையின் கதவு திறக்கப் படும் ஓசையைக் கேட்டு வியப்புடன் பார்த்தான். கதவு திறந்ததும் மணவாளன் புன்முறுவலுடன்

உள்ளே நுழைந்து "இப்பொழுது நீ என்னை எதிர் பார்த்திருக்கமாட்டாய். அது எனக்குத் தெரியும், இங்குள்ள காவலாள் ஒருவனை என் விருப்பம்போல் செய்யும்படி தூண்டும் ஆற்றல் எனக்குக் கிடைத்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு இங்கு வந்தேன். நான் மலர்விழியிடமிருந்து ஒரு வேண்டுகோள் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

" என்ன வேண்டுகோள்?"

"ஏன் என்று கேட்காமல் நான் சொல்வதைச் செய்யவேண்டும். உன் உடைகளைக் களைந்துவிட்டு என் உடைகளை அணிந்துக்கொள்! உம்! இதோ என் நீல நிறச் சட்டையைப் போட்டுக்கொள்! உன் வெண்ணிறச் சட்டையைக் கழற்றிக் கொடு! விரை வில்!"

மதிவாணன் அவ்வாறு செய்யவில்லை. இருகை களையும் கட்டிக்கொண்டு, "நண்பா! உன் அன்புக்கு நன்றி. இங்கிருந்து தப்பமுடியாது. வீணில் நீயும் என்னுடன் மடிவாய்!" என்றான், அமைதியாக.

"உன்னை நான் தப்பியோடச் சொல்லவில்லையே! நாற்காலியில் உட்கார்! அதோ மேசையிலிருக்கும் காகிதத்தையும் எழுது கோலையும் எடுத்துக்கொள். நான் சொல்வதை எழுது! உம்!"

மதிவாணன் மறுமொழி பேசாமல் உட்கார்ந் தான்; மணவாளன் சொல்லச் சொல்ல எழுதினான்:

"ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் நாம் உரையாடிக் கொண்டிருந்தது மறக்க முடியாமல் உன் நினைவிலிருக்கும்

அந்த மொழிகளை மெய்ப்பிப்பதற்குரிய வாய்ப்புக் கிட்டிய தற்கு மகிழ்கிறேன். அதைக் குறித்து நீ வருந்தக் கூடாது; மகிழ்ச்சியே கொள்ளவேண்டும்.''

இறுதி வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டி ருக்கும் போதே, மணவாளன் தன் இடையிலிருந்த மயக்க மருந்தை மெதுவாக எடுத்து மதிவாணன் அறியாத வகையில் அவன் மூக்கருகில் வைத்தான். மறுநொடியில் அவன் மயங்கி நாற்காலியில் சாய்ந்து விட்டான். உடனே மணவாளன் மிகவிரைவில் மதி வாணனின் உடைகளைக் களைந்து தான் அணிந்து கொண்டு, தன் உடைகளை அவன் உடம்பில் அணி வித்தான். தலைமயிரையும் அவ்வாறே மாறிக் காணும் படி ஒழுங்கு செய்தான். கடிதத்தை மடித்து மதி வாணன் உடம்பிலிருந்த சட்டைப் பையில் திணித்து விட்டு மெதுவாக, "உள்ளே வரலாம்!'' என்றான். உடனே ஒற்றன் நாகப்பன் உள்ளே நுழைந்தான்.

"நாகப்பா! நான் சொன்னபடி நிறைவேற்றி விடு. அதன் பிறகு நீ என்னைக் கண்டு அஞ்சவேண் டியதில்லை. உன் உதவிக்கு ஒரு ஆளை அழைத்துக் கொண்டு வந்து என்னைக் கொண்டுபோய் வண்டியில் ஏற்றி விடு!''

"உங்களையா?''

"முட்டாள்! நான் சொல்வது விளங்கவில்லையா? நானும் இவனும் வடிவம் மாறியிருக்கிறோம். தெரி கிறதா? நான் உள்ளே வந்ததும் என் நண்பனைக் கண்டு அவன் மடியப் போகிறானே என்பதை யெண்ணி மயங்கி விழுந்துவிட்டேன். மயங்கி

யிருக்கும் என்னை நீ தூக்கிக்கொண்டு போய் வெளியே விடுகிறாய். இதுபோல் இங்கே நடப்பதில்லையா? என்ன, நான் சொல்வது தெரிகிறதா?"

"தெரிகிறது!"

"சரி. விரைவில் இவனைக் கொண்டுபோய் வண்டியில் ஏற்றிவிடு! மயக்கம் தெளிய மருந்து கொடுக்க வேண்டாமென்று கூறு! போ!"

நாகப்பன் வெளியே சென்று நொடிப்பொழுதில் வேறொரு ஆளுடன் வந்து மதிவாணனைத் தூக்கிக் கொண்டு போனான். கதவு முன்போல் சாத்தப் பட்டது. மணவாளன் அறையினுள் தனியே இருந்தான். அப்பொழுது அவன், தன் வாழ்நாளில் என்றும் அடைந்திராத ஒரு மன நிறைவு ஏற்பட்டு, உள்ளத்தில் அமைதி நிலவுவதையுணர்ந்து இன்ப வுணர்ச்சியை எய்தினான். அதனால் அவன் உடல் பூரித்தது.

மூன்று மணி அடிக்கும் நேரம் நெருங்கியது. மணவாளன் தயாராக நின்றுகொண்டிருந்தான். கதவு திறக்கப்பட்டது. இருகாவலர்களுடன் வந்த சிறையதிகாரி, "இளங்கோவன்! புறப்படு" என்றார். மணவாளன் அறையை விட்டு வெளியேறி அவர் பின்னால் சென்றான், துப்பாக்கியை ஏந்திய காவலர்கள் பின் தொடர்ந்தார்கள்.

அதே நேரத்தில் அச்சத்துடனிருக்கும் அம்பலவாணர், அறிவு கலங்கியிருக்கும் மருதவாணர், துயரத்துடனிருக்கும் மலர்விழி, ஏக்கத்துடனிருக்கும்

எழிலி, மணவாளன் என்று அவர்கள் எண்ணும்படி மயங்கிய நிலையிலிருக்கும் மதிவாணன் ஆகியோர் ஏறிச்செல்லும் வண்டி, சோதனைச் சாவடிகளையெல்லாம் கடந்து கொற்கைத் துறைமுகத்தை நெருங்கிச் சென்று கொண்டிருந்தது. இனி, அவர்கள் படகு ஏறிச்சென்று மணிபுரியை யடைவதற்கு எந்தவிதமான தடையுமில்லை. அதன்பிறகு அம்பலவாணரின் அச்சம் நீங்கிவிடும்; மருதவாணரின் கலக்கம் போய் விடும்; மலர்விழியின் துயரம் மாறிவிடும்; எழிலியின் ஏக்கம் ஏகி விடும்; மதிவாணனின் மயக்கம் தெளிந்து விடும். அனைவர் வாழ்வும் மலர்ந்துவிடும். ஆனால் மணவாளனின் வாழ்வு முடிந்துவிடும்!

சிறையதிகாரி மணவாளனை அழைத்துக் கொண்டுபோய் ஓரிடத்தில் நிறுத்தினர். அங்கே அவனைப் போலவே வாழ்வின் முடிவை எதிர்நோக்கி வந்திருந்த பலர் நின்று கொண்டிருந்தார்கள். 'குடியரசு' என்னும் பெயரால் கொலை வெறியர்கள் நடத்தும் கொடுங்கோல் ஆட்சியில் அன்றையதினம் குருதி சிந்த வேண்டியவர்கள் ஐம்பத்திரண்டு பேர். அவர்களில் மணவாளன் இருபத்து மூன்ருவது ஆளாக இருந்தான்.

கைதிகள் கொல்லப்படுவதைக் கண்டு களிப்பதற்காக வெறிபிடித்த கும்பல் வெளியே பெருந்திரளாய் இருந்தது. கைதிகள் ஒவ்வொருவராக முடிவிடத்தை நோக்கிச் செல்லும் பொழுதெல்லாம் அக் கூட்டத்தினர் அவர்களைப் பார்த்து ஒன்று, இரண்டு என்று எண்ணி ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள். இரு

பத்துமூன்று என்று எண்ணி, அவர்கள் ஆரவாரம் செய்து களிப்படைந்தபொழுது, அந்த முகத்தில் நிலவிய அமைதியான தோற்றப் பொலிவையும் மலர்ச்சியையும் கண்டு வியப்பும் அடைந்தார்கள். ஆம், மணவாளன் சிறிதும் கலக்கமின்றித் தன் முடிவை முழுமனத்தோடு ஏற்கப் பலிமேடையில் ஏறி நின்ருன். மறுநொடியில் அவனுடைய மண்ணுலக வாழ்வு மறைந்தது.

பலிமேடையில் நின்ற நொடிப்பொழுதில் மண வாளனின் இதயத்தில் எழுந்த ஒலியை எவரேனும் செவிகொடுத்துக் கேட்டிருந்தால், பின்வரும் மொழிகள் அவர் உள்ளத்தில் உணர்ச்சியுடன் ஒலித் திருக்கும்.

"நான் யாருக்காக உயிர் விடுகிறேனே, அவள் வாழ்வு மலர்ந்து எழிலுடன் விளங்குவதைக் காண்கி றேன்! சில ஆண்டுகளில் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து தவழ்ந்து விளையாடுவதையும், அக் குழந்தைக்கு என் பெயரிட்டு அன்புடன் அழைத்து என்னைப் போற்றுவதையும் காண்கிறேன்! அக் குழந்தை பெரியவனை பிறகு அவனிடம் என் கதையை ஆர்வத்தோடு சொல்லும் அவளுடைய கண்ணீர் மல்கும் கண்களைக் காண்கிறேன்! அந்த முகம் எவ்வளவு எழிலுடன் திகழ்கிறது!"

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.
Book Presented by:
Dr. T. P. MEENAKSHISUNDARAN,
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY,
MADURAI.
48825